
# பாடுகள்

சிறுகதைகள்



கே. ஆர். டேவிட்

# பாடுகள்

## சிறுகதைகள்

## கே. ஆர். டேவிட்

விலை 200/-

கு. வி. அச்சக வெளியீடு

கு. வி. அச்சகம்
58, கிறீன் லேன், கொழும்பு - 13.
தொலைபேசி: 011-2330723, 011-4877984

# சமர்ப்பணம்



## திருமதி. அருளம்மா இராயப்பு

எனக்குள் வாழும்
எனது அம்மாவுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

---


## வெளியீட்டு விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ' பாடுகள் ' |
| வகை | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | திரு. கே. ஆர். டேவிட் |
| பதிப்பு | : | கு.வி. அச்சகம் |
| வெளியீடு | : | கு.வி. அச்சகம்<br>58, கிறீன் லேன், கொழும்பு - 13. |
| பதிப்புரிமை | : | திரு. கே. ஆர். டேவிட் |
| முதலாம் பதிப்பு | : | 2012 செப்டெம்பர் |
| தாள் | : | 21 cm X 14.85 cm |
| பக்கங்கள் | : | 148 |
| விலை | : | 200/- |

# அணிந்துரை

"அம்மாவின்ரை கண்ணுக்குள்ளை இருக்கிற கண்ணீர் எப்ப சேர் முடியும்." கேசவன் கேட்ட கேள்வி.
"ஏன் கேசவன் அப்பிடிக் கேக்கிறீங்க"
"கண்ணீர் முடிஞ்சு போச்சுதெண்டால் அம்மா அழமாட்டா"
"எங்களுடைய வறுமை தீர வழியில்லையா" என்பதைத்தான் அவன் கேட்கத் தெரியாமல் கேட்கிறான்.

நீதியான நாளையை அவாவி நிற்கும் கே.ஆர்.டேவிட்டின் படைப்பாற்றல் வீச்சினை வெளிப்படுத்தும் சிறுகதை அதேவேளையில், ஆழ்மனம்வரை சென்று தொடுகின்ற ஆற்றல் மிக்க அவரின் பன்னிரண்டு படைப்புகளின் தொகுப்பாக 'பாடுகள்' நூல்வடிவம் காண்கின்றமை மனதுக்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது.

'யாவும் கற்பனை' கதைகளின் காலம் முடிந்தது எனும் எங்கள் இலக்கிய நினைப்பைப் பொய்யாக்கி யாவுமே கற்பனை என்றவாறு வியாபகமாகும் வெகுஜனப் படைப்புகளிலிருந்து மக்களை விடுவிக்கும் ஊடக அறிவு மேம்பாட்டுக்கான மிகச் சிறந்த உரைகல்லாக இத்தொகுப்பின் கதைகள் சமூக முக்கியத்துவம் பெறுகின்றன.

கே.ஆர்.டேவிட்டின் படைப்பாற்றல் நாடறிந்தது. அறுபதுகளில் சுதந்திரன் பத்திரிகையில் 'புகலிடம்' என்ற சிறுகதையுடன் தொடங்கிய அவர் எழுத்துலக பயணம் நல்ல பல படைப்புகளைத் தமிழுக்காக்கியுள்ளது.

'வரலாறு அவளை தோற்றுவிட்டது' என்ற நாவல்தான் இவரது முதல்நூல்; இதனைத் தொடர்ந்து சில குறுநாவல்களும் சிறுகதைத் தொகுப்பு ஒன்றும் வெளியாகியுள்ளன. ஒரு நீண்ட இடைவெளிக்குப்பின் புதிய இந்நூலின் வரவு.

1978 முதல் 2002 வரை ஈழத்துச் சஞ்சிகைகளிலும், நாளித்ழ்களிலும் வெளியான சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பானது இக்கால வெளியின் சமூகப் பிரதிபலிப்புக்களாக விளங்குகின்றன. அதேவேளை இக்கால எல்லைக்கும் அப்பாலாய்

விளங்குகின்ற சமூக கட்டமைப்புகளினதும் அதன் அசைவியக்கத்தினதும் ஆழ்ந்த பகுப்பாய்வுகளாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

தனிமனித பாத்திரங்களின் அடியாக இலக்கியங்கள் படைக்கப்பட்டாலும், அப்பாத்திரத்தின் இயங்கியலைத் தீர்மானிக்கும் சமூக விசைகளை உணராத படைப்பாளிகளால் முழுமையான படைப்புகளைத் தரமுடிவதில்லை.

ஆக்கங்களின் தன்மையானது படைப்பாளிகளின் வாழ்வனுபவம், கருத்துநிலை என்பவற்றினடியாக வடிவம் பெறுகின்றது. டேவிட்டின் பெரும்பாலான கதைகளில், அவரே உள்ளுறைந்த பாத்திரமாக விளங்குகின்றமையைக் காணலாம். அவர் கதைகள் பேசுகின்ற வறுமையும் ஏனைய சமூக துயரங்களும் அவைதரும் வலிகளும் அவர் அனுபவ உணர்வு நிலைகளின் வழியானவை. கூடவே சமூகப் பிரச்சினைகளின் வேர்களை அறிவார்ந்து நோக்கும் பக்குவம் அவர் வரித்துக் கொண்ட மாக்ஸிசத்தின் வழியானது உள்ளார்ந்த உண்மையும், கருத்துநிலை நியாயமும் அவர் கதைகளின் வீரியத்தின் அடிப்படைகளாகுகின்றன.

பழுதாகிப்போன மனிதர்களின் சுயம், சமூகமயமாக்க செயன்முறைகள் அநீதியான சமூகக் கட்டமைப்பு என்பவை தொடர்பாக டேவிட்டின் பாத்திரங்கள் உணர்த்தும் கேள்விகள் கூர்மையானவை. தமர், பிறர் என்ற பேதமின்றி நியாயமென்ற தளத்தில் நின்று நோக்குதலினால் நிலைபேறானவை.

ஆசிரியராக எதிர்காலத்துடன் நெருங்கி வாழும் பேறு பெற்றவர் டேவிட். இத்தொகுப்பின் பெரும்பாலான கதைகளில் பிள்ளை மனங்களிடமிருந்தே பெரிய பாடங்களைப் படித்து எமதாக்கியிருக்கிறார். இவ்வாறான வகுப்பறை அனுபவச் சூட்டில் பிறந்த கதையொன்றிலேதான் மேலே நாம் கண்ட கேசவன் அம்மாவின் கண்ணீர் பற்றிய உரையாடல் வருகின்றது. 'எங்களுடைய வறுமை தீர வழியில்லையா' என்பதைத்தான் அவன் கேட்கத் தெரியாமல் கேட்கிறான் என கதையின் நிறைவுக் குறிப்பினைத் தருவது வேறுயாருமல்ல; வகுப்பாசிரியரும், எழுத்தாளருமான டேவிட்டேதான்.

சமூகக் கொடுமைகளிடை மனிதர்கள் ஊமைகளாய்க் கிடந்து, அழுகின்றார்கள். இறைவா, நீ எனக்குச் சொல்லும் ராகமும் தந்தாய். நான் அவர் துயரைப் பாடுகிறேன் என்பான் கதே, துயரப்படுபவர்களின் குரலாய் ஒலிக்கும் டேவிட்டின் சொற்களை இக்கதைகள் முழுமையும் கேட்கின்றோம்.

வெறும் இரங்கலுக்கப்பால், துயரப்படும் மனிதருள் நுழைந்து அவன் துயருக்கான காரணங்களையும் வெளிப்படுத்துதலில் டேவிட்டின் படைப்புத் தனித்துவம் துலங்குகின்றது.

பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளிகளாக்கி, அநீதியான சமூக மேலாண்மைளைத் தப்பவைக்கும் எழுத்துக்களாகவன்றி, அறிவுத் தெளிவுடனும், அறிவுத் துணிவுடனும் தனி மனிதர்களினதும் சமூக நிறுவனங்களினதும் இரட்டை நிலைகளைத் தெளிவுறுத்தி நாளைய மாற்றத்துக்கான உணர்வு விழிப்பினைத் தருவதனால் இக்கதைகள் சமூகவியல் முக்கியத்துவமும் பெறுகின்றன.

சமூக மேம்பாட்டுக்கான டேவிட்டின் எழுத்துப்பணி மென்மேலும் பயனான கனிகளை எமதாக்க எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். என். சண்முகலிங்கன்**
சமூகவியல் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்,
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
**2012.04.16**

# எனதுரை

ஒரு படைப்பாளிக்கு தெளிவானதும், உறுதியானதும், தீர்க்கதரிசன மிக்கதுமானதொரு சமூக அரசியல் தளம் அமைந்திருக்க வேண்டுமென பொதுவாகவே எதிர்பார்க்கப்படுவதில் நிறைய நியாயங்கள் உண்டு.

சமூக அசைவியக்கங்களும், அந்த அசைவியக்கங்களால் ஏற்படுகின்ற சமூக மாற்றங்களும் தவிர்க்க முடியாதவைகளாகும். இலக்கிய வடிவங்கள், சமூக நகர்வுகளை மையப்படுத்தித் தோற்றம் பெறுவதால் சமூக மாற்றங்கள் ஏற்படும்போது இலக்கிய வடிவங்களிலும், கோட்பாடுகளிலும் இயல்பாகவே மாற்றங்கள் ஏற்படுகின்றன.

சமுதாய - இலக்கிய மாற்றங்களை விளங்கவும், மாற்றங்களில் உள்ளுறைந்திருக்கும் படிமங்களைப் புரிந்து கொள்ளவும், புரிந்தவைகளைச் சமூகத்திற்கேற்றவாறு இலக்கியம் படைக்கவும் ஒரு படைப்பாளிக்கு சமூக அரசியல் தளமொன்று இன்றியமை யாததெனலாம்.

1966 ஆம் ஆண்டு 'புகலிடம்' என்ற எனது முதற் சிறுகதை சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானது. அப்போது எனக்கு இருபத்தொரு வயது. எனது முதற்படைப்பான 'புகலிடம்' என்ற சிறுகதையை நான் எழுத முன்பே சமூக – அரசியல் சார்ந்ததொரு தளம் எனது மனதில் கருத்தேற்றம் பெற்றிருந்தது.

'கருத்தேற்றம்' பெறுவதற்கும், பகுத்தறிவுக்கூடாக ஒரு கொள்கையில்-இலக்கியக் கோட்பாட்டில் தெளிவு பெறுவதற்குமிடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு.

நான் பிறந்து வளர்ந்த மட்டுவில் வடக்குக் கிராமச் சூழலில், பொதுவுடமைச் சித்தாந்தம் விருட்சநிலை பெற்றிருந்தது. அந்த அரசியல் சித்தாந்த சூழலில் நான் வளர்ந்ததால் இயல்பாகவே நானும் பொதுவுடமைச் சித்தாந்தக் கருத்தேற்றம் பெற்றிருந்தேன் என்பதுதான் யதார்த்தம்.

எனது இருபத்தோராவது வயதில் சர்வதேச வியாபகம் பெற்ற பொதுவுடமைச் சித்ததாந்தத்தைப் புரிந்து கொள்ளுமளவிற்கு எனக்குச் சிந்தனை வளம் இருக்கவில்லை என்பதையும் இங்கு கூறிவைப்பது அவசியமாகும்.

பொதுவுடமை அரசியல் சித்தாந்தத்திலுள்ள சமூக தர்மங்களையும் அதன் நதி மூலத்தையம் புரிந்து கொள்வதென்பது இலகுவானதல்ல. ஆழமான சிந்தனையும், விரிவான பட்டறிவின் தடங்களுக்கூடாகவுமே பொதுவுடமை அரசியல் தளத்தைப் புரிந்து கொள்ளமுடியும் எனலாம்.

எனது முதற் சிறுகதையைத் தொடர்ந்து எனது படைப்புகள் தொடர்ச்சியாக சகல பத்திரிகைகளிலும் பிரசுரமாக ஆரம்பித்தன.

அதன் பின்புதான் நான் என்னை வளப்படுத்திக் கொள்ள முயற்சித்தேன். அரச பதவியிலிருந்த நான் இலங்கையில் பல்வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றதால் ஏற்பட்ட அனுபவங்களுக் கூடாகவும் எனது சுய தேடலுக்கூடாகவும் என்னை ஓரளவு வளப்படுத்திக் கொண்டேன்.

நாளடைவில், கருத்தேற்றம் பெற்றிருந்த பொதுவுடமை சித்தாந்தமே எனது மனதில் நிலைபெற்றது.

அதன்பின் என்னால் படைக்கப்பட்ட அத்தனை படைப்புகளும் என்று கூறமுடியாவிட்டாலும் பெரும்பாலான படைப்புகள் பொதுவுடமைச் சித்தாந்தத்தை அடியொற்றியவைகளாகவே அமைந்தன.

ஒரு நாவல், மூன்று குறுநாவல்களை நூலுருவாக்கி வெளியிட்ட நான், 1994இல் 'ஒரு பிடி மண்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியீடு செய்ததன் பின் இன்றுவரை வேறெந்த நூல்களையும் வெளியீடு செய்யவில்லை. அதற்கான காரணங்கள் இங்கு தேவையில்லையென நினைக்கிறேன்.

இப்போதும் 'பாடுகள்' என்ற இச் சிறுகதைத் தொகுதி எனது நண்பர்களான திரு.ஐ.கணேசன் திரு.அ.பிரதாபன் ஆகியோரின் முயற்சியினாலேயே வெளிவந்துள்ளது.

இருவருக்கும் எனது நன்றிகள்.

தவிர, இந்நூலுக்கான அணிந்துரை வழங்கிய எனது அன்புக்கும் கௌரவத்துக்குமுரிய முன்னாள் துணைவேந்தரும், சமூகவியல்துறை பேராசிரியருமான திரு.என்.சண்முகலிங்கன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

சிறுகதைகளை கணனிப்பதிவு செய்து தந்த செல்விகள் ரேவதி மோகனராஜா, சுமித்திரை ஜெகநாதன் ஆகியோருக்கும், இந்நூலுக்கான அட்டைப் படத்தை தயாரித்துத் தந்த யாழ்ப்பாணம் பிறில்லியன்ற் ஸ்ருடியோ உரிமையாளர் திரு.ஸ்.வின்செனற் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்
கே.ஆர்.டேவிட்

"பூபாளம்"
பிடாரி கோவில் வீதி
ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம்
இலங்கை.

# பதிப்புரை

கு.வி அச்சகம் என்ற எமது நிறுவனத்தின் 36 ஆண்டுகால கல்வி வெளியீடுகள் எமது மாணவர் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் துணையாற்றி வந்துள்ளன. சகல மாணவர்களும் எமது நூலை வாங்கிப் படிப்பதற்கு ஏதுவாக எமது நூல்களின் விலைகள் நிதானமாக நிர்ணயிக்கப்பட்டு, வெறும் வணிக நோக்கில் அல்லாது கல்விச் சேவை செய்யும் நோக்கிலும் நாம் இதுவரை காலமும் பணியாற்றிவந்துள்ளோம். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் புத்தக விற்பனை நிலையங்களும், கல்வி நிறுவனங்களும் எமது சேவைக்குப் பெரும் ஆதரவை நல்கி வந்துள்ளார்கள். இதில் சகல மட்டங்களிலும் பரஸ்பர நன்மைகள் கிடைத்து வருகின்றன.

கல்வி வெளியீடுகளோடு நின்று விடாமல் கலை, இலக்கியப் படைப்புகளையும் வெளியிடுவதன் மூலம் படைப்புகளுக்கும், கலை இலக்கிய நூல்களைப் படித்து மகிழ்வோருக்கும் இன்னொரு தளத்தில் எமது பணியை மேற்கொள்ளலாம் என்று நாம் முடிவுசெய்துள்ளோம். இதன் முதற் கட்டமாக சிறுகதை இலக்கியத் துறையில் நீண்டகாலம் ஈடுபட்டுத் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருக்கும் திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் சிறுகதைத் தொகுப்புக்கள் சிலவற்றை வெளியிட முன்வந்துள்ளோம்.

எமது கல்வி வெளியீடுகள் எவ்வாறு கல்வித் துறைக்குச் சேவையாற்றி வருகின்றனவோ அதேபோன்று கலை, இலக்கியத் துறைக்கும் எமது வெளியீடுகள் மூலம் எம்மால் முடிந்தவரை ஆதரவு வழங்குவதே எமது எண்ணமாகும். இதற்கும் படைப்பாளிகளும், கலை, இலக்கியத்தை நுகர்வோரும் தமது ஆதரவை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் சிறுகதைத் தொகுப்பினை முதன் முதலாக நாம் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். மேலும் சிறந்த தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் நூல்களையும் சிறிய அளவில் வெளியிட்டு சகல தரப்பினருக்கும் எம்மால் முடிந்தவரை ஆதரவுதர நாம் முயற்சிக்கிறோம்.

திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் இந்த சிறுகதைத் தொகுப்புக்கள் நிச்சயம் சிறந்த வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

- நன்றி -

-பதிப்பாளர்-

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | தாய்மையின் விலை | 01 |
| 2. | ஆசைச் சாப்பாடு | 09 |
| 3. | கண்ணீர் எப்ப முடியும் | 20 |
| 4. | சுடுகாடு | 32 |
| 5. | சூடுகள் | 45 |
| 6. | மண்வாசனை | 55 |
| 7. | பாடுகள் | 66 |
| 8. | சீறுவாணம் | 76 |
| 9. | இருள் | 86 |
| 10. | ஒல்லித்தேங்காய் | 99 |
| 11. | குறுணிக்கல் | 111 |
| 12. | விபச்சாரங்கள் | 125 |

1

# தாய்மையின் விலை

''பிறக்கின்ற குழந்தையே விற்றுவிட வேண்டும்'' பொன்னம்மாவின் வயிற்றில் அந்தக் குழந்தை கருவுற்ற அன்றே இப்படியொரு எண்ணமும் அவள் மனதில் உருவாகிவிட்டது.

வலுவிழந்து போன தனது உடலில் கருத்தரித்திருக்கும் அந்தக் குழந்தை உயிரோடு பிறக்காது - அப்படி உயிரோடு பிறந்தாலும் - நீண்ட நேரம் இருக்காது என்ற எண்ணமும் அவளது மனதில் இலேசாக முளைவிட்டிருந்தது. ஆனால் அவளது எண்ணத்துக்கு மாறாகக் குழந்தையைச் சுகமாகப் பிரசவித்து விட்டாள்.

அப்படியென்றால், அடுத்த முடிவு ...?

குழந்தையை விற்பது ... !

அவளது வயிற்றுத் தோற்புரையில் ஒட்டுண்ணி வாழ்க்கையை நடாத்திய அந்தக் குழந்தை பிறந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன.

அந்தக் குழந்தையை வாங்க இருப்பவர்கள் இன்னும் சிலமணி நேரத்தில் வந்து விடுவார்கள். தாய் - சேய் உறவு இன்னும் சில மணி

நேரம் வரை தான் !

உயிருள்ள வரை நீடிக்க வேண்டிய உறவு, மணிக்கணக்கில் நீண்டிருக்கின்ற கொடுமை ...!

பெரியாஸ்பத்திரி

பிரசவ வார்ட்

கட்டிலில் குழந்தையுடன் படுத்திருக்கின்றாள் பொன்னம்மா, அந்த அறையில் உலகம் புரியாத சில "சிறிசு"களின் முனகல் சத்தத்தைவிட வேறெந்தச் சத்தமும் இல்லை. அனைவரும் அமைதியாகவே படுத்திருக்கின்றனர்.

அந்த அமைதி பொன்னம்மாவின் இதய வேதனையை நெருட, அவளையறியாமல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடிகின்றது.

அந்த அமைதியைக் குலைப்பது போல்

ஒரு நாயின் அவலக்குரல்.

யன்னல் அருகே பொன்னம்மாவின் கட்டில் இருந்ததால், பொன்னம்மா தலையை நிமிர்த்தி யன்னலூடாக, நாயின் குரல் வந்த திசையைப் பார்க்கின்றாள்.

அங்கே

அந்த ஆஸ்பத்திரியின் உயர் அதிகாரியின் பங்களாவில் வளர்க்கப்படுகின்ற "அல்சேஷன்" நாய், ஆஸ்பத்திரியில் எச்சிலிலை நக்கிச் சீவியம் நடத்துகின்ற ஒரு தெரு நாயைக் கடித்துக் கொண்டிருக்கிறது.

கடுந்தரையில் விழுந்து மாங்காய் பிளப்பது போல் அவளது உதடுகள் பிரிய அவள் சிரிக்கின்றாள்.

அர்த்தபுஷ்டியான சிரிப்பு

அவள் திரும்பவும் தலையைத் தாழ்த்திக் கொள்கிறாள். இப்பகுதிக்குரிய பஸ் நிலையத்தில் ''தெரு நாய்'' என்று கூறினால் சகலருக்கும் தெரியும்.

பொன்னம்மாவுக்கு இப்படி ஒரு பட்டப் பெயண்டு!

பட்டப் பெயர்கள் பிறரால் சூட்டப்படுவது தான் வழக்கம். ஆனால் ''தெரு நாய்'' என்ற பட்டப் பெயரைப் பொன்னம்மா தானே தனக்குச் சூட்டிக் கொண்டாள்.

''பொன்னம்மா! இண்டைக்கு என்ன சாப்பிட்டாய்?'' என்று யாராவது கேட்டால், என்ரை பிறப்பு நாய்ப் பிறப்பு. அதிலையும் தெரு நாய். கிடைக்கிற எச்சில் இலைகளை நக்க வேண்டியதுதான்...'' இப்படித்தான் அவள் கூறிக்கொள்வாள்.

அவள் தன்னை ''தெருநாய்'' என்று கூறிக் கொண்டதால் அவளது பெயர் தெரு நாய் பொன்னம்மா என்றாகி - நாளடைவில் ''தெரு நாய்'' ஆகிவிட்டது.

இப்போது பொன்னம்மா என்றால் யாருக்கும் தெரியாது. தலையைத் தாழ்ந்தியிருந்த பொன்னம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருக்கின்றது.

இரைப்பையின் கொடுமையால், கருப்பைக்குச் செய்கின்ற துரோகம்... கருப்பையின் மரண ஓலம்... கண்ணீராய் வடிகின்றது.

பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையை உயிரோடு இழக்கின்ற ஒரு தாயின் அவல நிலை! ஒட்டியுலர்ந்த அவளது மார்பிலிருந்து எப்படியோ சில துளி பால் கசிந்து, சட்டையில் ஒரு ரூபா குத்தியளவில் ஊறுகின்றது.

பாசத்தின் உச்ச நிலை!

பொன்னம்மா குழந்தையை விற்கப் போகின்ற செய்தி, அதே அறையில் உள்ள அனைவருக்கும் தெரியும். அனைவரும் பொன்னம்மாவைத்தான் பார்த்தபடி படுத்திருக்கின்றனர். அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் பொன்னம்மா உணராமல் இல்லை. இருந்தும் அவள் மௌனமாகவே இருக்கின்றாள்.

பொன்னம்மா இலேசுப்பட்டவள் அல்ல!

சாதாரண நிலையில் எல்லோரிடமும் சகஜமாகப் பேசிக் கொள்வாள். நெருக்கடிகள், வேதனைகள் ஏற்பட்டுவிட்டால் அவள் பேசமாட்டாள். அப்படியில்லை என்று அவள் பேசினால், அந்தப் பேச்சில் "நீர் மட்டம்" வைத்த நிதானமிருக்கும்.

"ஏன் பொன்னம்மா, இந்தப் புள்ளையின்ரை தகப்பன் எந்த ஊரிலை?" சகலதும் தெரிந்த ஒருத்தி வேண்டுமென்று பொன்னம்மாவைக் கேட்கின்றாள்.

"இந்த ஊரிலை தான்."

"அப்ப ஏன் அவர் வரயில்லை?"

பொன்னம்மா மௌனமாக இருக்கிறாள். அவளுக்கே தெரியாத அந்தத் "தகப்பன்" அவன் வராத காரணத்தை அவளால் எப்படிக் கூறமுடியும்?

"என்ன பொன்னம்மா பேசாமல் இருக்கிறாய்? இந்தப் புள்ளையின்ரை தகப்பன் ஏன் வரயில்லை?"

பொன்னம்மா தலையை நிமிர்த்திக் கேள்வி கேட்ட அந்தப் பெண்ணைப் பாக்கின்றாள். சில வினாடிகள் அந்தப் பார்வை அந்தப் பெண் மீது படிகின்றது. மறுகணம் தனது வலது கரத்தைப் பூரணமாக விரித்து தனது மடியில் கிடந்த குழந்தையைப் பாதாதி கேசம் வரை தடவுகிறாள்.

அவளது காய்ந்த மார்பு விம்மித் தணிய, மீண்டும் சில சொட்டுப் பால் துளிகள் கசிந்து பாசத்தின் எல்லைக்கோடு உடைகிறது. அவள் திரும்பவும் தலையைக் தாழ்த்திக் கொள்கிறாள். மீண்டும் அமைதி.

வெளியே

நாயின் அவலக்குரல்.

அந்த "அல்சேஷன்" நாய், அந்தத் தெரு நாயை இன்னும் கடித்துக் கொண்டிருக்கிறது.

சிப்பி பொறுக்கி, அதை விற்றுச் சீவியம் நடத்துகின்ற ஒரு குடுபத்தில் பிறந்தவள் தான் பொன்னம்மா. பெற்றோரை இழந்த அவள் ஒரு அனாதை.

பொன்னம்மா என்ன செய்வாள்? வாழவேண்டுமே! அரிசி வியாபாரம் செய்யத் தொடங்கினாள். சிலரோடு சேர்ந்து வந்தவர்களையும் இழந்து அனாதையாகி விட்டாள்.

புதிய இடம், புதிய அனுபவம், உடலோடு ஒட்டிய கன்னிச்சுமை...

அந்த பஸ் நிலையத்தைச் சுற்றித் திரிந்தாள். இரவு வந்தது பகலில் அவளை அவதானித்த சில கண்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன.

அவளது கைக்குள் சில "சில்லறைகள் ...? சின்னத்தன மானவர்களின் காணிக்கை...

இப்போது அவள் இரவை எதிர்பார்க்கின்றாள்.

பசி மயக்கத்தில் தன்னையும், இந்த உலகத்தையும் முற்றாக மறந்து பூட்டப்பட்டிருக்கம் கடை விறாந்தைகளின் மங்கலமான

ஒளியில்... தேலால் மூடப்பட்டிருக்கும் வெறும் தசைக் குவியலை அவள் மலிவுப் பொருளாக்கி...

உணவுள்ள பல ஆண்மைகள் கையில் சில்லறைகளுடன் சந்தித்து... சங்கமித்து...

தினசரி அவளுக்கு மறுபிறப்பு. இப்போது ஒரு தேசியக் குழந்தைக்குத் தாயாகி அந்த நகரிலுள்ள பெரியாஸ்பத்திரி பிரசவ வார்ட்டில் இருக்கின்றாள்.

சொற்ப நிமிஷங்களில் அந்தக் குழந்தை விற்பனை யாகிவிடும்!

"என்ன பொன்னம்மா, குழந்தையை விக்கச் சம்மததந்தானே?" அங்கு வந்த தாதி கேட்கிறாள்.

"ஓமம்மா"...

அந்தத் தாதி குழந்தையை எடுத்துச் சென்று பவுடர் போட்டு, பொட்டு வைத்து புதியதொரு கம்பளித் துணியால் போர்த்திக் கொண்டு வந்து கட்டிலில் கிடத்துகின்றாள்.

"பொன்னம்மா... பிள்ளையை வாங்கிறவை இப்ப வாறதாய் ரெலிபோன் செய்திருக்கினம்... இனி நீ பிள்ளையைத் தூக்காதே..."

தாய்க்கும் பிள்ளைக்கும் ஏற்படப்போகும் பிரிவினையின் முன்னுரை!

பொன்னம்மா எட்டித் தன் குழந்தையைப் பார்க்கின்றாள்... தன் குழந்தைதானா என்றொரு சந்தேகம் அவளுக்கு.

" வாருங்கோ, உங்களைத்தான் பாத்துக்கொண்டு நிக்கிறன். இதுதான் உங்கடை மகன்..." பிள்ளை வாங்க வந்தவர்களை வரவேற்றுக் குழந்தையை அறிமுகம் செய்கிறாள் அந்தத் தாதி.

"என்ன பேர் வைக்கப் போறீங்க...?" வந்தவர்களிடம் கேட்கிறாள் தாதி.

"கோமேதகன்" பிள்ளையைப் பெறாமலே அந்தப்பெண் கூறுகின்றாள்.

"நல்ல பெயர்..." குழந்தையின் கையைப் பிடித்துக் கொஞ்சுகிறாள் தாதி.

பக்கத்து கட்டில்களில் உள்ள பெண்கள் எழுந்து வந்து குழந்தைக்குச் செல்லங் காட்டுகின்றனர்...

பெரிய இடத்துப் பிள்ளைக்கு உரிய "சலாம்" வரிசைகள்...

பிள்ளையைப் பெற்று புண்ணுடம்பு மாறாத அந்தத் தாய்... "தெருநாய்...செல்லாக்காசு"

"அப்ப எவ்வளவு தாறது ?" குழந்தையை வாங்க வந்தவர் கேட்கின்றார்.

"ஏதோ விரும்பியதைக் கொடுங்கோ..." தாதி நடுநிலைமை வகிக்கின்றாள்.

"இதிலை நான் கையெழுத்துப் போட்டிருக்கிறன். எவ்வளவு தொகையெண்டு போடயில்லை... தேவையானதைப் போடு..." அவர் காசோலையை பொன்னம்மா இருந்த கட்டிலில் வைக்கிறார்.

எங்கும் மைதி.

இந்த உலகத்தையே ஆட்டுகின்ற அந்தப் பணத்தின் பிரதியான காசோலை காற்றில் இலேசாக ஆடுகின்றது.

பொன்னம்மா அந்தச் செக்கையும், அந்தப் பெரிய மனிதனையும் மாறி மாறிப் பார்க்கின்றாள்.

"என்ன பொன்னம்மா பார்க்கிறாய்?... உனக்கு வேண்டிய தொகையைப் போட்டுக்கொள்" அந்தப் பெரிய மனிதன் கூறுகிறான்.

"இந்தப் பிள்ளையின்ரை விலையை உங்களாலை சிலவேளை மதிப்பிட முடியும்... ஆனால் என்னாலை மதிப்பிட ஏலாது. அப்பிடி நான் மதிப்பிட்டால், அந்தத் தொகையைக் கட்ட இந்த உலகத்திலை ஆராலையும் முடியாது!...

"குழந்தையை வாங்கிற ஆசை பலருக்கு இருக்கலாம்... பெற்ற குழந்தையை விக்கிற ஆசை எந்தப் பெண்ணுக்கும் வராது.

"நான் பெத்த குழந்தைக்கு ஒரு நல்ல காரியம் செய்யவேணு மெண்டால் இதைவிட வேறை ஒண்டும் என்னால் செய்ய முடியாது..." பொன்னம்மாவின் பேச்சில் நீர்மட்டம் வைத்த நிதானம்!

அவள் இறுதியாகத் தன் குழந்தையைப் பார்க்கிறாள். அவள் கண்களில் கண்ணீர் முட்டி வடிகின்றது.

அந்தச் செக்...

அந்தக் காசோலை...

இன்னமும் மின்சார விசிறியின் காற்றில் அனாதையாக அசைந்து கொண்டிருக்கின்றது.

பொன்னம்மா வெளியேறுகின்றாள்.

வெளியே

"அல்சேஷன்" நாயால் கடிக்கப்பட்ட எச்சிலியை நக்குகின்ற அந்தத் தெரு நாய் இரத்தம் தோய்ந்து உயிர் ஊசலாடக் கிடக்கின்றது.

இந்த தெருநாய் பொன்னம்மா புண்ணுடம்புக்காரி... அடிமேல் அடிவைத்து நடக்கின்றாள்.

அவளுக்காக அந்த பஸ் நிலையம் காத்துக் கிடக்கின்றது.

சிந்தாமணி 11.06.1978

## 2

# ஆசைச் சாப்பாடு

அந்தோனி இப்ப தான் வேலை முடிஞ்சு வாறியா... தேவாலய வாசலில் நின்ற சுவாமி என்னிடம் கேட்கிறார்.

"ஓம் சுவாமி.."

"போய் குளிச்சிட்டு கெதியாய் வா... கோயிலிலை வேலை கிடக்கு..."

"கோயிலிலை என்ன விஷேசம் சுவாமி..."

"நாளைக்கு இறந்த ஆத்துமாக்களின் பூசை எண்டதை மறந்திட்டியா..."

"...ஓம் சுவாமி... நான் வீட்டை போட்டு வாறன்..." சுவாமியாரிடம் விடை பெற்றுக் கொண்டு எனது வீட்டை நோக்கி நடக்கிறேன். இது வரையில் ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்த எனக்கு இப்போது எனது தகப்பனாரின் பரிதாபமான முகம், அவரது மரண கால நிகழ்ச்சிகள். ஒரு பிரேதப் பெட்டி வாங்கப் பணமின்றி நான் அலைந்த அலைச்சல்... எனது மனத்திரையில் தெரிகின்றன...

எனது மனம் அழுகின்றது.

காலை ஏழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் வேலை முடிந்து வீடு திரும்ப எப்படியும் மாலை ஆறு மணிக்க மேலாகி விடும்.

வேலை என்றால்...? கூலி வேலை... இன்று ஒரு மேசனோடு சீமெந்து கலக்கும் கூலியாகப் போயிருந்தேன்.

“இறந்த ஆத்துமாக்கள் பூசை...” சுவாமி என்னிடம் சொன்ன அந்த வாக்கியத்தில் எனது மனம் திரும்பவும நங்கூரமிடுகின்றது.

மனித உடலை விட்டுப் பிரிந்த ஆத்மா ஆண்டவன் சந்நிதானத்தில் நித்திய ஆனந்தத்துடன் சீவியம் நடத்த வேண்டுமென ஆண்டவனை வேண்டுவதற்காகவே இந்தப் பூசை நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் இதே தினத்தில் இந்தப் பூசை நடைபெறும்.

உயிர் இழப்பு நடந்த ஒவ்வொரு வீட்டாரும் இந்தப் பூசையில் கலந்து கொள்பவர்கள்.

அன்றைய தினம் இறந்தவர்களின் “நாமங்கள்” கண்ணீரால் குளிப்பாட்டப்படும்...

அதுமட்டுமல்ல

இறந்தவர்கள் உயிரோடு இருக்கும் போது எவற்றையெல்லாம் அதிகமாக விரும்புவார்களோ அவற்றையெல்லாம் கொண்டு வந்து கோயிலுக்கு வந்தவர்களுக்கு பரிமாறுவார்கள்.

இப்படிப் பரிமாறப்படும் உணவு வகைகள் “ஆசைச் சாப்பாடு” என்று சொல்லுவார்கள்.

பல வகையான உணவுகளைச் சாப்பிடுவதற்கென்ற நாளைக்கு ஒரு கூட்டம் கோயிலடியில் கூடி நிற்கும்.

இதுவரை காலமும் இப்பூசையில் ஒரு பார்வையாளராகவே நான் கலந்து கொண்டிருக்கிறேன்.. நாளைக்காலை... நானும் ஒரு பங்காளன்!...

என்னைப் பெற்றவன் தன் மரணத்தின் மூலம் எனக்கிட்ட கட்டளை!...

பிறப்பிலும், இறப்பிலும் தான் எங்களைப் போன்றவர்கள் மனிதனுக்குரிய நிகழ்வுகளில் சமநிலைப்படுகின்றோம்!...?

நாளைக்காலை...

...இறந்து போன எனது தகப்பனாரைச் சந்திக்கப் போவது போன்றதொரு உணர்வு

...எனது இதயத்தின் அடித்தளத்தில் ஊற்றெடுப்பதை நான் உணர்கிறேன்.

...அர்த்தமற்ற நினைப்பு... அதையும் நான் உணராமலில்லை...

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது.

கோயிலில் சுவாமியை சந்தித்து விட்டு வந்த நான். காலைக்கூடக் கழுவிக் கொள்ளாமல் படுத்திருக்கிறேன். என்னைப் பெற்றவள் - எனது தாய்

...அவளும் படுத்திருக்கிறாள்.

நாளைய நிகழ்ச்சி அம்மாவுக்கு எனக்கு முன்பே தெரிந்திருந்தது.

திண்ணைக் குந்தில் எரிந்து கொண்டிருந்த போத்தல் விளக்கின் எண்ணை முடிந்து திரிமட்டும் எரிந்து மணக்கின்றது.

"அம்மா"...?

"மண்ணெண்ணை இருக்கா"

"இல்லை.."

"ஏன் இல்லை..." வாங்கவில்லை ஏன்று நான் கேட்டிருக்கலாம் ஆனால் நான் அப்படிக் கேட்கவில்லை. ஏனென்றால் காசிருந்தால் நிச்சயம் அம்மா வாங்கியிருப்பா என்பது எனக்குத் தெரியும்.

"அம்மா..."

"மத்தியானம் சாப்பிட்டியா"

"ஓம்..."

என்ன, சாப்பிட்டனி...

"பாண் வாங்கின்னான்..."

"இப்ப எனக்கு என்ன சாப்பாடு கிடக்கு..."

"பாணும், சம்பலும் கிடக்கு..."

வெறுந்திரியில் எரிந்த. விளக்கும் அணைகின்றது

சில நிமிடங்கள் மௌனம்...

'அம்மா...

"என்ன..."

"நாளைக்குப் பூசைக்குப் பேறியா..."

...அம்மா பதில் சொல்லாமல் அழுகின்றா...!

"...அம்மா நாளைக்கு நீ பூசைக்கு போகாட்டி ஊரிலை என்ன சொல்லுவினம்..."

"டேய்... ஊருலகத்தை விட்டா... ஊருலகம் வாய்க்கு வந்த படி பேசும்.. எடேய்.. மனிசன் செத்தாப்பிறகு... கோயிலுக்குப் போயென்ன... பூசைக்குப் போயென்ன... ஆத்துமாக்கள் வாழுறதுக்கொண்டு ஒரு உலகம் இருந்தால்... அந்த உலகத்தில் அந்த மனிசன் நிம்மதியாய் தான் இருக்கும்... அப்படி ஒரு உலகம் இருக்கெண்டு ஆர் கண்டது..."

அம்மாவா இப்படிப் பேசுகின்றா...?

அம்மா தான்...!

'பட்டினிதான் ஞானத்தைக் கற்பிக்கும் ஆசான்' என்று கூறுவார்களே... அப்படிக் கற்றுக் கொண்ட ஞானப் பேச்சா?....

எதுவுமே முடியாத போது மனித மனம் ஆண்டவனைத் தூசிக்கின்றது!

விரக்தியின் எல்லையை மீறிய விரக்தி...

அதன் எல்லை...?

அதன் பெயர் ஞானம்....

ஞானத்தின் மறுபக்கம்...?

வெறுப்பு... சாதாரண வெறுப்பல்ல... தனது உயிரில் கூட வெறுப்பு...

அம்மா அழுகின்றா... அழுது முடியும் வரை நான் மௌனமாக படுத்திருக்கிறேன்.

சில நிமிடங்கள்... "அம்மா..."

"என்ன..."

"...நீ சொல்றதெல்லாம் சரி ஆனால் ஏனோ என்ரை மனம் நாளைக்கு கோயிலுக்குப் போக வேணுமெண்டு ஆவலாதிப்படுது... நான் போகத்தான் போறன்..."

"நான் வரயில்ல... நீ போறதெண்டால் போட்டு வா..."

...பூசைக்குப் போறதெண்டால் நானும் மற்றவையளைப் போல ஏதாலும் ஆசைச் சாப்பாடு கொண்டு போகத் தானே வேணும்..."

"...." அம்மா எதுவுமே பேசவில்லை.

"..." என்னம்மா நான் கேட்கிறன் நீ பேசாமல் படுத்துக் கிடக்கிறாய்"

"உன்ரை கேள்விக்கு நான் என்னத்தை சொல்லுறது..."

"ஏன்..."

'... உன்ரை ஐயா ஏன் செத்தவரெண்டு உனக்குத் தெரியுமே.."

எனது தகப்பனாரின் மரணத்தில் ஏதோ துயரம் இருப்பதை எனது தாயாரின் கேள்வி உணர்த்துகின்றது.

"எப்படியம்மா செத்தவர்"

"கிராம சபை கட்டிடத்துக்குள்ள செத்துக் கிடந்தது தான் எனக்குத் தெரியும்... அவரைச் சோதிக்க வந்த டாக்குத்தர்மார் என்ன சொன்னவை தெரியுமா..."

"என்னம்மா சொன்னவை...

"பசியில குடலொட்டி... வலிப்பு வந்துதானாம் செத்தவர்..."

சில நிமிடங்கள் என்னால் பேச முடியவில்லை

'...அம்மா இது உண்மையாய் இருக்குமா...

'...கிடக்கிறதை... உனக்கும் எனக்கும் தந்திட்டு அந்த மனிசன் பட்டினியாய் தானடா கிடக்கிறது..."

'.........'

'சாகிறதுக்கு முதல் நாள் அந்த மனிசன் இந்தத் திண்ணைக் குந்தில இருந்து என்ன சொல்லிச்சுது தெரியுமா..."

'...ஒரு நாளக் கொண்டாலும் வயிறு நிறையச் சாப்பிட்டிட்டு... நிம்மதியாய் நித்திரை கொள்ள ஆசையாய் கிடக்கு... இதைத்

தாண்டா அந்த மனிசன் ஆசைப்பட்டிது... பெற்றவளின் வார்த்தைகள் வேதனையில் புதைந்து பிரசவிக்கின்றன.

'எடேய் எங்களைப் போல ஆக்களுக்கெல்லாம் விதம் விதமாய் சாப்பிட வேணுமெண்ட ஆசை இருக்காது... எதையாவது சாப்பிட வேணும் எண்ட ஆவலாதி தான் நெடுகலும்... பசி தீர்ந்தால் தான் நாக்கு ருசியைத் தேடும் '......' என்னால் பேசமுடியவில்லை. பட்டினிக் கூர்களால் துளைக்கப்பட்ட இதயத்திலிருந்து ஒளுகிய வார்த்தைகள்.... உருகிய இரும்புத் துளிகளாய்... என் இதயத்தில் விழுந்து... என் உடலெல்லாம் அவிகின்றது.

இருவராலும் பேசமுடியவில்லை

விடிந்தால்

இறந்த ஆத்துமாக்கள் பூசை

...ஆசைச் சாப்பாடு?....!....

என்னால் தூங்க முடியவில்லை.

விடிகிறது நிலாவெளி அந்தோனியார் தேவாலயம் காலை ஏழரை மணி

இறந்த ஆத்துமாக்கள் பூசையைக் காண ஏராளமானவர்கள் கூடியிருக்கின்றனர். தேவாலய விறாந்தையில் நீளத்துக்கு ஆசைக் சாப்பாட்டுப் பெட்டிகள்... கடகங்கள்... வாழைக்குலைகள்...

நான்...?

எனது கையில் சிறியதொரு கடதாசிப் பார்சல்... என்னைப் பெற்றவனுக்காக நான் கொண்டு வந்த ஆசைச் சாப்பாடு!...?

அம்மாவின் கண்ணீர் உப்பிட்ட சாப்பாடு... ஏனென்றால் அம்மா அழுதழுது தான் இதை செய்தாள்!...

பூசை ஆரம்பமாகுகின்றது...

எல்லோரும் உள்ளே செல்கின்றனர்

நான் ஆலய முன்றலிலேயே முழந்தாளிட்டு இருக்கிறேன்... எனக்கு முன்னால் நான் கொண்டு வந்த கடதாசிப் பார்சல்.

ஆலய முன்றலில் ஒரு யேசுவின் சிலை... முள் முடி தரித்து கை, கால்கள் ஆணியால் அறையப்பட்டு... உடமெல்லாம் இரத்தம் சிந்துகின்ற நிலையிலுள்ள... ஒரு சிலை... மனிதனாகப் பிறந்து மனித குலத்தின் தர்ம வாழ்வுக்காகப் போதனை செய்து... மனிதர்களாலேயே தண்டிக்கப்பட்டவன்... யேசு...!

'உன்னைப் போல் பிறரையும் நேசி!...

அவன் எதிர்பார்த்த தர்மத்தின் சுவடுகள் இப்பூமியில் படிந்திருந்தால்... எங்களைப் போன்ற பட்டினிக் கூட்டங்களின் சுவடுகள்... என்றோ மறைந்திருக்கும்.

தர்மம் தோற்று விட்டது!

...பரலோகத்தில் இருக்கின்ற பிதாவே...

உம்முடைய இராச்சியம் பூமிக்கு வந்திடாதா?

...இரட்சித்தருளும்

...எனது கண்கள் யேசுவின் சிலுவையில் படிந்து... எனது மனதில் யேசுவின் உருவம் பதிந்து... நான் என்னை மறந்து..

'யேசுவே.. என்னைப் பெற்றவனின் ஆத்மாவுக்கு நிரந்தர இன்பத்தை அளித்தருளும்...'

வேதனையின் எல்லை... எனது உணர்வுகள் அந்தச் சிலையோடு சங்கமமாகி...

...அந்த யேசுவின் சிலையில்...

என்னைப் பெற்றவனின் சாயல்!...?

"மகனே... நான் தான் என்னைப் பார்"

என்னைப் பெற்றவனின் குரல்...

"ஐயா..." எனது நாக்கு புரள மறுக்கின்றது.

திடீரென்று ஏதோவொரு... உணர்வு... ஐயாவின் வயிற்றைப் பார்க்கிறேன்.

'குடல் ஒட்டி... வலிப்பெடுத்துச் செத்தார் என்று அம்மா சொன்னாளே... அந்த வயிறு... இன்னமும் அப்படியே தான் கிடக்கின்றது... முள்ளந்தண்டோடு ஒட்டிய வயிற்றுத் தோல்...

"ஐயா... நீ இன்னமும் பட்டினி தனா...?"

'மகனே பரலோகத்தில் யாருக்கும் பசிப்பதில்லை. அதனால் எவரும் புசிப்பதில்லை..."

அப்படியென்றால் உனது வயிறு ஏன் ஒட்டிப் போயிருக்கின்றது.

'ஐயா...'

"என்ன மகனே..."

"பரலோக ராச்சியம் பூமிக்கு வருமா" ஆவலோடு நான் கேட்கிறேன்.

"ஐயா பேசவில்லை...!...?

"...ஐயா..." தகப்பனின் மௌனத்தை புரிந்து தொடர்கிறேன்.

"...என்ன மகனே..."

"...நான் உனக்கு 'ஆசைச் சாப்பாடு" கொண்டு வந்திருக்கிறேன்"

"அப்படியா... என்ன சாப்பாடு கொண்டு வந்திருக்கிறாய்..."

என்னால் கூற முடியவில்லை... எனது கண்கள் கலங்குகின்றன.

'...என்ன மகனே.. கலங்குகின்றாய்...'

'...மற்றவர்களைப் போல் விஷேசமாக என்னால் எதையும் கொண்டு வர முடியவில்லை. ஒரு சோத்துப் பார்சல் மட்டும் கொண்டு வந்திருக்கிறேன்.

'அப்படியா ஒருநாளாவது வயிறு நிறைய சோறு சாப்பிட வேணும்.. எண்டது தானே எனது ஆசை... தா மகனே... பூலோகத்தில் இருக்கும் போது ஏற்பட்ட ஆசை... பரலோகத்திலாவது தீரட்டும்... ஆனால் ஒன்று...!

'பரலோகத்தில் யாரும் புசிப்பதில்லை...'

"அப்படியென்றால் உனது... ஆசை..."

மகனே... நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே பரலோகத்தில் இருப்பவர்களில் தொண்ணூறு வீதமானவர்களின் வயிறுகள் என்னைப் போல் ஒட்டிப் போய்தான் இருக்கின்றன..."

"அப்படியென்றால்... இந்த சோற்றுப் பார்சல்...?

'...மகனே உன்னைப் பெற்றாளே... உனது... தாய் என்னுடைய ஆசை தான் அவளுக்கும்... ஒரு நாளாவது வயிறு நிறையச் சோறு சாப்பிடவேணும்... இந்தப் பார்சலை கொண்டு போய் அவளிடம் கொடு..."

ஐயாவின் கண்கள் கலங்குகின்றன.

நானும் கலங்குகின்றேன்...

"அந்தோனி..." பாதிரியாரின் அழைப்பு...

பூலோக உணர்வுகள் விளிக்கின்றன.

நான் என்னை உணர்கின்றேன்... எனது தந்தையின் உருவத்துள் மறைந்த யேசுவின் சிலை... இப்போது யேசுவின் சிலைக்குள் எனது தந்தையாரின உருவம் மறைகின்றது... அது யேசுவின் சிலை...

எனது தோளில் பிடித்தபடியே சுவாமியார் எனதருகே நிற்கின்றார்!... யேசுவின் சிலையைப் பார்த்து ஏன் அழுகின்றாய்.."

நீ மனம் பேதலித்து விட்டாய்...'

சுவாமி... நான் ஆசைச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்... கூறியபடி பார்சல் அவிழ்க்கிறான்... சோறு... முருங்கைக்காய் குழப்பு, சம்பல்....

சுவாமி தனது வலது கரத்தை உயர்த்திச் சிலுவையிட்டு ஆசிர்வதிக்கின்றார்.

எனது வீட்டில்

என்னைப் பெற்றவள் அவளது ஆசை...

சுருங்கிய வயிறு...

நான் புறப்படுகின்றேன். எனது கைக்குள் ஆசைச் சாப்பாடு கிடக்கின்றது.

சிந்தாமணி மாசி 1982

3

# கண்ணீர் எப்ப முடியும்?

முதலாவது தவணைக்கான லீவு நாட்கள் நேற்றோடு காலாவதியாகி இன்று, இரண்டாந் தவணைக்கான முதல் நாள்.. மாணவர்களும் ஆசிரியர்களும் வேலையாக நிற்கின்றனர். பாடசாலைச் சுத்தம், வகுப்பறைச் சுத்தம், வகுப்பு ஒழுங்குகள்... இப்படிப் பல வேலைகள்.

நான் அதிபரின் காரியாலய வாசலில் நிற்கின்றேன்.

குத்தி நொருக்கப்பட்ட றஸ்க் பிஸ்கற்றைப் போல், வெடித்துக் கிளம்பி நொருங்கிப் போயிருக்கும் பாடசாலை விறாந்தைச் சீமெந்து நிலம்... அதிலும் அதிபரின் காரியாலய முன் பக்கம்... எனக்குள் நான் சிரித்துக் கொள்கிறன்...

இது ஒரு கிராமப் புறப் பாடசாலை.

அதிபரும் இரண்டு மூன்று தடவைகள் என்னைப் பார்த்து விட்டார். நான் ஒரு 'ஆசிரியன்' என்பதை அவரால் தீர்மானிக்க முடியாமல் போய்விட்டது. தன்னிடம் ஏதோ அலுவலாக வந்த ஒருவனாகவே அவர் என்னைக் கருதிக் கொண்டார் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

அது அவருடைய தவறல்ல ஏனென்றால், 'ஆசிரிய லட்சணங்களில்' ஒன்று கூட என்னிடமில்லை!

நானும், என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதில் அவசரப்பட்டுக் கொள்ளவில்லை. இது என்னிடமுள்ள இயல்பான குணம்.

என்னை ஒரு ஆசிரியனாகப் பார்க்கின்ற ஆசை என்னைப் பெற்றவர்களுக்கே இருந்ததில்லை, ஏனென்றால், நான் அதற்கு 'அருகதையற்றவன்' என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனால், இந்த அரசாங்கம் என்னை ஆசிரியனாக்கி விட்டது. என்னில் என்னத்தைக் கண்டதோ, எனக்குத் தெரியாது.

நான் இந்த ஆசிரிய வேலையை விட்டுப் போயிருக்கலாம். ஆனால், எனது மனதுக்குகந்த வேலை கிடைக்குமா? அந்தப் பயத்தினால் கிடைத்த இந்த ஆசிரிய வேலையோடு ஒட்டிக் கொண்டு வாழ்கிறேன்.

ஓரளவு வெளிவேலைகள் ஒதுங்கி, வகுப்புக்களை ஒழுங்கு படுத்துகின்ற நிகழ்ச்சி ஆரம்பமாகின்றது. அதிபருக்கு ஓரளவு மனத்திருப்தி... அவர் என்னை நோக்கி வருகின்றார்.

'வாருங்கள்' அதிபர் என்னை உள்ளே அழைக்கின்றார். நான் காரியாலயத்தினுள் சென்று ஒரு கதிரையில் அமர்கிறேன்.

அறிமுகப்படலம்

'புதுச்சேர் வந்திருக்கிறார்...' எங்களுக்குள் நடந்த சம்பாஷணைகளை அவதானித்த மாணவர்கள் பேசிக் கொள்வது எனக்குக் கேட்கின்றது.

புதிய முறைக் கல்வித் திட்டத்தின்படி 'மாணவர் சுதந்திரம்' இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ - என்னவோ அதிபரின் காரியாலயத்தினுள் மாணவர்கள் மிகவும் சுதந்திரமாகவே

பழகுகின்றனர்!

படிப்படியாக, இங்குள்ள ஆசிரியர்களின் அறிமுகங்கள்... நான் அதிபரிடமிருந்து விடுபட்டு ஆசிரியர்களுடன் சேர்ந்து கொள்கிறேன்.

வகுப்பு ஒழுங்குகள் முடிந்து, காலை வணக்கமும் முடிந்து மாணவர்கள் தங்கள் வகுப்புக்களுக்குப் போக பத்து மணியாகிவிட்டது.

பின்னர்... ஆசிரியர்கள் மத்தியில் நடக்கின்ற சமூக, அரசியல், சம்பள உயர்வு... பற்றிய நீண்டதொரு 'அலசல்' நடந்து... இடைவேளையும் விடுகின்றது.

இன்னும் மூன்று பாடவேளைகளைச் சமாளித்து வெற்றி கண்டால், இன்றைய 'தொழில்' முடிவடையும். யேசுநாதர் சிலுவையைச் சுமந்தது போல், இந்தக் கடைசிப் பாடம் மூன்றையும் சுமப்பது மிகக் கடினம்...

'நாங்கள் இனி வகுப்புகளுக்குப் போவமா' அங்கு வந்த அதிபர், நமது கடமை உணர்வை, இலேசாக வருடுகிறார்.

அசட்டுச் சிரிப்புகளுடன் ஆசிரியர்கள் பிரிகின்றனர். நானும் பிரிந்து ஒரு வகுப்புக்கு வருகிறேன.

'வணக்கம் சேர்...'

'வணக்கம் மாணவர்களின் வணக்கத்தைத் தொடர்ந்து நானும் வணக்கம் கூறி அமர்கிறேன்.

மூன்றாம் வகுப்பு

மாணவர்கள் ஆவலோடு என்னைப் பார்க்கின்றனர்.

'இப்ப என்ன பாடம்...'

'... தமிழ் ... '

'இந்த வகுப்பிலை எத்தினை புள்ளையள்...'
'நாப்பத்தைஞ்சு..'

'ஆர் மொனிற்றர்..'

'ஜெஸ்மி...'

'ஜெஸ்மி எழும்புங்கோ..' நான் கூறுகிறேன், அந்த ஜெஸ்மி எழும்பி நிற்கின்றாள். உருண்டைத்தலை, சுருண்ட கேசம், பருத்த கண்கள், சிவப்பு நிறம்... கள்ளமில்லாத முகம்... மிகவும் அழகானவள், அவளுடைய உடுப்பு, போட்டிருக்கும் நகைகள்... அவளது வாழ்க்கைச் செழிப்பைக் காட்டுகின்றது.

'இந்த வகுப்பிலை கெட்டிக்காரப் பிள்ளை ஆர்...'

'ஜெஸ்மி தான் சேர்...' பேச்சு முடிகின்றது வகுப்பில் அமைதி... இப்படியே அமைதியாக எவ்வளவு நேரம் இருப்பது...? மூன்று பாடநேரம் இருக்க முடியுமா?

மாணவரையும் கஷ்டப்படுத்தாமல், நானும் கஷ்டப்படாமல் எப்படியும் நேரத்தைக் கடத்த வேண்டும்.

வகுப்பு நேரத்தைக் கடத்தத் தெரியாத ஒருவன் ஆசிரியனாக இருக்க முடியுமா?

'ஏதாவது எழுதுவமா...' நான் கேட்கிறேன். வகுப்பை அமைதிப்படுத்தவும், நேரத்தைக் கடத்தவும் எழுத்து வேலை சிறந்த வழி!

'எழுதுவம் சேர்...' அவள் ஜெஸ்மி கூறுகிறாள்.

'என்னத்தைப் பற்றி எழுதுவம்...'

'வருஷப் பிறப்புப் பற்றி எழுதுவம்'

வருஷப் பிறப்பு மிகவும் பொருத்தமான தலைப்பு, ஏனென்றால்,

சித்திரை வருஷப்பிறப்பு முடிந்து ஒரு கிழமை தான் ஆகின்றது. சகலருமே வருஷப் பிறப்பைக் கொண்டாடியிருப்பார்கள். அதனால், மாணவர்களின் மனதோடு தொடர்புபட்ட பொதுவான விஷயம்.

'சரி வருஷப் பிறப்பைப் பற்றி எழுதுவம்...'

'எப்பிடிச் சேர் எழுதிறது.'

'வருஷப் பிறப்பன்று காலமை தொடக்கம் இரவு வரை நீங்கள் செய்த வேலையளிலை முக்கியமானதுகளை எழுதுங்கோ...'

'பத்து வரி எழுதினால் போதுமா சேர்...'

'எத்தனை வரியும் எழுதலாம்'

சகலரும் தங்கள் கொப்பிகளை எடுத்து விரித்து எழுதத் தொடங்குகின்றனர்.

நான் வகுப்பு மாணவர்கள் மீது பொதுவானதொரு கண்ணோட்டம் செலுத்துகின்றேன். எந்த வகுப்பிலும் பின் வாங்கில் இருப்பவர்களைக் கூடுதலாக நான் அவதானிப்பேன். ஏதோ ஒரு வகையில் பெலவீனமானவர்களே அநேகமாகப் பின் வாங்கில் இருப்பார்கள், அவர்களுடைய பெலவீனத்தைக் கண்டு ஏனைய மாணவர்கள் ஒதுக்கி விடுவதும் உண்டு, தங்கள் பெலவீனத்தை எண்ணி தாங்களாகவே ஒதுங்கிக் கொள்வதும் உண்டு.

நான்.....?

பின் வாங்கி இருந்தவர்களின் 'பட்டியலைச் சேர்ந்தவன்...?

வீட்டில் நின்றால் பசிக்குதென்று அழுவேன் என்பதற்காக என்னைப் பெற்றவளே என்னை அடித்துப் பாடசாலைக்குத் துரத்தி விடுவாளாம்...

வறுமை தணலில் கால் கொப்பளிக்க நடந்தவன் நான்!...

அதனால் நானாகவே பின் வாங்கில் அமர்ந்து கொண்டேன்!

மாணவர்கள் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டும் போல் இருக்கின்றது. அவ்வளவு அலுப்பு.. ஆசிரியனாகி விட்டால் சோம்பல் தேடி வந்து சேர்ந்து விடும்... அதிலும் ஒரு மாத காலம் லீவில் நின்று 'சிறு சோம்பலால்' சிறிது நேரம் படுத்து... அதனால் சோம்பல் வளர்ந்து பெரும் சோம்பலாகி ... தொடர்ந்து படுத்து எழும்ப முடியாத சோம்பல்...

அந்த சோம்பலோடு தான் பாடசாலைக்க வந்தேன். அதனால் தான் நீட்டி நிமிர்ந்துபடுக்கின்ற எண்ணம் எனக்கு...

பழக்கப்பட்ட பாடசாலையென்றால், மேசையில் தலையை வைத்து தூங்கி விடலாம்... இது புதிய பாடசாலை என்ற காரணத்தால் அப்படிப்படுக்க என் மனம் கூசுகின்றது...!

'சேர் எழுதினவை காட்டலமா' ஜெஸ்மி கேட்கிறாள். நான் அவளைப் பார்க்கின்றேன். சொக்கில் குளி விழுகின்ற கவர்ச்சியான, மாசு மறுவற்ற சிரிப்பு.

'காட்டலாம்'

ஜெஸ்மி கொப்பியைக் கொண்டு வருகின்றாள். மிகவும் அழகான உறை போடப்பட்டிருக்கின்றது. கோப்பியை விரிக்கின்றேன். கோர்க்கப்பட்ட மணிகளைப் போல், அடுக்கடுக்கான அழகான எழுத்துக்கள்.

பத்து வரிகள் எழுதியிருக்கின்றாள்.

வருஷப் பிறப்பன்று அதிகாலையில் எழுந்தேன்.

பல் துலக்கிக் குளித்தேன்.

புதுச் சட்டை போட்டேன்.

காரில் கோயிலுக்கு போனேன்.

பலகாரம் வாழைப்பழம் சாப்பிட்டேன்.

இப்படியே வாக்கியங்கள் தொடர்பாக எழுதப்பட்டிருக்கின்றன.

ஜெஸ்மி செல்கிறாள்.

வேறு யாராவது எழுதியிருப்பார்களாவென்று வகுப்பைப் பார்க்கிறேன்... எனது பார்வை முன் வாங்கிலுள்ள முதல் மாணவனில் தொடங்கி வரிசையாக நகர்ந்து வருகின்றது.

பின் வாங்கில் ஒருவன் பேசாமல் இருக்கிறான். அவனுக்கு முன்னால் கொப்பி விரித்தபடி கிடக்கின்றது... எழுதுகின்ற மனோநிலை அவனிடம் இல்லை!

சக மாணவர்களோடு சுரட்டுப் பண்ணுகின்ற மனோபாவம்... அதுவும் அவனிடமில்லை.

முன்னோக்கி வளர்ந்து எண்ணெய் தண்ணியின்றி செம்படையாகி விட்ட தலைமயிர், குளி விழுந்து பருத்து முன்னோக்கிப் பிதுங்கியிருக்கும் கண்கள், மிகவும் கட்டையான தோற்றம்... குரும்பைக் கயர் ஊறிப் போயிருக்கும் ஒரு சேட்... நூல் எல்லையையும் தாண்டி எரிந்த வீடிக்குறை போன்ற ஒரு பென்சில் துண்டு... அடிக்கடி கொட்டாவி விட்டுக் கொள்கிறான்.

வீட்டில் நின்றால் பசிக்குதென்று அழுவேன் என்பதற்காக என்னைப் பெற்றவள் என்னை அடித்துப் பாடசாலைக்குக் கலைத்தாளே...

அது போல் இவனையும்...

இவனைப் பெற்றவள்...

எனது சிந்தனைப் பறவை பின் நோக்கிப் பறந்து... எனது கடந்தகால வாழ்வில், இளமைக் கால வறுமை நிகழ்வுகளின் தழும்புகளைக் கொத்தி... அந்த மாணவனுக்குப் பொருத்தமானதைத் தேடிக் காண்கின்றது.

அவனில் என்னைக் காணுகின்ற ஒரு நினைப்பு! எனது மனம் இப்படித்தான்... வறுமையின் வெளிப்பாடுகளை எந்த ரூபத்தில் கண்டாலும்... அதை என்னோடு ஒப்பீடு செய்து... வெந்து வெடித்து... அழுகை வந்து விடும்!

இவன் என்ன எழுதியிருப்பான்? அவனது கொப்பியைப் பார்க்க எனது மனம் ஆவல்படுகின்றது.

நான் என்னை மறந்து அவனைப் பார்த்ததைச் சகல மாணவர்களும் அவதானித்துக் கொண்டு எல்லோரும் அவனையே பார்க்கின்றனர். அவனோ என்னைப் பார்க்கின்றான்.

'தம்பி இஞ்சை வாருங்கோ...' நான் அவனை அழைக்கின்றேன். அவன் கொப்பியையும் கொண்டு வருகின்றான்.

'உங்கடை பெயர் என்ன'

'கேசவன்'

'எழுதி முடிஞ்சிதா...'

'ஓம்...'

கொப்பியை வாங்குகிறேன். மட்டையில்லை. நான்கு ஒற்றைகள், சகல பாடங்களும் எழுதப்பட்டிருக்கின்றது.

எனக்குக் கோபம் வரவில்லை!

'கேசவன்... எல்லா பாடமும் ஒரு கொப்பியிலையா எழுகிறது..'

'அம்மா கொப்பி வாங்கித் தரவில்லை...'

அவன் எழுதியிருப்பதைப் பார்க்கின்றேன். கோணல் மாணலாக நான்கு வரிகள் மட்டும் எழுதியிருக்கிறான்.

வருஷப் பிறப்பன்று காலை அம்மா அழுது கொண்டிருந்தா.

பகல் ஒன்றும் சமைக்கவில்லை.

மத்தியானம் நான் குரும்பை குடித்தேன்.

இரவு அப்புச்சி அரிசி கொண்டு வந்தார் கஞ்சி காய்ச்சிக் குடித்தோம்.

திரும்பவும் அந்த நான்கு வரிகளையும் வாசிக்கின்றேன்.

எனது கண்களில் தீப்பிடித்து... கண் பாவைகள் இரண்டும எரிந்து... கருகுவதைப் போன்று...

நான் கேசவனைப் பார்க்கிறேன்.

அவன் முகத்தில் எந்தச் சலனமுமில்லை.

'கேசவன்...'

'சேர்..'

'வருஷப் பிறப்பண்டு அம்மா ஏன் அழுதவ'

'அவ நெடுகலும் அழுகிறவ...'

'அப்புச்சி எங்க போனவர்...'

'வேலைக்கு...'

'சேர், சேர். உவன் கேசவன் வீட்டிலை ஒருக்காலும் சமைக்கிற தில்லைச் சேர்... நெடுகலும் இளனிக் குரும்பை தான். குடிக்கிறவை..."

ஒருத்தி கூறுகின்றாள்.

'உங்களுக்கெப்பிடி இதெல்லாம் தெரியும்...'

என்ரை வீட்டுக்குப் பக்கத்திலை தான் சேர்... கேசவன்ரை வீடு...'

'கேசவன் இப்ப சொன்னதெல்லாம் உண்மையா...' நான் கேட்கிறேன். அவன் தலையை அசைத்து அதை ஒப்புக் கொள்கிறான்.

'ஏன் கேசவன்... உங்கடை அம்மா ஏன் சமைக்கிறதில்லை...'

'அரிசி சாமான் ஒண்டும் இருக்காது...'

'உங்களுக்குப் பசிக்காதா'

'பசிக்கும்... ஆனால் பழக்கம்...'

அவனது சேட்டில் படிந்திருக்கும் குரும்பைக் கயர்களைப் பார்க்கின்றேன்... சமுதாயத்தில் ஒட்டியிருக்கும் வறுமைக் கறைகளின் பிரதிகளாய்...

'சேர்... வருஷப் பிறப்பண்டு அழுதால் இந்த வருஷம் முழுவதும் அழ வேண்டி வரும் இல்லையா சேர்...' ஒரு மாணவன் கேட்கின்றான்.

'ஆர் சொன்னது...'

'அம்மா சொன்னவ...'

கேசவன் என்னைப் பரிதாபமாகக் பார்க்கின்றான். அவனது பார்வையில் புதிய தேவைகளின் பிரசவம் எனக்குத் தெரிகிறது.

என்ன கேசவன்.

'அம்மா வருஷப் பிறப்பண்டு அழுதவ... அப்ப எனிமேலும் அழுவாதானே' உலகம் புரியாத அந்தப் பாலகனின் பாச உணர்வு..?

‘கேசவன்…’

‘சேர்…!

உங்கடை அம்மா அழுதால்… நீங்கள் அழுகிறதில்லையா…’

‘அழுகிறனான்…’

‘நீங்கள் அழுதால் உங்கடை அம்மா ஒண்டும் சொல்லுறதில்லையா…

‘சொல்லுறவ…’

‘எங்கடை வறுமைக்கெல்லாம் நீதான் சொந்தக்காறன்… இப்ப கூட அழுது பழகினால்தான் பிறகு நல்லாய் அழலாம்… எண்டு சொல்லுற…’ கிளி போல அவன் கூறுகிறான்.

கேசவனின் தாய் கூறியது…? மாற்றமற்ற இந்தச் சமுதாயத்தைப் பற்றிய தீர்க்க தரிசனமா?

என்னால் பேச முடியவில்லை!

‘சேர்…’

‘என்ன கேசவன்…’

‘அம்மாவின்ரை கண்ணுக்குள்ளை இருக்கிற கண்ணீர் எப்ப சேர் முடியும்…’

கேசவன் கேட்ட கேள்வி?

‘ஏன் கேசவன் அப்பிடிக் கேக்கிறீங்கள்…’

‘கண்ணீர் முடிஞ்சு போச்சுதெண்டால் அம்மா அழமாட்ட… அது தான் கேட்டன்…’

'எங்களுடைய வறுமை தீர வழியில்லையா' என்பதைத்தான், அவன் கேட்கத் தெரியாமல் கேட்கின்றான்!

'வற்றிப்போன ஏரிகள், நீருக்காக வானத்தைப் பார்த்து ஏங்குவது போல்' கேசவன் போன்றவர்களின் வற்றிப்போன வாழ்க்கைகள்... அவர்களது ஏக்கங்கள்...?!

நான் கேசவனைப் பாக்கிறேன்... அவன் எனது பதிலை ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றான். எனது உடம்பெல்லாம் சூடேறி... நரம்புகள் புடைத்து...

'கேசவா... இந்தப் பூமியில் இறுதி வெற்றி நம்மவருக்குத் தான்...' என்று கூற நினைக்கின்றேன். ஆனால் நான் கூறவில்லை!

ஏனென்றால்

கேசவனால் புரிந்து கொள்ள முடியாது.

நான் மௌனமாக இருக்கிறேன்.

பாடசாலை விடுவதற்கான மணி அடிக்கின்றது.

(யாவும் கற்பனை)

வீரசேகரி 13.06.1982

**4**

# சுடுகாடு

மாலை ஆறு மணி தொடக்கம் காலை ஆறு மணி வரை நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். சட்டத்தை மீறுவோர் மீது சுடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை அரசின் ஆணித்தரமான கட்டளை!

உச்சாடனம் செய்வது போல் வானொலிகள் அடிக்கடி கூறுகின்றன.

இலங்கை பூராவும் இனக் கலவரம்.

இந்த மண்ணில் பிறந்தவர்கள் இந்த மண்ணிலேயே அகதிகளாக நிற்கின்ற 'சிறப்பு'....

இந்த நாட்டின் 'நாணயக் கயிற்றைப் பிடித்திருப்பவர்களின் ஆற்றலின் வெளிப்பாடுதான் இந்தச் சிறப்பு!

நாட்டின் நிலையை கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்காக அரசு திடீரென்று ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்து விட்டது.

இரவு எட்டு மணியிருக்கும்.

கால்களை நீட்டி வாசல் கப்போடு சரிந்திருக்கின்றாள் சின்னம்மா அவளது கண்கள் கலங்கியிருக்கின்றன. அவளது பார்வை வீட்டின் முகட்டு வளையில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் அரிக்கன் லாம்பின் மந்தமான சுடரில் படிந்திருக்கின்றது.

எதையோ அவள் ஆழமாகச் சிந்திக்கின்றாள்...

சின்னம்மாவின் மகன் குகதாசன், அவளக்கருகில் உள்ள திண்ணைக் குந்தில் அமர்ந்திருக்கிறான்.

தாயின் பரிதாபமான இந்தக் காட்சி குகதாஸனுக்கு புதியதல்ல, இலங்கையில் எந்தப் பகுதியில் இனகலவரம் நடந்தாலும் அதைக் கேள்விப்பட்டவுடன்... இப்படித்தான் தன்னை மறந்து சிந்திப்பாள்... அவளையறியாமலே கண்களில் கண்ணீர் முட்டி வழியும்....!

முடிவில்....

குகதாஸனைக் கூப்பிடுவாள்.

'குகன்... நீ என்ரை ஆசையை நிறைவேற்றுவியா... என்ரை தலையிலை அடிச்சுச் சத்தியம் பண்ணு..." இப்படிக் குகதாஸனிடம் சத்தியம் கேட்பாள்.

குகதாஸனும் சின்னம்மாவின் தலையில் அடிச்சுச் சத்தியம் பண்ணிக் கொடுப்பான்.

"...அம்மா எண்டைக்கோ நடந்து முடிஞ்சு போன விஷயத்தை இப்படி ஒவ்வொரு நாளும் நினைச்சு அழுகிறியே இனி அதை மறந்து போக வேண்டியது தானே..." குகதாஸன் தாயைச் சாந்தப் படுத்துவதற்காக இப்படிக் கூறுகின்றான்.

சின்னம்மாவின் உறுப்புக்கள் உணர்வை இழந்த நிலையில் குகதாஸனின் பேச்சுக்கள் சின்னம்மாவின் செவிப்பறையில் மோதி - வெறுமையாய் மறைகின்றன.

இவனைக் குகன் என்று தான் அழைப்பார்கள்.

பொது நிறம், தடித்த உரோமம், அடர்ந்த உடற்கட்டு கட்டையான தோற்றம், வயது இருபத்தைந்துக்குள் தான் இருக்கும். தனக்குச் சரியென்று பட்டத்தைச் செய்கின்ற இயல்பு, கூர்மையான கண்கள்... 'பெறுமதியான' ஒரு வாலிபன் என்று 'நாக்குப் புரளாமல்' கூறிவிடலாம்.

இப்பகுதி வாலிபர் இயக்கத் தலைமைப் பதவியை இப்பகுதி மக்கள் வலிந்து இவனுக்கு வழங்கியுள்ளனர்.

"என்னம்மா... நான் கதைக்கிறன். நீ பேசாமல் இருக்கிறாய்..." குகன் திரும்பவும் கேட்கிறான்.

சின்னம்மாவின் உடல் உறுப்புகளின் உணர்வுகள் இப்போது தான் இலோசாகத் தொழிற்பட ஆரம்பிக்கின்றன.

அரிக்கன் லாம்பின் சிறு சுடரை நோக்கியிருந்த அவள் தலையைத் தாழ்த்தி குகதாஸனைப் பார்க்கிறாள். அவனது முகத்தில் கேள்விக்குறி பிரதிபலிக்கின்றது.

"அம்மா... இந்த உலகத்துப் பிரச்சனையை, இந்த உலகின் உணர்வோடை தான் யோசிக்க வேணும்... ஆனால் நீ... இந்த உலகத்துப் பிரச்சனையை, இந்த உலகத்தை மறந்து யோசிக்கிறாய்... அப்பிடி யோசிக்கிறதாலை எப்பவுமே முடிவு ஏற்படாது..."

"குகன்... அண்டைக்கு என்ரை குடும்பத்துக்குக்கேற்பட்டதை நினைக்கிற நேரமெல்லாம்... என்ரை மூளையெல்லாம் கலங்கி இந்த உலகத்தின்ரை நினைப்பே இல்லாமல் போயிடும்..."

அந்த குடிசை வீட்டின் செத்தையில் கட்டித் தொங் விடப்பட்டிருக்கும் ஐந்து புகைப்படங்கள்.

அந்தப் படங்களில் குகதாஸனின் பார்வை ஊர்ந்து வருகின்றது.

"அம்மா..." உணர்ச்சி வசப்பட்ட குகன் தனது தலையில் அடித்துக் கத்துகிறான்... இரவின் அமைதியை குத்திக் குதறி... சங்காரம் செய்கிறது அவனது குரலின் துயரக் கூர்கள்.....

தனது குடும்பத்திற்கேற்பட்ட பரிதாப முடிவு...

இதற்குக் காரணம்...

'சகோதரங்கள் போல் பழகிய சிங்களக் கூட்டம்!...

இனவெறி!....

குகனின் உடலிலுள்ள குருதியெல்லாம் உறைந்து கட்டியாகி..

குகதாஸன் எவ்வளவோ நிதானமானவன் தான் ஆனால், சில சந்தர்ப்பங்களில் தாயோடு சேர்ந்து சாதாரண மனித இயல்புக்கு அடிமையாகி விடுகின்றான்.

சில நிமிடங்களில் சரியான பாதைக்கு வந்து விடுவான்.

குகதாஸன் அறிவுப் பாதையில் உணர்வை வழி நடத்துகின்ற மனப்பக்குவமும், பலமும் மிக்கவன்...

சில சந்தர்ப்பங்களில் பெற்ற தாயின் கண்ணீரை கண்டு இப்படியாகி விடுகின்றான்.

".....அம்மா....." சில நிமிடங்களுக்கு முன்பு கத்தியவன் இப்போது அமைதியாக அழைக்கிறான்.

"என்ன குகன்..."

"நான் ஒண்டு சொல்லுறன் செய்யிறியா."

"என்ன"

“நீ உன்ரை ஆசையை விட்டிடு...”

என்றோ இதைக் கூறவேண்டும் என்ற நினைத்தவன் தாயின் மனம் புண்படும் என்பதற்காக கூறாமல் இருந்தான். ஆனால் தாயோ தனது எண்ணத்தை விடுவதாக இல்லை. இனிமேலும் அவளது ஆசையை வளர்க்காமல் இன்றோடு அதற்கொரு முற்றுப் புள்ளி வைத்து விட வேண்டுமென்ற முடிவோடு இப்படிக் கூறுகின்றான்.

குகனின் பேச்சைக் கேட்ட சின்னம்மா கலங்கி விட்டாள்!

“என் குகன் சொல்லுறாய்”

“நீ உன்ரை ஆசையை விட்டிடு...!

“அப்ப இவ்வளவு காலமும் என்ரை தலையிலை அடிச்சுச் சத்தியம் பண்ணினது...”

“...அது உனக்காக...”

“குகன் என்னை ஏமாத்திப் போடாதை... நான் பாடையிலை போறதுக்கு முன்னம் எனக்குள்ள ஒரேயொரு ஆசையை நிறைவேற்றிப் போடு...” நடுங்குகின்ற இரு கைகளையும் இணைத்து... கும்பிட்டு யாசிக்கின்றாள்....

அவளது கண்கள் பனித்து முத்துப் போல் இரண்டு துளிகள் அவளது மூக்கருகில் வழிகிறது...

மகாபாரதத்தில் குந்தி தான் பெற்ற மகனான கர்ணனிடமத் யாசித்தது போல்...

மகாபாரதத்தில் கர்ணன் ‘நட்புக்கு’ கட்டுப்பட்டான்.

இங்கு குகன்.

‘போராட்டத் தர்மத்துக்கு’ கட்டுப்பட்டு நிற்கிறான்.

“குகன்... என்ரை ஆசையை நிறைவேற்றிப் போடு”

சின்னம்மா திரும்பத் திரும்பக் கேட்கின்றாள்.

"குகன்... என்ரை ஆசையை நிறைவேற்றிப் போடு"

சின்னம்மா திரும்பத் திரும்பக் கேட்கின்றாள்.

குகனால் பேச முடியவில்லை.

இராமயணத்தில், கங்கைக் கரையில் இராமன் சந்தித்த குகனின் நேர்மையைப் போல்....

சின்னம்மாவின் பேச்சோடு அந்தக் குடிசையில் துயர் கலந்த ஒரு அமைதி படர்கின்றது.

சின்னம்மாவின் ஆசை...

...ஒரு சிங்களக் குடும்பத்திலுள்ள அனைவரையும் கொன்று தீயிலிட்டு... அவைகள் வெந்து வெடிப்பதைப் பார்க்க வேண்டும்.

இது தான் சின்னம்மாவின் ஆசை!

துரியோதனன் சபையில் தனக்கு துயில் உரிந்த துச்சாதனனின் இரத்தத்தை தனது கூந்தலில் தடவிய பின்பே தனது கூந்தலை அள்ளி முடிப்பேனென்று திரௌபதை சபதம் செய்தது போல்...

சின்னம்மாவும் இரண்டு வருடங்களுக்கு முன்பே இந்தச் சபதத்தை செய்திருந்தாள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு...

இக்கிராமத்திலிருந்து பத்து மைல்களுக்கப்பாலுள்ள 'புடவைக் கட்டு' கிராமத்தில் சின்னம்மா குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

சின்னம்மா, சின்னம்மாவின் தகப்பன் முத்தையாவுக்கு கூட இப் புடவைக் கட்டுக் கிராமம் தான் பிறப்பிடம்.

சின்னம்மா கணவன் கிட்டிணன் கோபாலபுரக் கிராமத்தைச் சேர்ந்தவர்.

சின்னம்மாவுக்கு நான்கு பிள்ளைகள் மூத்தவன் குகதாஸன், அடுத்த மூன்றும் பெட்டைக் குஞ்சுகள்.

சின்னம்மா இயல்பில் மிகப் பயந்தவள். குஞ்சை மிதிக்கின்ற தாய்க் கோழியின் 'நோவற்ற' அந்த மிதிப்பை கண்டு கூட மனம் தாங்க மாட்டாதவள்.....

அப்படிப் பட்டவளின் மென்மையான இதயத்தில்... பழுக்கக் காய்ச்சிய எழுதுகோலால் ஒரு துயர காவியம் வரையப் பட்டிருக்கிறது.

அந்தச் சம்பவத்தை பத்திரிகையில் செய்தி வடிவில் பார்த்தவர்களாலேயே மறந்து விட முடியாது.

அந்தச் சம்பவம்.

அந்த நாள்

இலங்கை பூராவும் இனக்கலவரம்.

நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

குகதாஸன் தகப்பனாரின் கிராமமான கோபாலபுரத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே சென்றவன். திரும்ப முடியாமல் நின்று விட்டான். ஏனையோர் அனைவரும் இருந்தனர்.

மழையில்லாமல் வயலில் பயிர்கள் கருகிச் சாவதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர். மண் பார்த்த மக்கள் வேற எதைப் பற்றிப் பேசுவார்கள்...

அரசியல் 'காண்டத்தில்' தேர்தல் 'படலம்' வந்தால் மட்டும் புரிந்தோ, புரியாமலோ, ஏதோ சில அரசியல் கருத்துக்களை உச்சரிப்பார்கள்.. அதைவிட அரசியல் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது.

மண்....

மண்ணில் விளைகின்ற பயிர்...

பயிருக்கான மழை...

ஒரு சாண் வயிற்றோடு ஆயுள் முழுவதும் போராடுகிறவர் களின் பட்டியலில் இவர்களும் அங்கத்தவர்கள்.

இரவு பன்னிரெண்டு மணியிருக்கும்.

பயங்கர உறுமலோடு மிகப்பெரிய வாகனம் ஒன்று அவர்கள் வீட்டுப் படலையில் வந்து நின்றது.

சகலரும விழித்துக் கொண்டனர்.

வயலுக்குத் தேவையான பசளைக்கு காசு கட்டியிருந்தனர். 'பசளை' தான் வந்திருக்கிறதெண்டு சகலரும் நம்பினார்.

"கிட்டிணன்..." யாரோ ஒருவரின் குரல், அந்தக் குரலுக்குரிய வரைக் சின்னம்மா இனங்கண்டு கொண்டாள்.

"உதார் பியசேனாவே..." சின்னம்மா கேட்டாள்.

பியசேனா இந்தக் கிராமத்தையே பிறப்பிடமாக கொண்டவன். சின்னம்மா குடும்பத்தோடு சகோதரம் போல் பழகியவன்.

சின்னம்மாவின் தகப்பன் முத்தையா அரிக்கன் லாம்பைத் தீண்டி கையிலெடுத்துக் கொண்டு படலையை நோக்கி வந்தான்.

அவனைப் பின்தொடர்ந்து, சின்னம்மாவின் புருஷன் கிட்டிணனும், கிட்டிணனைப் பின் தொடர்ந்து மூன்று பிள்ளைகளும் வந்தனர்.

அரிக்கன் ல்ாம்பின் வெளிச்சத்தில் வந்தவர்களை நன்கு தெரிகின்றது.

பண்டா....

பியசேனா...

ரூபசிங்கா...

மகிந்தபாலா... இவர்களோடு காக்கி உடுப்புப் போட்ட பலர்... இவர்களைத் தெரியவில்லை.

இப்போது

சின்னம்மாவின் மனதில் ஏதோவொரு சந்தேக மொட்டு இலேசாக கட்டவிழ்கின்றது.

அவள் வீட்டு முற்றத்திலேயே நிற்கின்றாள்.

"அவன் தான் கிட்டிணன்" பியசேனா கிட்டிணனை இனங்காட்டுகிறான்.

'காக்கிச் சட்டைகள் சிங்களத்தில் ஏதோ பேசுகின்றனர்... கிட்டிணன் அதைப் புரிந்து கொள்வதற்கு முன்னால்...

பூமியை நோக்கியிருந்த துப்பாக்கி முனைகள் மண்பார்த்த அந்தக் கூலிகளின் மார்புகளை நோக்கின....

இயமன் கூட இனவெறி கொண்டவனோ என்னவோ அவன் கூட தன் 'பாசக்காயிற்றை' அவர்களிடம் கொடுத்து விட்டான்!

கோர்வை வெடிகள் வெடிப்பதுபோல் துப்பாக்கிகள் வெடித்தன... மண் புழுக்களின் மார்புகள் இனவெறியரின் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக... மண்ணில் சரிந்தனர்....

சின்னம்மா திடுக்கிட்டாள்... பின்புறமாக ஓடினாள்... வயல் வெளியையும் கடந்து... காட்டுக்குள் வந்து விட்டாள்.

ஒரு மரத்தடியில் நின்ற அவள், அந்தக் களைப்பிலும், தான் வந்த திசையை ஆவலோடு பார்க்கிறாள்.

தனது குடும்பத்தவர்களும் தன்னைப் போல் ஓடி வந்திப்பார் களென்ற எண்ணம்.

அவர்களது உடலை விட்டு உயிர் போயிருக்கும் என்று அவளால் எண்ண முடியவில்லை.

சில நிமிடங்கள் வரை எட்டி, எட்டிப் பார்த்தாள் ஏமாற்றந்தான்..

தகப்பன்... புருஷன்... பிள்ளைகள்... உதிரத்தை அடிநாதமாகக் கொண்ட உறவுகள்... தலை சுற்றி... நினைவிழந்து... அவள் விழுந்து விட்டாள்...!

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தின் பின் அவள் கண் திறந்தாள்.

திரும்பவும் வீட்டெண்ணம்

எழுந்து வீட்டை நோக்கி நடந்தாள், அவளால் நடக்கவும் முடியவில்லை.

நடந்து கொண்டே தனது வீட்டுத் திசையை நோக்கினாள்... வீடு எரிந்து கொண்டிருப்பது நன்றாகத் தெரிகின்றது... நடக்க முடியாமல் நடந்த அவள் திரும்பவும் ஓடத் தொடங்கினாள்... வீட்டில்...

எரிகின்ற வீட்டிற்குள்...

தகப்பன்... புருஷன்... பிள்ளைகள் மூன்று... இவர்களோடு நாய்.. கோழிகள்... சகலதும் எரிந்து கொண்டிருந்தன!....

அவளால் என்ன செய்ய முடியும்...? திரும்பவும் ஓடத் தொடங்கினாள்... அங்கிருந்து புருஷனின் கிராமமான கோபாலபுரம் பத்து மைல்... ஓடுவாள், மூச்சு வாங்கி ஓட முடியாத போது நடப்பாள் இப்படியே ஓட்டமும் நடையுமாக... விடிய ஏழு மணியளவில் கோபாலபுரத்திற்கு வந்து குகதாஸனை சந்தித்தாள்.

குகதாஸன் சட்டத்தைக் காப்போரின் உதவியுடன் அங்கு சென்றான்...

...நெருப்புத் தணலில் வேகி, வெந்து வெடித்த மரவள்ளிக் கிழங்குகள் போல... அந்த மனித உடல்கள் வெந்து வெடித்து...

குடலும் சதையுமாய் கிடந்தன!...?

'குளுக்கோஸ் ஏற்றப்பட்ட நோயாளி கண் விழிப்பது போல்' சட்டம் கண் விழிந்தது.

பிறகென்ன... விசாரணை விளக்கம்...?

சட்டம் என்ற இருட்டறைக்குள் 'காக்கிச் சட்டைகளின்' வழமையான 'கண்பொத்தி' விளையாட்டு நடந்தது!...?

சின்னம்மா தான் கண்டவற்றைக் கூறினாள்... முடிவு.

கொலைகாரனைப் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை... புலன் விசாரணை நடைபெறும்... என்ற முடிவை மிகவும் கஸ்டப்பட்டு வெள்ளைத் தாளில் எழுதி முடித்தனர்.

பார்க்கவே முடியாத அந்தப் பிணங்களிற்கு இன்னொரு சுடுகாடு தேவையில்லை என்ற முடிவில் அதே இடத்தில் கட்டைகளை அடுக்கி பிணங்களையும் அடுக்கி... குகன் தீ மூட்டினான்!

ஒரு குடி நிலம், சுடுகாடாகியது!

அன்று அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்ட சின்னம்மாவும், குகதாஸனும் திரும்பவும் வரவேயில்லை!

இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன.

சின்னம்மாவின் ஆசை....

....நம்மை வஞ்சித்த ஒரு சிங்களக் குடும்பத்திலுள்ள அனைவரையும் கொன்று... வீட்டுக்கு தீ மூட்டி அந்தப் பிணங்களை அந்தத் தீயிலிட்டு... அவைகள் வெந்து வெடிப்பதைப் பார்க்க வேண்டும்... அதிலும் அடுப்புக்குள் மரவள்ளிக் கிழங்கைப் புரட்டி புரட்டிச் சுடுவது போல் தானே அந்தப் பிணங்களை புரட்ட புரட்டிச் சுடவேண்டும்.

...இதுவரையில் தலையில் அடித்து சத்தியம் செய்த குகன் இன்று மறுத்துவிட்டான்.

“சகோதரம் மாதிரிப் பழகிப் போட்டுத்தானே இந்தச் சிங்களவர் எங்கடை குடும்பத்தை எரிச்சவங்க.. இவர்களை கண்ட கண்ட இடங்களிலே வெட்டி விழுத்தினாலும் பாவமில்லையடா...” சின்னம்மாவின் வார்த்தைகள் துயரத்தில் மூழ்கி வருகின்றன.

“...அம்மா உனக்கிருக்கிற பாசத் துடிப்பு எனக்கில்லாமல் இல்லை... எனக்குள்ளேயே நான் அழுது கொண்டிருக்கிறேன்... உன்னைப் போல பழி வாங்க வேணுமெண்ட எண்ணம் எனக்குமிருக்கு... அதைச் செய்ய முடியாமலில்லை... ஆனால் அது பிழையான முடிவு...” கண்ணுக்குள் முள்ளெடுக்கின்ற ஒரு டாக்டரின் அவதானத்தோடு குகதாஸன் கூறுகின்றான்.

“அதிலை என்னடா பிழையிருக்கு... நீதி நியாயம் இல்லாத வங்களிட்டை... நீதி, நியாயம் இல்லாமல் தானடா நடந்து கொள்ள வேணும்...” சின்னம்மாவின் இதயத்தில் ஜீரணிக்க முடியாத துயரச் சுமை!

“அம்மா... இது தனிப்பட்ட பிரச்சினையில்லை... இந்த நாட்டுப் பிரச்சினை...”

“...எனக்கு உந்த விளக்கமெல்லாம் தேவையில்லை... என்ரை ஆசையை நீ நிறைவேற்றப் போறியா இல்லையா...” சின்னம்மா திரும்பவும் பிரச்சனையின் மையத்துக்கு வருகின்றாள்.

“...அம்மா... உன்ரை ஆசை நியாயமற்றதாக இருக்கும்போது.. நான் அதை எப்பிடி நிறைவேற்றிறது...? ஒரு புறம் தாய்ப்பாசம் மறுபுறம் அரசியல் நீதி... இருதலைக் கொள்ளி போல் அவதிப்படுகின்றான் குகதாஸன்.

“அப்பிடி என்ன அநியாயத்தையடா கண்டிட்டாய்”

“...எய்தவன் இருக்க அம்பை நோகலாமா...”

“...நீ சொல்லுறதை விளக்கமாய்ச் சொல்லு...”

“இதுக்கெல்லாம் காரணம் இந்த நாட்டின் ‘நாணயக் கயிற்றை

பிடித்திருக்கிறார்களே'' அவர்கள்தான் பொக்கிசங்களிலிருந்து 'புத்தகங்கள்' வரை அழிப்பித்ததும் இந்தச் சூத்திரதாரிகள்தான் வண்டிலை இழுக்கின்ற எங்களைப் போன்ற 'மாடுகள்' எங்கள் எதிரிகளல்ல வண்டிலின் ஆசனப் பலகையில் அமர்ந்து நாணயக் கயிற்றைப் பிடிப்பவர்கள்தான் தான் எங்கள் எதிரிகள்...'' குகதாஸன் மிகவும் விரிவாகவும், சுருக்கமாகவும் கூறுகின்றான்.

சின்னம்மா, குகதாஸனின் பேச்சைக் கேட்டிருக்க வேண்டும். அவள் மௌனமாக இருக்கின்றாள்.

"அம்மா... உன்ரை ஆசைப்படி நான் ஒரு சிங்களக் குடும்பத்தை அழிப்பதாக வைத்துக் கொள்... எங்கடை குடும்பத்திலை தற்செயலாக நீ தப்பியதை போல், அக்குடும்பத்திலையம் ஒரு தாய் தப்பி விட்டால்... உனக்கும், அந்தத் தாய்க்கும் வித்தியாசம் இருக்குமா..."

சின்னம்மா தலையை நிமிர்த்தி குகனை பார்க்கிறாள்... அவளது கண்கள் அகல விரிந்து... இலேசாகப் பனிக்கின்றது... மனித உணர்வின் வெளிப்பாடு!

"குகன் நீ சொன்னதை இன்னுமொருக்கா சொல்லு... சின்னம்மா ஆவலோடு கேட்கின்றாள்.

"நாம் வெல்ல வேண்டியது நாணயக் கயிற்றை பிடித்திருப்பவர்களை..."

சின்னம்மாவின் முகத்தில் பழிவாங்கும் உணர்வு சிறுகச் சிறுக மறைகின்றது.

ஆனால்

குடிநிலம் சுடுகாடாக்கப்பட்ட அந்தச் சம்பவத்தை அவளால் ஜீரணிக்க முடியுமா...?....

அவள் அழுகின்றாள்.

சுடர் வைகாசி - ஆனி 1982

---

5

# சூடுகள்

சிலுவையில் அறையுண்டு கிடக்கும் யேசுவைப் போல, இரண்டு கைகளும் யன்னல் கம்பியில் கட்டப்பட்டு முகமெல்லாம் வியர்த்து கண்களிலிருந்து கண்ணீர் வடிய அவன் நிற்கின்றான்.

உலகத்தை இரட்சிக்க வேண்டுமென்ற யேசுவின் முகத்தில் காணப்பட்ட கருணை உணர்வு, அவன் முகத்திலில்லை.

உலகத்தால் வஞ்சிக்கப்பட்ட விரக்தி உணர்வும் என்ன நடக்குமோ என்ற பய உணர்வுமே அவன் முகத்தில் படிந்திருந்தது!

சூசைநாயகம் இப்படி ஒரு காட்சியை எதிர்பார்க்கவில்லை.

சிலுவையில் யேசு தொங்குவது போல், யன்னல் கம்பியில் கட்டப்பட்டிருக்கும் அவன் சேகுவன் இந்த வீட்டின் வேலைக்காரன்.

இதை யார் செய்திருப்பார்கள் என்பதை மட்டும் சூசைநாயகத்தால் தீர்மானிக்க முடிந்ததே தவிர, என்ன நடந்திருக்கு மென்பதை அவரால் தீர்மானிக் முடியவில்லை!

"அப்பா... அம்மாதான் சேகுவனை இப்படி யன்னல் கம்பியிலை கட்டிப் போட்டவ..." சூசைநாயகத்தின் மகன் அமலன் கூறுகின்றான்.

"எப்ப கட்டிவை"

"காலமை..."

இப்போது ஒரு மணி... இதுவரையும், இவன் சேகுவன்... பச்சைப்பாலன் இப்படி தான் நிற்கிறானா...?

"ஏன் கட்டிப் போட்டவ..."

"சேகுவன் பிஸ்கற்றை களவெடுத்துத் திண்டானாம்.."

"ஆர் கண்டது..."

"அம்மாதான் கண்டவவாம்..."

சூசைநாயகம் மௌனமாக நிற்கின்றார்...

சேகுவன் தலையை நிமிர்த்தி சூசைநாயகத்தைப் பார்க்கின்றான்... சூலைநாயகத்தின் கருணை உள்ளத்தைச் சேகுவன் நன்கறிவான்...

சேகுவனின் உள்ளத்தில் வேதனை நிரம்பித் தளம்பி... வாய்விட்டுக் கதறி அழுதால், வீட்டுக்கார அம்மா அடித்து விடுவாள் என்ற பயத்தில் வாய்விட்டும் அழ முடியாமல் பொங்கி வந்த வேதனையை அடக்கிவிட, அவனது உதடுகள் துடித்து கண்ணீர் மாலையாக வழிகின்றது!

"வயது பதினொன்று கறுத்த மெலிந்த உருவம், பறட்டைத்தலை, குழி விழுந்து பருத்த கண்கள்..." பேத்தை வயிறு... வேலைக்கார இலட்சணங்களில் ஒன்று கூடத்தவறாத தோற்றம்.

சூசைநாயகத்திற்கு சேகுவனிடம் இரக்கமுண்டு, இவனது வேலைக்கார இலட்சணங்களைப் போக்கிவிட அவரும் முயற்சி செய்து பார்த்து விட்டார். முடியவில்லை!

உடலோடு கலந்த இலட்சணங்கள்!

சூசைநாயகத்தின் மனைவி மேரி... சூசைநாயகத்தின் போக்கிற்கு நேர் எதிரானவள்...

இரக்கமில்லாதவளல்ல - அந்தஸ்துக்கேற்றபடி அவரவரை நடத்த வேண்டுமென்று விரும்புகிறவள் அதையெ நடைமுறைப் படுத்தியும் வருகின்றாள்.

இயல்பான சில காரணங்களினால் சூசைநாயகம் குடும்பத் தலைவனானாலும் இக்குடும்பத்தில் "நாணயக் கயிற்றை" மேரி தான் பிடித்திருந்தாள்.

அநேகமான குடும்பங்களில் இருந்து வருகின்ற "பகிரங்கமான" - "இரகசியம்"!

ஆனால், சூசைநாயகம் நிதானமானவர் - எதையுமே நிதானமாகத்தான் செய்வார்.

"...சேகுவன்... நீ பிஸ்கற் களவெடுத்தியா..."

"...ஆமாங்க..."

"பசியிலை எடுத்தியா..."

"இல்லைங்க"

"ஆசையிலை எடுத்தியா..."

"ஆமாங்க..."

"...எனிமேல் இப்படியெல்லாம் செய்ய மாட்டனெண்டு மன்னிப்புக் கேட்கிறியா..." இதன் மூலம் அவனை விடுவிக்கலாம் என்றொரு எண்ணம் அவருக்கு.

"மன்னிப்புக் கேட்டிட்டனுங்க" அழுதபடி சேகுவன் கூறுகின்றான்.

சூசைநாயகம் அசந்து போய்விட்டார்! குற்றத்தை ஒப்புக் கொண்டு, மன்னிப்பும் கேட்ட பின்பும்...

...பிறருடைய தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்தி செய்யத்தான் வேலைக்காரர்களுக்கு உரிமை இருக்கின்றதே தவிர... வேலைக்காரர்கள் ஆசைப்படக் கூடாதென்பதைச் சேகுவனால் உணர முடியுமா?

...அப்பா சேகுவன் அம்மாவின்ரை காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்டவன்... அம்மா தான் கொள்ளிக் கட்டையாலை சேகுவனை அடியடியெண்டு அடிச்சவ... சேகுவன்ரை முதுகைப் பாருங்கோ... தெரியும்... சூசைநாயகத்தின் மகன் அமலன் கூறுகின்றான்.

சூசைநாயகம், சேகுவனின் குதுகைப் பார்க்கின்றார்... வயலிலுள்ள வரம்புகள் போன்ற வீக்கங்கள்...!

"...அப்பா... அம்மா வாறதுக்கு முந்தி சேகுவனை அவிட்டு விடுங்கோ எங்கேயெண்டாலும் ஓடட்டு" அமலன் கூறுகிறான் - அமலனுக்கும் சேகுவனுக்கும் ஒரே வயது... தோற்றத்தில், வளர்ச்சியில், வசதியில்... இரண்டு பேரும் மாறுபட்டு நிற்கின்றனர்.

"அப்பா... குனியுங்கோ ஒரு கதை சொல்றன்..." சூசைநாயகம் பக்கத்திலிருந்த கதிரையில் அமர, அமலன் அவரது காதுக்குள் இரகசியம் கூறுகின்றான்.

"...அப்பா... அம்மா அடுப்புக்கை இரும்புக் கம்பி வெச்சிருக்கிறா... சேகுவனைச் சுடப் போறாவாம்..."

...முட்களால் செய்யப்பட்ட முடியை யேசுவின் தலையில் இறுக்கினார்களே... அதைவிடக் கொடுமை!...

"...ஏனப்பா அண்டைக்கு எங்கடை மாட்டுக் கண்டுக்கு குறிசுட்டாங்களே... அது மாதிரித்தான் சேகுவனுக்கும் அம்மா சுடப்போறாவா..." அமலன் இதையும் இரகசியமாகவே கேட்கிறான்.

மிருகங்களுக்குத்தான் குறி சுடுவது வழக்கம்...

மனிதனுக்கும் குறியா?...

மனிதனையம் மிருகத்தையும் இந்தச் சமுதாயம் சமப்படுத்தி விட்டதா?...

"அப்பா சேகுவனை அவிட்டு விடுமா..." அமலன், சூசைநாயகத்தின் நாடியைப் பரிவோடு தடவுகின்றான்.

சூசைநாயகமும் அப்படித்தான் யோசிக்கின்றார். வீட்டை விட்டு ஓடி... ஏதாவது விபரீத முடிவை அவன் தேடிக் கொண்டால்...

தவறு நடந்த பின்தானே சமுதாயமும், சட்டமும் கண் விழிக்கின்றன!

சூசைநாயகம் மௌனமாகவே இருக்கின்றார் அமலன் அவரைவிட்டு அகல்கின்றான்.

சேகுவன்

பிறந்த மண்ணில் வாழ்வு தேடியலைந்து, தோல்வி கண்டு - விரக்தி கொண்டு கட்டு மரங்களைக் கட்டிப் பிடித்து - கடலலைகளோடு போராடி இலங்கை மண்ணில் தஞ்சம் புகுந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் இவனும் ஒருவன்.

இலங்கையின் மத்திய பிரதேச, மலைநாட்டிற்கு இவர்கள் வழி நடத்தப்பட்டனர். மண்பரப்பில் கிடைக்காத வாழ்க்கை - மலைப் பிரதேசத்தில் கிடைக்குமென நம்பினார்களோ - என்னவோ?...

மலையகத்தில் நகர்கின்ற நத்தைகளைப் போல் இவர்களது வாழ்க்கையும் நகர்ந்து கொண்டிந்த போது...

இனக்கலவரம் தோன்றியது....

"ஆண்டிகளாய்" வாழ்ந்தவர்கள். இன வெறியர்களால்,

சூறையாடப்பட்டு - "ஓட்டாண்டிகளாகி"... அகதிகளாய் ஆடுமாடு களைப் போல் லொறிகளில் ஏற்றப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டனர்.

"நம்மினத்தவரை நாடிப் போகின்றோம் என்ற ஒரே மனநிறைவோடு இங்கு வந்தவர்களுக்கு" நம்மவர்கள் வழங்கிய நீதி?.
இங்குள்ள நிலச் சொந்தக்காரிடம் அவர்களைக் கையழித்தனர்... "முத்திரை குத்தப்படாத அடிமைகளாக!..?

மலையகத்தில் "நத்தை போல்" நகர்ந்த, இவர்கள் வாழ்க்கை - இங்கு "செக்கு மாடு போல்" சுற்றத் தொடங்கியது!... இரவு பகலாக வேலை!...?

அப்போது தான் "சில பிரமுகர்கள்" சேகுவனை சூசைநாயகத்திடம் வேலைக்காரனாக ஒப்படைத்தனர்... சூசைநாயகம் முதலில் மறுத்து விட்டார்.

"தஞ்சம் இன்றி வந்தவர்களுக்குத் தஞ்சம் கொடுக்க முடியாவிட்டாலும், அவர்களின் கண்ணைக் குத்தக்குடாது" என்று தான் அவர் கூறினார்...

ஆனால், மேரியின் பிடிவாதத்தால் சேகுவனுக்கு வேலைக்காரன் பதவி வழங்கப்பட்டது!

கதிரையில் அமர்ந்திருந்த சூசைநாயகம் எழும்பி வந்து சேகுவனைப் பார்க்கின்றார் மக்களை விடுதலையாக்க வேண்டுமென்று ஒரு கூட்டம் கோசம் போடுகின்றது. விடுதலை பெறாத அந்தக் கூட்டத்திற்குள்ளேயே அடிமை முத்திரை குத்தப்படும் செயல்கள்...!...?

"உன்னைப் போல் பிறரையும் நேசி" என்று கூறிய யேசுவைத் துதிப்பவர்கள் நாங்கள்...? யேசுவின் போதனைகளின் மதிப்பு?...!

"ஐயா... என்னை விட்டிங்கோ... நான் எங்கையாவது போயிடுறனுங்க" அவன் கெஞ்சுகிறான்.... கண்களில் ஓயாத கண்ணீர்!

சூசைநாயகம் குசினியை நோக்கி நடக்கின்றார்... மேரி அங்குதான் நிற்கிறாள்.

குசினிக்குள், மேரி இரும்புக் கம்பியை அடுப்புக்குள் வைத்து - அது சிவக்கும்வரை காத்து நிற்கிறாள்...

"மேரி... நான் சொல்றதைக் கேள் உன்னாலை அவனைத் திருத்த முடியா - அவன் இப்படித்தான் செய்வான்... உனக்கு அவனிலை பிடிக்காட்டி விட்டிடு... அவன் எங்கையாவது போகட்டு"

"களவெடுத்த கையிலை ஒரு குறி வைச்சு விட்டால் இனிமேல் அவனுக்கு களவு எடுக்கிற எண்ணம் வெராது"

சேகுவன் தனது ஆசையை அடக்க வேண்டும். அல்லது அறுத்தெறிய வேண்டும்... மேரி இதைத்தான் எதிர்பார்க்கின்றாள்...?

சேகுவனால் முடியுமா...?

"மேரி... நீ உள்ளன்போடுதான் சேகுவனைத் திருத்த நினைக்கிறியா..."

மேரி எதுவுமே பேசவில்லை.

"மேரி... அண்டைக்கொருநாள் கதிர்காமர் இந்த வீட்டிலை நடந்து கொண்ட விதம் உனக்கு நினைவிருக்கா..."

அன்றொருறநாள் இந்த வீட்டில் நடைபெற்ற களவு விஷயம் பற்றி சூசைநாயகம் குறிப்பிடுகின்றார்.

அந்தச் சம்பவம்

கதிர்காமர் வயதில் முதிர்ந்தவர் - இப்பகுதியில் பிரபலமான வர்த்தகர்.

கதிர்காமர் வந்த நேரத்தில் மேரியும் பிள்ளைகளும் குசினிக்குள் நின்றனர், சூசைநாயகம் அறைக்குள் நின்றார்.

அறைக்குள் நின்ற சூசைநாயகம், மனித அரவம் கேட்டு கதவு இடைவெளிக்கூடாக வாசலை நோக்கினார்...

அங்கு நின்ற கதிர்காமர் அங்குமிங்கும் பார்த்து விட்டு, நிலத்தில் கிடந்த ஒரு பேனையை எடுத்து தனது கைப்பைக்குள் திணித்துக் கொண்டார்.

சில நிமிடங்களுக்கு முன் சூசைநாயகத்தின் மகன் வைத்திருந்து விளையாடிய பேனை தவறுதலா அந்த இடத்தில் விட்டுவிட்டான்!

சூசைநாயகம் அதிர்த்து போய் நின்றார்...

வயது முதிர்ந்த - வசதி படைத்த கதிர்காமர் இந்தப் பேனைக்கு ஆசைப்பட்டு... களவு!

கதிர்காமருக்கு வழமையான வரவேற்பு வழங்கப்படுகின்றது... கதிர்காமரின் முகத்தில் எந்தச் சலனமுமில்லை.... ஆனால் சூசைநாயகத்தின் முகத்தில் வழமையான உணர்வுகளில்லை!

சூசைநாயகம் இரகசியமாக மேரிக்கு நடந்ததைக் கூறுகின்றார்.

சம்பவத்தை நம்பாமல் இருக்க முடியாது! சூசைநாயகம் கண்கண்ட காட்சியாக நிற்கிறாரே!...

"ஒரு பேனைதானே... அவர் கௌரவமானவர்... போனால் போகட்டு...." இப்படித்தான் மேரி கூறினாள்.

"அடிக்கடி வந்திட்டும் போங்கோ..." மேரி, வழமைபோல் கதிர்காமருக்கு விடை கொடுக்கின்றாள். கதிர்காமர் எந்தச் சலனமுமின்றி களவுப் பொருளுடன் வெளியேறுகின்றார்.

நடந்து முடிந்த அந்த "அசிங்கமான" சம்பவம் இரைமீட்கப் படுகின்றது.

"மேரி... நல்லாய் யோசிச்சுப்பார்... கதிர்காமம் ஒரு கள்ளன்... கதிர்காமர் கௌரவத்தைக் காப்பாற்ற நினைக்கிறாய்... சேகுவன்

உலகம் புரியாதவன் ஏதோ ஆசையிலை செய்து போட்டான்... அவனுக்கு கௌரவம் இல்லையெண்டதுக்காகத்தானே அவனைத் தண்டிக்க நினைக்கிறாய்...

"...அதிகாரமுள்ள நீ... அடக்கப்பட்ட சேகுவனைத் தண்டிக்க நினைக்கிறாய்..."

"களவெடுத்த சேகுவனைத் தண்டிக்கக் கூடாதென்பது தான் உங்கள் முடிவா..." மேரி திடீரென்று கேட்கின்றாள்.

பிரச்சினையின் மையத்திற்கு மேரி வந்து விட்டாள்!

இதுவரை சூசைநாயகம் பிரச்சினையின் மையத்தில் நின்றார். மேரி, பிரச்சினைக்கு வெளியே நின்று விவாதித்தாள்.

இப்போது இருவரும் ஒரே இடத்தில் நிற்கின்றனர்.

"மேரி... பிழை செய்தவன் தண்டிக்கப்படக்கூடாதென்பது எனது நோக்கமல்ல... ஆனால், தண்டனைக்குரியவர் யார் என்பதைக் கண்டு கொள்வதில் தான் நீயும் நானும் வேறுபட்டு நிக்கிறம்!...

...சேகுவன்ரை உடலிலை, நமது கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ குறிகளை இந்தச் சமுதாயம் சுட்டிருக்கு..." மேரியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை கேள்விக் குறியோடு சூசைநாயகத்தைப் பார்க்கின்றாள்.

"...பஞ்சப்பட்டவன்" என்றொரு குறி....

"கள்ளத் தோணி" என்றொரு குறி...

"அகதி" என்றொரு குறி...

இவைகளுக்கு மேலால் "அனாதைகள்" என்ற மிகப்பெரிய குறி...

...வீதி ஓரத்தில் ஒரு முளத் துண்டோடு பசி மயக்கத்தில்

கிடப்பவனை, குளிராய் இருக்கு இழுத்துப் போர்த்திக் கொள் என்றால்...

...அவனால் போர்த்திக் கொள்ள முடியுமா?...

மேரியின் சிந்தனை விரிகின்றது... அவள் கண்வெட்டாமல் சூசைநாயகத்தைப் பார்க்கின்றாள்.˙.

"சேகுவன் போன்றவர்களுக்குச் சமுதாயம் என்றோ குறி சுட்டு விட்டது... இப்போது நீ சுட நினைகின்ற குறி...?...!

சேகுவன் தசையைக் கருக்குமே தவிர... அவன்ரை இதயத்தைத் திருத்தாது!...

...என்றோ செத்துப்போன ஒருவனை அடிக்க நினைக்கின்றாய்..

"இவர்கள்... திருத்தவே மாட்டார்களா" மேரி ஆவ்லுடன் கேட்கின்றாள்.

"மனித தேவைகள் இவர்களுக்கும் பூர்திதயாகும்போது... திருத்துவார்கள்..."

"உண்மையிலேயே இவர்களின் மணி உரிமைகளைப் பறித்தவர்கள்தான் குறிசுடப்பட வேண்டியவர்கள்..."

சில நிமிடங்கள் மௌனமாக நின்ற மேரி, அடுப்புக்குள் சிவந்து போய்க் கிடந்த இரும்புக் கம்பியை வெளியே எடுத்து ஒரு புறமாகப் போடுகின்றனாள்.

ஆனால்,

தணலை உதிர்க்கின்ற சமுதாயத்தின் சிவந்த நாக்கு... அதன் சூடுகள்...

அந்தக் குறிகள்?....

நிரந்தரமானவைகளா?

வீரகேசரி 13.02.1983

---

6

# மண்வாசனை

நான் ஆசிரியனாகிப் பத்து வருடங்கள். இந்தப் பத்து வருடங்களும் வெளி மாவட்ட சேவை என்ற சட்டத்தோடு 'வாரோட்டம்' நடாத்தி எப்படியோ சட்டத்தை வென்று சொந்த ஊர்ப் பாடசாலை யொன்றைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருந்து விட்டேன்.

இந்த வருடம்.

எனது அரசியல் தீர்க்க தரிசனம் பிழைத்தால் இம்முறை எனக்கு ஏற்பட்ட இட மாற்றத்தை ரத்து செய்ய முடியாமல் போய் விட்டது....

இம்முறை நடந்த தேர்தலில் நான் ஆதரவு காட்டிய வேட்பாளரால் தேசியப் பேரவைக் கதிரையில் குந்த முடியாமல் போய் விட்டதால்....

அதன் பிரதிபலிப்பு....?

இடமாற்றப் பட்டியலில் எனது பெயர் தான் முதலாவது... அதிலும் கஸ்டப் பிரதேசமான மூதூரில் ஒரு பாடசாலை!

தேசியப் பேரவைக் கதிரையில் குந்தியிருக்கும் எனது எதிரியின் கால்களைப் பிடிக்கக் கூடாது என்ற மன வைரக்கியத்தோடு

'வெற்றிகரமாக தோல்வியை ஒப்புக் கொண்டு....' மூதூர் பாடசாலைக்கு வந்து விட்டேன்.

மார்கழி மாத விடுதலையின் பின் இன்று தான் பாடசாலை ஆரம்பம்.

மூதூர் பாடசாலை.

அதிபரின் காரியாலயத்தில் அமர்ந்திருக்கின்றேன்.

திருகோணமலையில் இருந்து கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்கள் கடலில் பிரயாணம் செய்ய வேண்டும்.... பிரயாணம் செய்த அந்த 'அவதியுணர்வுகள்' எனது இதயத்தில் இன்னமும் பூரணமாக மரித்துப் போய்விடவில்லை.

உத்தியோகம் புருஷலட்சணம்.... இந்த அவதிகளுக்காக அந்த லட்சணத்தை விட்டுவிட முடியுமா?

இப்பாடசாலையில் படிப்பிக்கின்ற ஆசிரியர்களை, அதிபர் எனக்கு அறிமுகஞ் செய்து வைக்கிறார்.

அதிபர்

அவர் பெயர் கனகசிங்கம்.

இவரது பெயரை அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்த நினைப்பு எனக்குண்டு. ஏனென்றால் இவர் ஒரு கவிஞன்.

கறுத்தவர், மிக மெல்லியவர், சுருண்ட கேசம், கண்ணாடி... நிலத்தில் விழுந்த பந்து துடிப்பதைப் போன்ற சுறுசுறுப்பு.

சம்பிரதாய பூர்வமாகவும், மனிதாபிமானமாகவும் அதிபருக்கும் எனக்கும் இடையில் சிறு சம்பாஷணை நடந்து முடிகின்றது.

'மாஸ்டர்... உங்களை ஐந்தாம் வகுப்புக்கு பொறுப் பாசிரியராகப் போட்டிருக்கிறன்... பிறகு பாத்துச் செய்வம்...' அதிபரின் வேண்டுகோள் கலந்த கட்டளையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

"ஏதாலும் தேவையெண்டால் சொல்லுங்கோ..?" அதிபர் என்னிடம் கூறுகின்றார்.

"சேர்...." "................"

"சொல்லுங்கோ...."

"....நான் நாளைக்கு ஊருக்கு போகலாமெண்டு நினைக்கிறேன்..."

"...என்ன மாஸ்டர் இப்பதானே வந்தனீங்க"

"உண்மை தான்... என்ரை புள்ளையளைப் பிரிஞ்சிருந்து எனக்குப் பழக்கமில்லை... அதாலை ஊருக்குப் போய் குடும்பத்தை கூட்டி வரப்போறன்."

"சரி.... போட்டு வாருங்கோ..."

"சேர்...."

"சொல்லுங்கோ...."

"இரண்டு மணிக்கு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் இருக்கு... நான் இஞ்சையிருந்து பதினொரு மணிக்குப் புறப்படால் தான் அந்த பஸ்ஸிலை போகக் கூடியதாக இருக்கும்..."

"சரி மாஸ்டர்.... நீங்க பதினொரு மணிக்குப் போங்கோ..." அதிபர் பெருமனதோடு எனது வேண்டுகோளை ஏற்று அனுமதி யளிக்கின்றார்.

எனக்கு பெரும் மனத்திருப்தி

இப்போது ஒன்பது மணி இன்னும் இரண்டு மணித்தியால ங்களை கடத்த வேண்டும் ஆனால் இனியும் அதிபரின் காரியாலய த்தில் அமர்ந்திருப்பது முறையல்ல.

".... சேர் நான் வகுப்புக்கு போகட்டா"

"....நல்லது போங்கோ...."

நான் ஐந்தாம் வகுப்பைத் தேடி நடக்கின்றேன்.

ஐந்தாம் வகுப்பு

"வணக்கம் சேர்....."

"வணக்கம்...." மாணவர்களும் அமர்கின்றனர். நானும் அமர்கின்றேன்.

கிட்டத்தட்ட முப்பது மாணவர்களிருக்கும். புதிதாக வந்த என்னை சகலரும் ஆவலோடு பார்க்கின்றனர்.

"நாளைய சமுதாயத்தை நிர்ணயிப்பவர்கள்..." பத்து வருடங்களாக ஒரே பாடசாலையில் இருந்து பார்த்து புளித்துப் போன முகங்களை 'விட்டு புதிய முகங்களை பார்த்ததாலோ - என்னவோ, என்னையறியாமல் இப்படியொரு எண்ணம் எனது மனதில் தோன்றி மறைகின்றது.

...என்னுடைய பெயர் விபுணசேகரம்... இனிமேல் நான் தான் உங்களுக்கு வகுப்பு மாஸ்டர். நான் என்னை பற்றிய அறிமுகத்தை சுருக்கமாக முடிக்கிறேன்.

"சரி நான் என்னுடைய பெயரைச் சொல்லிவிட்டேன்... இனி நீங்கள் ஒவ்வொருவராய உங்கடை பெயர்களைச் சொல்லுங்கோ..."

'...சிவமுரளிதரன்... தெய்வேந்திரன்... பவதாரணன்... கபிலநாதன்... செந்தூரன்... இப்படியே ஆண்களும் பெண்களும் சொல்கிறார்கள்..."

"இந்த வகுப்பு மொனிற்றர் ஆர்..." நான் கேட்கிறேன்.

"சேர்... என்னும் மொனிற்றர் தெரியவில்லை..." அவள் வாணிசிறீ கூறுகின்றாள்.

"அப்ப ஒரு மொனிறறரைத் தெரிவு செய்வமா..." பதினொரு

மணிவரை இப்படியே நேரத்தை கடத்திவிட முனைகின்றேன்.

ஆசிரியருக்குரிய இலட்சணங்களுள் இதுவும் ஒன்றோ, என்னவோ நேரத்தைப் போக்காட்டுகின்ற தந்திர குணம் என்னிடம் நிறைய உண்டு.

'சரியுங்க சேர்... மொனிற்றர் தெரிவம்... மாணவர்களும் தயாராகுகின்றனர்.

இந்த வகுப்பிலை யார் கெட்டிக்காரன்...

'...கபிலநாதன் சேர்...'

கபிலநாதன் எழும்புங்கோ... நான் கபிலநாதன் தேடுகிறேன்.

கபிலநாதன் எழுந்து நிற்கிறான்.

கறுத்து மெலிந்த, கட்டைத் தோற்றம் சொந்த நிறத்தை இழந்து வெளிறிய ஒரு ரெர்லின் சேட். அதிலும் பல பொத்தல்கள். ஒரு சிறிய களிசான்... சிறு பிள்ளைகள் போல் இன்னமும் முன்னோக்கி வளர்ந்திருக்கும் தலைமயிர்...

சோக்குக் கட்டியில் தொட்டந் தொட்டமாகக் கறுப்பு மை ஊறியிருப்பது போல், அவனது தோற்றத்தில் தொட்டந் தொட்டமாக 'வறுமைப் பிதிபலிப்புகள்' தெரிகின்றன....

எனது மனம் அவனுக்காக பரிதாபப்படுகிறது.

'கபிலநாதனை மொனிற்றராக்குவம்..."

'ஓம் சேர்...' அனேகமானவர்கள் எனது பிரேரணையை ஆமோதிக்கின்றனர்.

இடையில்

புதியதொரு பிரேரணை வெடிக்கிறது.

'சேர்... உவன் வினாயகமூர்த்தி செந்தூரனிட்டை வாங்கித் தின்னிறவன் சேர்... அதாலைதான்... உவன் செந்தூரனைத் தெரிவு செய்யிறான்....' அவள் வாணிசிறீ கூறுகின்றாள்.

'நக்குண்டார் நாவிழந்தார்' அந்த உணர்வா...? அந்தப் பெரிய உணர்வு இந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு வருமா?....

எனக்குள் ஒரு உணர்வுக் குமிழ் வெடிக்கின்றது.

நாக்கு நனைத்ததற்காக நாக்குப் புரட்டுகின்ற.... தப்பிலித்தனம்... வினாயக மூர்த்திக்கு ஏற்படுமா?

எனது மனம் ஏற்றக் கொள்ள மறுக்கின்றது.

'சேர்... நான் மொனிற்றராய் இருக்கிறன்...' அந்த செந்தூரன் எழுந்து நிற்கிறான்.

செந்தூரன்

புத்தம் புதிய சோக்கட்டியின் அழகு, மதாளிப்பு...

'மொனிற்றர்... ஒரு பதவி...'

இவன் செந்தூரன்.... இவனுக்குப் பதவி ஆசையா?

...உலகம் புரியாத வயது... அப்படிப்பட்டவனுடைய செயலுக்கு நான் அர்த்தம் கற்பிக்கலாமா?... இது சிறுபிள்ளைத்தனம்.

நிட்சயமாகப் பதவியாசையல்ல!..."

"அப்ப.... ஆரை மொனிற்றராக்குவம்..." நான் பிரச்சினையைப் பொதுவாக வைக்கிறேன்.

"சேர்... கபிலநாதன் தான் கெட்டிக்காரன் அவன் தான் மொனிற்றர்..."

"சேர் செந்தூரன் வெறும் மொக்கன்... அவனை மொனிற்ற ராக்க வேண்டாம்..."

“கபிலநாதன் கெட்டிக்காரன்.”

“செந்தூரன் மொக்கன்...”

“கபிலநாதன் தான் மொனிற்றர்...”

“செந்தூரன் வேண்டாம்...”

வகுப்பில் பெரும் கலவரம், பெரும்பான்மையான மாணவர்கள் கபிலநாதனை ஆதரிக்கின்றனர்.

வகுப்பில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மையை ஆசிரிய அதிகாரத்தைப் பாவித்து அடக்கி விட நான் விரும்பவில்லை... அப்படியென்றால் முடிவு...? யார் மொனிற்றர்...

ஒரு தேர்தல்...!

மொனிற்றர் பதவிக்கான தேர்தல்!....?

இவர்கள்... இந்த மாணவர்கள்... நாளைய மனிதர்கள்... நாளைய சமுதாயத்தில் இவர்கள் அங்கம் வகிக்கப் போகும் நிசமான தேர்தலுக்க... இன்று ஒத்திகை நடாத்தப் போகிறேனா...? எனது மனம் கூசுகின்றது...!

ஏன்?....

தேர்தல் சாக்கடையை முடறு முறித்துப் பல தடவை குடித்த... அனுபவம் எனக்குண்டு.

இந்தச் சமுதாயத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட உணர்வு உலகம் புரியாத இந்தச் சிறிசுகளின் செயல்களுக்கு மிகப்பெரும் அர்த்தங்களைக் கற்பித்து நானே எனக்குள் அவதிப்படுகிறேன்.

“சரி போட்டி வைப்பம்...” நான் கூறுகின்றேன்.

“என்ன போட்டி சேர்”

"...முதலிலை கபிலநாதனை விரும்பிறவை உங்கடை வலது கையை உயர்த்துங்கோ... ஆருக்குக் கூடவோ அவன்தான் மொனிற்றர்..."

"சரி சேர்..."

"கபிலநாதனை மொனிற்றராக்க விரும்புறவை வலது கையை உயர்த்துங்கோ..." நான் கூறுகின்றேன்.

தொண்ணூறு வீதமான கைகள் உயருகின்றன.

கபிலநாதன் மொனிற்றர் என்பதை எனது மனம் தீர்மானித்துக் கொள்கின்றது.

"...சேர் உங்களைப் பிறின்சிப்பல் வரட்டாம்" பெரிய வகுப்பு மாணவனொருவன் வந்து கூறிவிட்டுப் போகின்றான். போட்டியை நிறுத்தி விட்டு நான் அதிபரின் காரியாலயத்தை நோக்கி விரைக்கின்றேன்.

அதிபரோடு கதைத்த நான் பதினொரு மணிக்கு புறப்பட்டு விடுகின்றேன். திரும்பவும் வகுப்பிற்கு போக முடியவில்லை.

ஒரு கிழமை லீவின் பின்.

பாடசாலைக்குத் திரும்பவும் வந்து ஐந்தாம் வகுப்பிற்கு வருகிறேன்.

"சேர்... மொனிற்றர் தெரிவம்..." நான் மறந்து போய் விட்டேன். மாணவர்கள் மறக்கவில்லை. ஒரு கிழமைக்கு முன் இந்த வகுப்பில் நடாத்தப்பட்ட மொனிற்றர் தெரிவு சம்பந்தமான நிகழ்ச்சிகளை எனக்குள் இரை மீட்புக் செய்கின்றேன்.

கபிலநாதன்... செந்தூரன்...

கபிலநாதனுக்காக தொண்ணூறு வீதமான கரங்கள்... கபிலநாதன் தான் மொனிற்றர்...

'...கபிலநாதனை மொனிற்றராக்க விரும்புறவை வலது கையை உயர்த்துங்கோ...' நான் முதலிலிருந்து போட்டியை ஆரம்பிக்கின்றேன்.

...என்னையே என்னால் நம்ப முடியவில்லை...?

...இப்படியும் நடக்குமா... என்ன கொடுமை...!

கபிலநாதனுக்காக ஒரு கை கூட உயர்த்தப்படவில்லை?

சரி... செந்தூரனை மொனிற்றராக்க விரும்புறவை உங்கடை வலது கையை உயர்ந்துங்கோ... என்னை நான் சமாளித்துக் கொண்டு போட்டியை தொடர்கிறேன்.

அநேகமானவர்கள், அன்று கபிலனை ஆதரித்தவர்களும் செந்தூரனை ஆதரித்து தங்கள் கைகளை உயர்த்துகின்றனர்.

கபிலநாதன் தலை குனிந்து நிற்கிறான்.

செந்தூரன் தலை நிமிர்ந்து நிற்கிறான்.

இந்த மாற்றத்திற்குரிய காரண்ம?... சென்ற ஒரு கிழமைக்குள் நடந்ததென்ன?...

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை...?

கபிலநாதன் எப்படித் தகுதியை இழந்தான்?

செந்தூரன் எப்படித் தகுதியை பெற்றான்?

புரியாத புதிர்!....?

போட்டி முடிவுப்படி செந்தூரனை மொனிற்றராக்கின்றேன்.

எவருக்குமே கையுயர்த்தாமல் இருந்த அந்த ஒரேயொரு மாணவன்... அவன் பெயர் பவதாரணன்.

அவன்தான் எனது புதிரை விரிய வைக்கும் கருவி என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன்.

பாடங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன... இடைவேளை வருகின்றது... சரியான நேரம்... நான் பவதாரணனைத் தனிமையில் அழைக்கிறேன்.

"பவன்..."

"சேர்..."

"நீங்கள் ஏன் ஒருத்தருக்கும் கை உயர்த்தயில்லை..."

"எனக்கு விருப்பமில்லைச் சேர்"

"பொய் சொன்னால்... களவு செய்தால் கடவுள் புழுக்கிடங்கிலை போடுவாரெண்டு லில்லி ரீச்சர் சொன்னவ..." கண்களை அகலத் திறந்தபடி அவன் கூறுகிறான்.

"இதிலை என்ன பொய்... களவு..."

"உண்மையிலை கபிலன்தானே சேர் கெட்டிக்காரன்... ஆப்பிடியிருக்க எல்லாரும் செந்தூரனுக்காகத்தானே சேர் கை உயத்தினவை..." அவன் கேள்விக் குறியோடு என்னைப் பார்க்கிறான்.

"ஏனெண்டு உங்களுக்குத் தெரியுமா..."

"தெரியும் சேர்... போன கிழமை முழுக்கச் செந்தூரன் எல்லாருக்கும் கச்சானும், ஐஸ்பழமும், ரொபியும் வாங்கிக் குடுத்தவன் சேர்... தனக்கு கை உயத்தச் சொல்லித்தான் சேர் வாங்கிக் குடுத்தவன்..."

"................." நான் மௌனமாக நிற்கிறேன்.

"எல்லாரும் அவனிட்டை வாங்கித் திண்டு போட்டு... அவனுக்காகக் கையை உயர்த்தினவை... இது பொய்தானே சேர்..."

பவதாரணன் என்னைப் பார்த்துக் கேட்கின்றான் கேட்டவன் சில விநாடிகளின் பின்.

"கபிலன் எவ்வளவு கெட்டிக்காரன் சேர்... பாவம்... மனவருத்தப்படுகிறான் சேர்..." இப்படி வேதனையோடு அவன் கூறுகின்றான்.

'தேர்தல் தர்மம் அதைத்தான் பவன் எதிர்பார்க்கின்றான்... பவன் புரிந்து கொண்டது தேர்தல் தர்மமென்றால்... செந்தூரன் புரிந்து கொண்டது...?...! தேர்தல் தந்திரமா?....!

பவனுக்குத் தர்மத்தைக் கற்பித்தது. லில்லி ரீச்சர்... செந்தூரனுக்குத் தந்திரத்தைக் கற்பித்தது...? மண்வாசனையா?...

ஐஸ்பழம் கச்சான், ரொபி...

'மொனிற்றர்' பதவி!.....?

நாளை....

பணம், சாராயம், அன்பளிப்புக்கள்...

எம்.பி பதவி...! ...?

இந்த மாணவர்கள்....

நாளை விரியப் போகும்

சமுதாயச் சுருக்கங்கள்...!

நாளைய சமுதாயத்தை நான் இன்றே காண்கிறேன்.!

சிரித்திரன் ஆனி 1985

# 7

# பாதுகள் !

இரவு பத்து மணி

ஒரு யூரியா பைக்குள் சில பொருள்கள், கையில் இரண்டு வெடிப் பெட்டிகள் சகிதம் அப்போதுதான் வேதா வீட்டிற்கு வந்தார்.

இன்னும் இரண்டு மணித்தியாலயங்கள் தான் இருக்கின்றன. பன்னிரண்டு மணிக்கு.

மனுக்குலத்தின் மீட்புக்காக சிலுவையில் மரித்து போன யேசுநாதர் - பிறந்த நேரம் நத்தார்.

"குட்டி..." முற்றத்தில் நின்றபடி தனது பேரனைக் கூப்பிடுகின்றார். அவர் எங்கு போய்விட்டு வீட்டுக்கு வந்தாலும், முதலில் பேரனைக் கூப்பிவார். அவனுக்காக ஏதாவது கொண்டும் வருவார்.

"குட்டி" - இது அவனது செல்லர் பெயர் அவனது பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் யூட் என்ற பெயர் குறிக்கப்பட்டிருந்தாலும் இந்த வீட்டிலுள்ள அனைவருமே அவனை 'குட்டி' என்று தான் செல்லமாக அழைக்கின்றனர்.

வேதாவுக்கு ஒரேயொரு மகன், அந்த மகனுக்கு மூன்று பிள்ளைகள், அதில் இருவர் பெண்கள், இளையவன் தான் யூட் அதனால் தான் அவன் மிகவும் செல்லமாக இருந்தான்.

"தாத்தா..." உள்ளே நின்ற யூட், வேதாவின் குரல் கேட்டு ஓடி வந்து கதவைத் திறக்கின்றான்.

வேதா அவனுக்காக வாங்கி வந்த வெடிப் பெட்டிகளை அவனிடம் கொடுத்து விட்டு நுழைக்கின்றார்.

வீட்டின் முன் பக்கத்து மூலையில் அவர் கண்ட காட்சி...

வேதா உண்மையிலேயே திகைத்துப் போய் விட்டார்...! பதினொரு வயதுச் சிறுவனான யூட்டுக்கு இவ்வளவு கலையுணர்வா...? அவரால் மட்டுமல்ல எவராலுமே நம்பவே முடியாது தான்!

ஆனால் யூட் தான் அதனைச் செய்தான்.

ஒரு மேசையில், புல்லோடு வெட்டி எடுக்கப்பட்டு மண் கட்டிகளை ஒழுங்காக அடுக்கி புற்றரை போலாக்கி, அதன் நடுவே தடிகளால் ஒரு மாட்டுக் கொட்டிலை அமைத்து அதன் மேற்பக்கத்தை வைக்கோலால் மூடி அதன் கீழ் யேசு பாலனின் சிலையையும் அத்தோடு சேர்த்து யேசுவின் தாய், தகப்பன், மூவிராசர்கள், இடையர்கள், சம்மனசுகள் என்பவர்களின் சிலைகளையும் வைத்து - அந்தச் சிலைகள் ஐந்தோ ஆறு ஆடுகளின் சிலைகளும் வைக்கப்பட்டிருந்தன.

யேசு பாலன் மாட்டுக் கொட்டிலில் தான் பிறந்தார். அந்தக் காட்சியைத் தான் யூட் சித்திரித்திருந்தான்.

நத்தார் தினத்தில் அனேகமாக கிறிஸ்தவர்களின் வீடுகளில் காணக்கூடிய காட்சி தான். இருந்தாலும் அந்த அமைப்பிலுள்ள கலையுணர்வு!

வேதா ஒரு கவிஞன், அவரது கவியுள்ளம்... அந்தக் காட்சியில் ஒன்றிப் போய் விட்டது.

'குட்டி...' யூரியா பையை கீழே வைத்தபடி அழைக்கின்றார்.

"என்ன தாத்தா...?

"நீங்கள் தான் இதைச் செய்தீங்களா...?"

"...நான் தான் தாத்தா செய்தன்..."

"...வதனாவும், சோபாவும் உங்களுக்கு உதவி செய்ய வில்லையா...?" யூட்டின் மூத்த சகோதரிகள் இருவரும் செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் வேதாவுக்கு.

"இல்லை தாத்தா..."

வேதா அங்கிருந்த கதிரையில் அமர, யூட் ஓடி வந்து அவரது மடியில் அமர்ந்து கொள்கிறான்.

"மேரி..." - வேதா தனது மனைவியை அழைக்கின்றார்.

"என்னப்பா..." குசினிக்குள் ஏதோ பலகாரம் செய்து கொண்டிருந்த மேரி குரல் கொடுக்கின்றாள்.

"குட்டியின்ரை பாலன் பிறப்பு சோடினையை பார்க்கயில்லையா..."

"எப்படியிருக்கு..."

"...உங்கடை பேரன் தானே கலையுணர்வு இல்லாமல் போகுமா...? - மேரி யூட்டின் திறமையை பாராட்டிக் கொள்வதுடன் தனது கணவனின் கலையுணர்வையும் சேர்த்துப் பாராட்டிக் கொள்கின்றாள்.

வேதா -

அவரது முழுப் பெயர் வேதராசா சகலருமே வேதா என்று தான் அமைப்பார்கள்.

சிவந்த - மெலிந்த உடல், கணக்கான உயரம், கவர்ச்சியான

தெத்துப்பல், தினசரி 'ஷேவ்' செய்து முகம் புனிதமாகவே இருக்கும். மகாத்மா காந்தியை நினைவுபடுத்தும் விரிந்த காது, வயது எழுபத்தெட்டு இருந்தாலும் இன்றைய இளம் சந்ததியினரை விட மிகவும் கூர்மையான பார்வை...

இடமறிந்து அளவோடு பேசுகின்ற பண்பு

இவர் தேசிய தினசரிப் பத்திரிகை நிறுவனமொன்றில் பணியாற்றுகின்றார்.

"தாத்தா..."

"யேசுபாலன் பிறக்கிற நேரம் வந்த உடன் இந்த வெடிப் பெட்டியை சுடுவமா?..."

"ஓம்" இது முடிஞ்சாப் பிறகு நாளைக்கும் வெடிப்பெட்டி வாங்கித் தாறிங்களா...'

யூட்டின் எந்த வேண்டுகோளும் இதுவரையில் நிராகரிக்கப் பட்டதில்லை!

யூட் பெரும்பாலும் வேதாவின் தோற்றத்தையே ஒத்திருந்தான் மிகவும் அழகானவன். படிப்பிலும் மிகவும் கெட்டிக்காரன். இந்த வருஷம் மூன்றாம் வகுப்பில் முதலாம் பிள்ளையாகச் சித்தியடைந்திருக்கிறான் ஒன்பது வயதுச் சிறுவன்.

"தாத்தா..."

"என்ன குட்டி" யேசுபாலன் பன்னிரண்டு மணிக்குத் தான் பிறப்பாரெண்டு எங்கடை ரீச்சர் சொன்னவ உண்மையா..."

'உண்மைதான்.."

"பன்னிரண்டு மணி வந்தவுடன் எனக்குச் சொல்லுறீங்களா..." இரவு நேரம் மணிக்கூட்டைப் பார்த்து நேரத்தைக் கணிப்பிட்டுக் கொள்ள, அவனால் முடியாது. அதனால்தான் இப்படிக் கேட்கிறான்.

"பன்னிரண்டு மணி வந்தவுடன் எங்கடை கோயிலில் மணி

கேட்கும்..."

கோயில் மணி அடிக்கிற சத்தம் கேட்டவுடன் வெடி சுட்டுப் போட்டுக் கோயிலுக்குப் போவம்... யூட் கேட்கிறான்.

"குட்டி..." "என்ன தாத்தா..."

"உங்கடை ரீச்சர் யேசுபாலனைப் பற்றி வேற என்ன சொல்லித் தந்தவ...?

யூட் யேசுவைப் பற்றி எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறான் என்பதை அறியவே வேதா இப்படிக் கேட்கின்றார்.

"தாத்தா..." யூட் இப்படித் திடீரென்று அழைத்ததும் ஏதோ ஒரு ஆச்சரியமான கேள்வியை அவன் கேட்கப் போகிறான் என்பதை வேதா தீர்மானித்துக் கொள்கின்றார்.

"என்ன குட்டி..."

"...யேசுபாலனை வெட்டிக் கொலை செய்யிறதுக்காக ஒரு அரசன் தேடித் திரிஞ்சானாமே உண்மையா...?

"உண்மை தான்..."

"பிறகு எப்படித் தாத்தா யேசு பாலன் தப்பினார்"

வேதாவின் தாடையைப் பிடித்தபடி யூட் கேட்கிறான். அந்தப் பிஞ்சு முகத்தில் பரிதாபம் கலந்த ஆவல் உணர்வு நிரம்பி வழிகின்றது.

"அவர் எப்படித் தாத்தா யேசு பாலன் தப்பினார்"

அதுக்கிடையில் மணி அடிச்சுப் போட்டுது அதால ரீச்சர் சொல்லயில்லை..."

யேசு பாலனை கொல்லுறதுக்காக அரசன் தேடித் திரிஞ்சான்...

இதையறிந்த யேசுபாலனின் தாயும் தகப்பனும் யேசுபாலனையும் தூக்கிக் கொண்டு ஒழிச்சிட்டினம். அதுக்குப் பிறகு அந்த நாட்டைவிட்டு ஓடி வேறை நாட்டுக்குப் போட்டினம். அந்த அரசனால் யேசு பாலனை கொல்ல முடியாமல் போச்சு..." வேதா, யூட்டுக்கு விளங்கக் கூடிய வகையில் மிகவும் இலகுவாகக் கூறுகின்றார்.

யூட் என்னத்தை நினைத்துக் கொண்டானோ திடீரென்று அவன் முகம் சோர்ந்து... வாடி....

பலமாகச் சிந்திக்கின்றான்...

யூட்டுக்குப் பதில் கூறிய வேதா, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கலண்டரைப் பார்க்கின்றார். இதே வருடம், தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒவ்வொரு நாளாக உதிர்ந்து - இப்பொழுது - சில தாள்கள் மட்டும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

அந்தக் கலண்டர் மட்டையிலுள்ள படம்

அது யேசு நாதரின் உருவம்.

உடலெல்லாம் குருதி வடிகின்ற காயங்கள், ஒட்டிய வயிறு, புடைத்து நிற்கும் மார்பெலும்புகள், தலையிலே இறுக்கப்பட்ட முள்முடி, கைகளும், கால்களும் சிலுவையில் இறுக்கப்பட்ட நிலை..

'மனுக்குலத்தின் மீட்சிக்காகச் சிலுவையில் மரித்த மகான் - வேதாவின் இதயம் இரக்க உணர்வினால் கசிகின்றது.

"தாத்தா"... யேசுவின் படத்தில், தன்னை மறந்திருந்த வேதாவை யூட் அழைக்கின்றான்.

"என்ன குட்டி"...

...'நீங்கள் என்னைத் தூக்கிக் கொண்டு ஓடினது போல் தானே... யேசுபாலனையும் அவற்றை அப்பா தூக்கிக் கொண்டு ஓடியிருப்பார்...

'...நாங்களெல்லாம் காட்டுக்குள்ள ஒழிச்சுக் கிடந்தது மாதிரி தானே அவைகளும் ஒழிச்சுக் கிடந்திருப்பினம்...

...நாங்கள் அங்கையிருந்து இங்கை ஓடியது போல தானே அவையளும் அந்த நாட்டை விட்டு வேற நாட்டுக்கு ஓடியிருப்பினம்..."

'யூட் கரகரத்த குரலில் கேட்கிறான். அவனது ஒவ்வொரு வார்த்தையும் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிரசவிப்பதை அவன் முகம் கோடிட்டு காட்டுகின்றது.

யூட் இப்படியயொரு கேள்வியைக் கேட்பானென்று வேதா எதிர்பார்க்கவில்லை.

வேதாவை அறியாமலே அவனது கைகள் யூட்டை இறுக அணைத்துக் கொள்கின்றன.

உலகம் புரியாத சிறுவனின் கேள்வி - ஆனால் உலகளாவிய சம்பவத்தை உள்ளடக்கிய கேள்வி.

...'எங்களைப் போல தான் ஓடியிருப்பார்கள்...

...'எங்களைப் போல தான் ஒழித்திருப்பார்கள்...

...'எங்களைப் போல தான் ஓடி வந்திருப்பார்கள்

கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த யேசுபாலனின் வாழ்க்கைச் சம்பவம்...

'கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்த நமது வாழ்க்கைச் சம்பவம்... அடக்கப்பட்ட மக்களின் அடிமைப் போக்கும்

...இன்னமும் அப்படியே தான் இருக்கின்றதா?

வேதாவின் சிந்தனைத் திரிகையில் இடப்பட்ட பிரச்சினை உழுந்தைப் போல் அரைக்கப்படுகின்றது.

எண்பத்து மூன்றாம் ஆண்டு, ஜுலை மாதம், இருபத்து மூன்றாம் திகதி... அப்போது யூட்டுக்கு ஐந்து வயது.

அப்போது - யூட்டின் பெற்றோரும் சகோதரங்களும் யாழ்ப்பாணத்தில் இருக்க, யூட்டும் வேதாவும், அவர் மனைவியும் திருகோணமாலையில் இருந்தனர்.

அந்த நாள்

அந்த நாளை யாராலுமே மறக்க முடியாது. இரத்தப் பரப்பில் - மனித உயிர்த் தூரிகைளால் வரையப்பட்ட புதியதோர் அத்தியாயம்!

தும்பிகளின் தலையைக் கிள்ளி விட்டு அந்த உடல்களின் துடிப்பின் வேடிக்கை பார்க்கின்ற சிறுவர்களைப் போல் - விஸ்வரூப மெடுத்த அதிகாரம் நம்மவர்களின் தலையைக் கிள்ளி விட்டு... வேடிக்கை பார்த்தது.

திருகோணமலை உட்படச் சகல பகுதிகளும் இதே நிலை...

தேசியத்தின் நாணயக் கயிறு...

காலனின் பாசக் கயிறாகிய நாள்...!

வேதாவும் மேரியும் யூட்டை தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடினர். அவர்களோடு இன்னும் எத்தனையோ பேர்!...

காட்டுக்குள் வசிக்கும் பயங்கர மிருங்கள் - அனைகளுக்குக் கூட இந்த மக்களின் அவலநிலை புரிந்திருக்க வேண்டும் - இவர்களை அவை தீண்டவில்லை!

இப்படியே பல நாட்கள் காட்டில் கிடந்து. தவித்து ஒருவாறு, அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டன.

இதைத் தான் யூட் கேட்கிறான்!

அந்தச் சிறுவனால் கூட அந்தச் சம்பவத்தை ஜீரணிக்க முடியவில்லை!

யூட்டின் கேள்விக்கு பதில் கூறாமல் வேதா மௌனமாக இருக்கின்றனர்.

'தாத்தா...' யூட் திரும்பவும் வேதாவை அழைக்கிறான்.

'என்ன குட்டி...' கேட்ட கேள்வியை விட்டு இப்போது புதியதொரு கேள்வியை அவன் கேட்கிறான். 'யேசு எப்படிச் செத்தார்' இதுதான் அந்தக் கேள்வி.

வேதா சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கலண்டர் மட்டையில் உள்ள படத்தைக் காட்டி 'உப்பிடித்தான் செத்தார்' என்று கூறுகின்றார்.

யூட்டினால் அந்தப் படத்தைப் பார்த்துச் சரிவர விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"யேசுவைப் புடிச்சு, அடிச்சுக் காயப்படுத்தித் தலையிலே முள்ளுகளால் குத்தி, சிலுவையில் கிடத்தி கையையும் காலையும் ஆணியால் இறுக்கித் தான் கொலை செய்தவை..."

வேதா விளக்கம் கூறுகின்றார்.

யூட் திரும்பவும் அசந்து போயிருக்கின்றான்.

சில வினாடிகள் வேதாவின் மடியின் இருந்தவன் திடீரென இறங்கி ஒரு கதிரையை இழுந்து அதன்மேல் ஏறிநின்று கலண்டரை எடுக்கிறான்.

வேதாவுக்கு எதுவுமே புரியவில்லை

கலண்டரை எடுத்தவன் கதிரையால் இறங்கி நின்று கலண்டர் மட்டையிலுள்ள படத்தை மிகவும் அவதானமாகப் பார்க்கின்றான்.

"குட்டி..."

"என்ன தாத்தா..."

"என்ன பார்க்கிறீங்கள்..."

'யேசுவின் கண்கள் தோண்டப்பட்டிருக்கா என்று பார்க்கிறன் தாத்தா..."

யுட்டின் ஒவ்வொரு வார்த்தையும ஈட்டியால் வேதாவின் செவிப்பறையை குத்துகின்றன.

எண்பத்தி மூன்றாம் ஆண்டு ஜுலை மாதம் இருத்தி மூன்றாம் திகதி...

...தும்பியின் தலைகளைப் போல்... மனிதத் தலைகள்! றம்புட்டான் பழத்தோலுக்குள்ளிலிருந்து தசை நிறைந்த கொட்டை பிதுங்குவது போல் மனிதக் கண்முழிகள் பிதுங்கி...

"குட்டி... யேசுவின் கண்களை அவர்கள் தோண்டவில்லை.." வேதாவின் இரத்தம் கசியும நாக்கு வார்த்தைகள் உச்சரிக்கின்றது.

"அப்ப இருந்த அரசன் கொஞ்சம் நல்லவன் அதுதான் யேசுவின்ரை கண்களைத் தோண்டாமல் விட்டான் இல்லையா தாத்தா..." யூட் பெருமூச்சோடு கேட்கிறான்.

சரியாகப் பன்னிரண்டு மணி

மனித குலத்தின் மேய்ப்பனான யேசுபாலன் பிறந்த நேரம் - தேவாலய மணியின் நாதக் கூர்கள் இருளின் அமைதியைக் கிளித்து செவிப்பறைகளில் குத்துகின்றன.

"குட்டி மணியோசையைக் கேட்டு விட்டான்

நேரம் வரும் வரை

பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த அவன் - நேரம் வந்து விட்டதால்

பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு விட்டான்.

இனிமேல்?

வெடி தான்.

முரசொலி 21-12.1986

**8**

# சிறுவாணம்

"சந்திரசேனா வெல்லுவனெண்டு தெரியும். ஆனால் இவ்வளவு தொகையாலை வெல்லுவனெண்டு ஒருதரும் நினைக்கயில்லை..." மரத்தடியில் குழுமி நின்றவர்களில் ஒருவர் கூறுகிறார். நேற்றைக்கு முதல் நாள் முடிவு பற்றி கடந்த இரவுச் செய்தியில் கூறப்பட்டுவிட்டது.

"நான் போன கிழமை கொழும்பிலை நிண்டனான்... சந்திரசேனாவின்ரை தேர்தல் பிரசாரக் கூட்டமொண்டுக்கு போனனான்... சகல விஷயங்களையும் துணிவோடை பேசினான்..." இன்னொருவர் கூறுகிறார்.

சந்திரசேனாவின் வெற்றி பற்றியும் இத்தேர்தலில் தோற்றுப் போன சிறிவர்த்தனா பற்றியும் அவர்களின் அரசியல் போக்குகள் பற்றியும் வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

அந்த மரத்தடியிலும் கடை விறாந்தையிலும் கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேலானவர்கள் நிற்கின்றனர். அத்தனை பேரும் இன்றைய பத்திரிகைக்காகக் காத்து நிற்கின்றனர்.

வீதியின் வலது பக்கமாக கடை அமைந்திருக்கின்றது. இடதுபக்கமாக ஒரு கிணறு அமைந்திருக்கின்றது. கிணற்றுக்

கட்டிலில் கால்களைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருக்கின்றார் நடராசர். விறாந்தையில் நிற்கின்ற கூட்டத்தோடோ மரத்தடியில் நிற்கின்ற கூட்டத்தோடோ அவர் சேராமல் கிணற்றுக் கட்டிலில் தனியாகவே இருக்கின்றார்.

நடராசர் பத்திரிகைக்காக வரவில்லை பாண் வாங்குவதற்காகவே வந்திருந்தார். அங்குள்ளவர்களின் பேச்சுக்களை அவதானித்தபடி இருக்கின்றார்.

'சம்பள மாற்றமொண்டு வருமெண்டு தான் நினைக்கிறன்...'

'சந்திரசேனா தன்ரை பிரச்சாரத்திலை கூறினவன் தானே... ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் சம்பள மாற்றமொண்டு வாறதுதானே... பெரும்பாலும் வரத்தா செய்யும்...'

'இவன்ரை ஆட்சியிலையாவது தமிழர்க்களுக்கு ஒரு முடிவு வந்திதெண்டால்... எத்தினை காலத்துக்கொண்டு தான் இப்பிடிச் சீரழியிறது...' ஒருவர் தனது மனக்கொதிப்பைக் கூறிக் கொள்கிறார்.

'ஏன் தம்பி... கொழுப்பிலை ஏதாலும் கலவரம் நடந்ததாமே...' அப்போது தான் அங்கு வந்த ஒருவர் கேட்கிறார்.

'பேப்பர் என்னும் வரயில்லைப் பாருங்கோ ஏதாவது நடந்திருந்தால் பேப்பரிலை வரும்''

"என்னும் பேப்பர் வரயில்லையே..." இப்படிக் கூறியவர் திரும்பிக் கடைவாசலைப் பார்க்கின்றார். அவரது கண்கள் மூர்த்தியைத் தேடுகின்றன.

கடை பூட்டப்பட்டிருக்கின்றது, அந்த சிறிய விறாந்தையின் தொங்கலில் பின்னுக்குக் கைகட்டியபடி மூர்த்தி நிற்கிறார். அவரது பார்வைக்கோடுகள் வீதியில் நீண்டிருக்கின்றது. அவர் தான் இந்தக் கடையின் ஒரே ஊழியன்.

ஆறுமணிக்கு முன்பின்னாகப் பத்திரிகைக்காரர்களும், பாண் காரனும் வருவார்கள்.

இருளும் ஒளியும் சமர் புரிந்து இருளைப் புறங்காட்டி ஒளிக்கதிர்கள் பூமியைத் தழுவத் துடிக்கின்ற நேரம்... அதிகாலை...

கடந்த இரவு கடும்பனி தூரத்தே இன்னமும் பனிப்புகார் தெரிகின்றது. பனியில் நனைந்த புல் பூண்டுகள் குருத்துச் சரிந்து நிற்கின்றன. வீதி கூட நனைந்து கிடக்கின்றது... வீதியின் மறுகரையில் கடைக்கு நேராக நிற்கின்ற அலரி மரத்தின் இலைகளிலிருந்து, முழுகியபின் துவட்டியும் துவட்டாத நிலையிலுமுள்ள பெண்ணின் தலைமயிரின் நுனியிலிருந்து நீர் சொட்டுக்கள் சிந்துவது போல், பனித்துளிகள் சிந்திக் கொண்டிருக்கின்றன...

"இந்த குளிரையும் பொருட்படுத்தாமல் தேர்தல் முடிவுகளை அறிகின்ற ஆவல் அவர்களுக்கு..."

"இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் ஒரேவழி... நானே வடபகுதிக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவேன்... எண்டு சந்திரசேனா கூறியிருக்கிறான்... எனி என்ன செய்யப் போறான்... வரத்தானே வேணும்..."

சைக்கிளில் வந்து கால் பெருவிரலை நிலத்தில் ஊன்றியபடி நின்று சாமியார் கூறுகிறார்.

"...தமிழர்கள் நாய்கள் எண்டு சொன்னவை இப்ப... தமிழர்கள் புலிகள்... எண்டு சொல்ற அளவுக்கு வந்திட்டினம்... அப்ப எங்கடை ஆக்களெல்லாம் நாய்கள் மாதிரி அடியும் உதையும் வாங்கிச்சிதுகள்... இப்ப உள்ளதுகள் புலியள்... தேடி வரத்தானே வேணும்..."

"என்ன இருந்தாலும் சந்திரசேனா தகுதியானவன் அவன் எங்கடை பிரச்சினையைத் தீர்க்கத்தான் பாப்பான்..." சாமியார்

திட்டவட்டமாகக் கூறுகிறார்.

கிணற்றுக் கட்டிலிருந்து நடராசர் தலையை நிமிர்த்திச் சாமியாரைப் பார்க்கின்றார்... உதடுகள் பிரியாத நிலையில் மொட்டானதொரு சிரிப்பொன்று உதிர்கிறது.

சாமியார்

கந்தசாமி இதுதான் இவரது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் ஒட்டியிருக்கும் பெயர். பெயரைச் சுருக்கிச் சாமியார் என அழைக்கப் படுகின்றார். அரசாங்க சேவையிலிருந்த இவர், பென்சன், எடுத்துக் கொண்டவர் சாமியாருக்கிப்போது ஐம்பத்திரண்டு வயது ஆனால் பார்ப்பவர்கள் மிகவும் குறைத்துத்தான் மதிப்பிடுவார்கள். மெல்லியவராக இரந்தாலும் திடகாத்திரமானவர்.

கருங்காலி வைரம் போன்ற உரோமக்கட்டான உடற்கட்டு கம்பளி மயிர்க்கொட்டி போன்ற மீசை, சிங்கப்பூர் சங்கிலி... ஏப்போதுமே கலகலப்பாக இருப்பார்... ஊர்விஷயங்கள் எதுவானாலும் முன்னிற்பார்...

"அப்பு... இண்டைக்கு இருபத்தைஞ்சு பேப்பர் கூடத் தரச்சொல்லி முதலாளி சொன்னவர்... இருபத்தைஞ்சு பேப்பர் கூடவைச்சிருக்கு எண்ணி எடுங்கோ" அங்கு வந்த பத்திரிகைக்காரன் இப்படிக் கூறிவிட்டு ஒரு பத்திரிகைக் கட்டை மூர்த்தியிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து செல்கிறான்.

மூர்த்தி, அவசர அவசரமாகப் பத்திரிகைக் கட்டை அறுத்தப் பத்திரிகையை எண்ணுகின்றார். இரவல் பத்திரிகை பார்ப்பதற்கும், தேர்தல், புதினங்கள் பொறுக்குவதற்கும் வந்தவர்கள் நிற்க, பத்திரிகை வாங்க வந்தவர்கள் மூர்த்தியைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

இரண்டாவது பத்திரிகைகாரனும் வந்து பத்திரிகைக் கட்டைப் போட்டுவிட்டுச் செல்கிறான். அந்தப் பத்திரிகைக் கட்டையும் அறுத்துப் பத்திரிகைகளை எண்ணுகின்றார், மூர்த்தி.

"அப்பு கெதியாய் எண்ணி முடியுங்கோ..."

"அப்பு நான் எண்ணட்டே..."

"அவசரப்படுத்தாதையுங்கோ... வயது போன காலம்... ஆறுதலாய் எண்ணட்டு..." அக்கூட்டத்தில் முன்னணியில் நின்ற சாமியார் கூறுகிறார்.

முதலாளி கடைக்கு வந்து, கடையைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்க ஏழரை மணிக்கு மேலாகிவிடும். அதற் கிடையில் பத்திரிகை வியாபாரத்தையும் பாண் வியாபாரத்தையும் மூர்த்தி முடித்து விடுவார். மூர்த்தி வயது போனவரெண்டாலும் மிகவும் சுறுசுறுப்பானவர், அது மட்டுமல்ல மிகவும் நேர்மையானவரெண்டு சத்தியம் பண்ணிக் கூறலாம்.

பத்திரிகைக்காக முண்டியடித்துக் கொண்டு நிற்பவர்களைக் கட்டில் இருந்தபடியே நடராசர் பார்க்கின்றார்.

முன்பு பார்த்த அதே பார்வை...

அதே மொட்டான சிரிப்பு... "அப்பு பேப்பரைத் தாருங்கோ..."

"அப்பு எனக்குமொண்டு..."

முதல் பத்திரிகையைச் சாமியார் வாங்கிக் கொள்கிறார். பத்திரிகையும் காசும் கைமாறிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகையை வாங்கியவர்கள் திரும்பவும் அந்த மரத்தடிக்கு வருகின்றனர்.

பிரதான வீதி, வீதியிலிருந்து வலது பக்கமாக ஒரு கல்லு றோட்டு இடப்பக்கமாக ஒரு மண் ஒழுங்கை, 'நாற்சந்தி' என்று கூறுமளவுக்கு பிரபலமான இடமிது இச்சந்தியில் வலது பக்கமாக இக்கடை அமைந்திருக்கின்றது. கடைக்கு முன்னால் ஒரு மருதமரம், இது சாதாரண மரமல்ல, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கிய மரம் இந்த மரத்தடியில் மிகவும் அழகானதொரு கோயில் அமைந்திருக்கின்றது.

இந்த மருத மரத்தின் கீழ்த்தான் சகலரும் நிற்கின்றனர்.

"கொழும்புத் தமிழர்... மலையக் தமிழர்... பொதுவாக சந்திரசேனாவைத் தான் ஆதரிச்சிருக்கிதுகள்..." தமிழ்ப் பிரதேச வாக்குகளை அவதானித்த சாமியார் கூறுகிறார்.

"அப்பு நான்தான் முதல் வந்தனான்... எனக்குப்பிறகு வந்தவையெல்லாம் பேப்பர் வாங்கிப் போட்டினம்..."

ஒருவர் குறைபட்டுக் கொள்கிறார்.

"இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்த்து என்னதான் செய்யப் போறியளோ... மூர்த்தி கூறுகின்றார் அதுவும் உரக்கக் கூறுகின்றார். அவரது பேச்சு நடராசரின் காதுகளுக்கும் எட்டுகின்றது. புாண்காரனின் வருகையை எதிர்பார்த்து வீதியைப் பார்த்துக் கொண்டிருந்த நடராசர் அதிலிருந்து விடுபட்டு... மூர்த்தியைப் பார்க்கிறார்....

இப்போது முன்பு போலல்லாமல் உதடுகள் பிரியச் சிரிக்கின்றனர்...

நடராசர்

மரத்திலேயே பழுத்துக் காய்ந்து விழுந்த செத்தல், தேங்காய் போன்ற அனுபவசாலி... இப்போது இவருக்கு எழுபத்தைந்து வயது நடக்கின்றது. இருபத்தி மூன்று வயதில் உத்தியோகமாகி... அதுவும் ஆங்கிலேய நிர்வாகத்தில் உத்தியோகமானவர்... அன்று தொடக்கம் இன்றுவரை எதையுமே திட்டமிட்டுத்தான் செய்வார்...

இப்போதுகூட ஒரு மணிக்கு மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தாரென்றால், சகல பத்திரிகைகளையும் வாசித்து முடிப்பார்... ஆங்கிலப் பத்திரிகை களையும், சஞ்சிகைளையும் தான் அதிகம் வாசிப்பார்.

இலங்கையில் நடந்த அத்தனை தேர்தல்களையும் தரிசித்தவர்...!

அரசியல், வரலாற்றுப் பிரச்சினைகள் உள்ளவர்கள், இவரிடம் வந்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வார்கள்.

"அப்ப... சாமியார்... பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு, சாமானமெல்லாம் தாராளமாக வருந்தானே..." பொருளாதார வரட்சியில் வெந்து போன ஒருவர் கேட்கிறார்.

"இவ்வளவு தமிழர்களெல்லாம் நம்பிக்கையிலை சந்திரசேனாவை ஆதரிச்சிருக்குதுகள்... சந்திரசேனா ஏதாலும் ஒண்டு செய்யத்தானே வேணும்..."

"அப்ப போக்குவரத்துப் பிரச்சினை..."

"மின்சாரம் தாறதுக்கான ஒழுங்குகள் நடக்கிறது... போக்குவரத்துப் பிரச்சினை தானாய்ச் சரி வரும்..." சாமியார் கூறுகிறார்.

"எத்தனை கொடுமையளை அனுபவிச்சுப் போட்டம்... கொஞ்சக்காலமெண்டாலும்... எங்கடை மண்ணிலை வாழ்ந்திட்டுச் சாவம்... எத்தனை ஆயிரம் புள்ளையள் உயிரை விட்டிட்டிதுகள்... அதுக்கெண்டாலும் ஒரு கடவுள் தீர்ப்பு வேணுந்தானே..." ஒருவர் மிகவும் வேதனைப்பட்டுக் கொள்கிறார்.

கிணற்றுக் கட்டிலிருந்த நடராசர் தலையை நிமிர்த்தி அங்கு நின்றவர்களைப் பார்கின்றார்.

அதே பார்வை...

அதே மொட்டான சிரிப்பு...!

"தேவையில்லாமல் புடிபட்டு மறியலிலை இருக்கிற பொடியள்... எத்தினையாயிரம் பொடியள்..."

"அவங்களை இனி விட்டிடுவங்கள்..."

"அப்ப வெளிநாடுகளுக்கு அகதியாய் போனதுகளின்ரை முடிவென்ன..."

அவையளெல்லாம் திரும்பி வர வேண்டித்தான் வரும் இஞ்சை பிரச்சினையில்லாட்டி வரலாந்தானே..."

நடராசர் தலையைக் குனிந்தபடி இருக்கின்றார், அவரது செவிப்பறை உணர்வு மட்டும் அங்கு நிற்பவர்களின் மத்தியில் நங்கூரமிட்டு நிற்கின்றது.

மருத மரத்தடியில் நிற்கின்ற அனைவரும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட ஒரு சுதந்திர பூமியில் நிற்கின்ற உணர்வில் நிற்கின்றனர்..."

நடராசாரின் மனதில் நடந்து மடிந்த தேர்தல் படச்சுருளாய் நீண்டு கொண்டிருக்கின்றது.

"எங்கடை ஓடர் பேப்பரைத் தாருங்கோ..." ஒரு சிறுவன் மூர்த்தியிடம் கேட்கின்றான். மூர்த்தி அந்தச் சிறுவனை உற்றுப் பார்த்து அவனை இனங்கண்டு அதன்பின் அவனது தகப்பனை நினைவுபடுத்தி... அதன் பின்பு தான் பத்திரிகையைக் கொடுக்கின்றார்.

பாண்காரன் வருகின்றான் மூர்த்தி பத்திரிகை வியாபாரத்தை நிறுத்தி விட்டு, பாண் பெட்டியை எடுத்துக் கொண்டு பாண்காரனை நோக்கி வருகின்றார். பாண்காரன் கடைமதிலோடு சைக்கிளைச் சாத்திவிட்டு பாணை எண்ண ஆரம்பிக்கின்றான்.

கிணற்றுக் கட்டிலிருந்த நடராசர் அங்கிருந்து வந்து றோட்டுக் கரையோடு நிற்கின்றார். பாண் வாங்குவதற்காக வந்த இன்னும் சிலர் நடராசரோடு சேர்ந்து கொள்கின்றனர்.

"தமிழர் பிரச்சினைக்கான முடிவைச் சந்திரசேனா ஏற்கனவே தீர்மானிச்சு வைச்சிருக்கிறான்..." பேச்சு தொடர்கிறது.

“ஏன் அப்பிடிச் சொல்லுறியள்...”

“அவன்ரை பேச்சிலிருந்து விளங்கியது...”

“என்ன மாதிரியான முடிவாயிருக்குமெண்டு நினைக்கிறியள்...”

“அதைத்தான் தீர்மானிக்கேலாமல் இருக்கு...”

சந்திரசேனா சொல்ற முடிவு... எங்களுக்கு பொருத்த மில்லாட்டி...” இக்கேள்வி அங்கு நின்ற அனைவரையும் குளப்புகின்றது சாமியார் என்ன பதில் கூறப்போகின்றாரென்று சகலரும் எதிர்பார்க்கின்றனர்...

ஆனால் சாமியார்? அவரால் எதுவும் கூறமுடியவில்லை...

நடராசர்... அதே பார்வை... அதே மொட்டான சிரிப்பு...

“என்ன நடராசண்ணை உங்கடை அப்பிராயத்தைச் சொல்லுங் கோவன்” சாமியார் நடராசரைக் கொழுக்கி போட்டிழுக்கிறார்... நின்றவர்களெல்லோரும் நடராசரைப் பார்க்கின்றனர்....

நடராசரின் பேச்சில் நிதானமிருக்கு என்பது சகலருக்குந் தெரியும்...

நடராசர் குனிந்து நிலத்தைப் பார்க்கின்றார். இந்த நிலத்தின் சோக வரலாறுகளும்... நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களும்... முரல் மீன்களாய் அவரது இதயத்தைக் குத்திக் கிழிகின்றன...!

“அண்ணை நான் கேக்கிறதென்னண்டால்... இவ்வளவு பெரிய தியாகங்களைச் செய்து போட்டு. எங்களுக்குப் பொருத்தமில்லாத தொரு முடிவை சந்திரசேனா தந்தால்... அதை ஏற்றுக் கொள்ளலமா... இதைத்தான் நான் கேக்கிறன்...” முதல் சாமியாரிடம் கேள்வி கேட்டவர், இப்போது நடராசருக்குத் தனது கேள்வியை விளக்குகின்றார்....

நடராசர் தலையை நிமிர்த்திக் கேள்வி கேட்டவரைப் பார்க்கின்றார். அனைவரும் நடராசரைப் பார்க்கின்றனர். மூர்த்தி அவர் கூடப் பத்திரிகை வியாபாரத்தை நிறுத்திவிட்டு நடராசரைக் பார்க்கின்றார்.... தூரத்தூர நின்றவர்கள் சிறுகச் சிறுக முன்னேறி நடராசரை அண்மிக்கின்றனர்.

...தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு.

வாலிபர்களை ஆயுதம் ஏந்த விடமாட்டேன்

...பொருளாதாரத் தடை நீக்கம்

...போக்குவரத்துப் பாதை திறப்பு...

...மின்சார வசதி...

சந்திரசேனாவின் தேர்தல் பிரசாரங்கள்...

"தம்பி.... இலங்கையிலை தேர்தல் பிரசாரங்கள் எல்லாம் பெரியதொரு சீறுவாணம் போன்றது.... அது சீறயுக்கை பாக்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கும்... சீறி முடிஞ்சுதென்றால்... மின்னுகின்ற ஒவ்வொன்றும் கரிக்கட்டியாய்த்தான் நிலத்திலை விழும்...

...அந்தக் கரிக்கட்டிகள் பல்லுத் தீட்டக்கூட உதாவது..." நடராசர் இப்படிக் கூறிவிட்டுப் பாண் வாங்குவதற்காகச் செல்கின்றனர்.

அனைவரும் மௌனமாக நிற்கின்றனர்.

ஈழநாதம் 16.02.1994

# 9

# இருள்

பாலசுந்தரத்தின் தாயை அழித்து, அவனது வீட்டை அழித்து, குடும்பத் தொழிலை அழித்து... அந்த இளம் இதயத்தைப் பாலைவனமாக்கிவிட்டு... இலவசப் புத்தகம், இலவச உடுப்பு, இலவச உணவு...! தமிழ் மண்ணில் எத்தனையாயிரம் பாலசுந்தரங்கள்...? கணேசனின் இதயம் சில வினாடிகள் தரித்து... மீண்டும் இயங்குகின்றது...!

ஆரோக்கியமாக வளர்ந்த குழந்தை 'மூக்கும் முளியுமாக' நிற்பதுபோல், அந்தத் தேமாமரம் கிளைபரப்பி, மதாளித்து நிற்கின்றது. எல்லைக்குள் வேரூன்றி எல்லைக்கு வெளியே கிளைபரப்பி, நிழல் கொடுத்து நிற்கும் அந்தத் தேமாமரத்திற்கு வெள்ளைத் தொப்பி போட்டது போல் வெள்ளைப் பூக்கள் நிறைந்து போயிருப்பது மிகவும் அழகாக இருக்கின்றது.

அந்தத் தேமாமரத்தின் கீழ் கணேசன் நிற்கிறார். நண்பன் ஒருவனின் வருகைக்காகக் காத்து நிற்கின்றார்.

கணேசன் நிற்கும் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் பிரதா வாசலிலிருந்து பத்தடி தூரத்தில் ஒரு சீமெந்துத்தூண் நிமிர்ந்து நிற்கின்றது. மின்சார விநியோகத்திற்காக மின்சார சபையினால் வீதி

ஓரங்களில் நாட்டப்பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான தூண்களில் இதுவும் ஒன்று.

கணேசன் அந்த தூணைப் பார்க்கிறார். மாங்கொடிகள் சுற்றிப் படர்ந்து தூணின் அரைப்பகுதி உயரத்தை மறைந்திருக்கின்றன... தூணின் உச்சியில் ஒரு காகக்கூடு....!

இலங்கை அரசு வடபகுதியில் மின்சாரத் தடையை ஏற்படுத்தி எத்தனை வருடங்களாகிவிட்டன... கணேசனின் மனதில் ஏற்பட்ட விரக்தி உணர்வு, அவரது இதயத்துள் தேடலை நடத்துகின்றது.

'இனி எப்போதான் மின்சாரம் வருமோ...' இலங்கை அரசை மனதுக்குள் திட்டிக் கொள்கிறார்.

கைக்குட்டையால் நெற்றிப்பரப்பில் பனித்திருந்த வியர்வைத் துளிகளை அழுத்தித் துடைத்த கணேசன் ஒரு சிகரட்டை எடுத்து மூட்டுகிறார்.

நீண்டு போயிருக்கும் அந்தப் பிரதான வீதியோடு 'தாயைத்தின்னி' பிள்ளை போன்றதொரு குறுக்கு வீதியொன்று சந்திக்கின்றது. சிறியதொரு முச்சந்தி. இந்தச் சந்தியில் இறந்துபோன ஒருவரின் ஞாபகமாகக் கட்டப்பட்ட ஒரு பஸ்தரிப்பு நிலையமும், அதற்கு முன்னால் ஒரு கடையும் அமைந்திருக்கின்றன. இந்தச் சந்தியின் சிறப்பு இவ்வளவுதான்.

இந்தக் குறுக்கு வீதியில் நடந்தால் இரண்டு வளைவுகளைத் தாண்டி கிட்டத்தட்ட இருபது யார் தூரத்தில் மிகவும் அழகானதொரு மாடிவீட்டைக் காணலாம். இது ஒரு தனியார் மருத்துவமனை.

இந்த மருத்துவமனையின் பிரதான வாசலோடு வளர்ந்திருக்கும் தேமாமரத்தின் கீழ் தான் கணேசன் நிற்கிறார். அவரோடு வந்த நண்பன் மருந்தெடுப்பதற்காக உள்ளே சென்று விட்டான். அவனது வருகைக்காகவே அவர் காத்திருக்கின்றார்.

ஆறுமணிக்கு மேலிருக்கும் இருளுக்கும் ஒளிக்கும் வழமையாக நடக்கின்ற உக்கிரமான சமர். காலையில் ஒளி வெல்லும், மாலையில் இருள் வெல்லும்... என்றுமே தீராத சமர்... ஆனால் சமமான வெற்றி தோல்விகள் இயற்கையின் நியதி...!

இந்த மருத்துவமனையின் நிர்வாகி இரவீந்திரன் தனது அலுவலகத்தினுள் அமர்ந்திருக்கின்றார். நிர்வாகியின் அலுவலகத்திலிருந்து கிட்டத்தட்ட பதினைந்தடி தூரத்திலேயே கணேசன் நிற்கின்றார். அலுவலகத்தின் முன்பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நீண்ட யன்னலுக்கூடாக இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

"ஐயா ஜெனரேட்டரை ஸ்ரார்ட் ஆக்கட்டா..." அங்கு வந்த பாலசிங்கம் இரவீந்திரனிடம் கேட்கிறான். பாலசிங்கம் இந்த மருந்துவமனையில் வேலைசெய்யும் ஒரு ஊழியன்.

'நேரங்கிடக்கு...' தனது கைக்கடிகாரத்தைப் பார்த்த இரவீந்திரன் கூறுகிறார். இரவீந்திரன் எதிலுமே மிகவும் நிதானமானவர் மண்ணெண்ணையின் விலை மாத முடிவில் முதலாளிக்குக் கணக்குச் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அவருக்குண்டு!

இது தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் கணிசமானளவு நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகளை உள்ளடக்கியது. மாலை தொடக்கம் இரவு பத்துப் பத்தரை வரை ஜெனரேட்டர் வேலை செய்யும். மருத்துவமனை பூராவும் பிரகாசமாக இருக்கும் அதன்பின்பு ஒவ்வொரு கட்டிலோடும் ஒவ்வொரு லாம்பு எரிந்து கொண்டிருக்கும் லாம்புகள் மருந்துவமனைக்குரியது.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. கணேசன் அதே இடத்திலேயே நிற்கின்றார். அவரது வலதுகைச் சுட்டுவிரலுக்கும் நடுவிரலுக்குமிடையேயுள்ள சிகரட் எரிந்து கொண்டிருக்கின்றது.

நிர்வாகியின் அலுவலக வாசலோடு இணைந்துள்ள மதில் கரையோடு ஒரு வாலிபன் நிற்கின்றான். கணேசன் இந்த இடத்திற்கு வரும்போதே அந்த வாலிபன் அந்த இடத்தில் நின்றதைக் கணேசன் அவதானித்திருந்தார்.

அவன் - பாலசுந்தரம்

கதிரையிலிருந்த இரவீந்திரன் கைகள் இரண்டையும் மேலுயர்த்தி - உடலை நெளித்து விரல்களால் விரல்களை அமர்த்தி நெட்டி முறித்து... வலுக்கட்டாயமாக வாயைத் திறந்து கொட்டாவி விட்டு... நிமிர்ந்தமர்கின்றார்.

இதுவரை மதில் கரையோடு நின்ற பாலசுந்தரம், இரவீந்திரனின் அழைப்பை எதிர்பார்த்து நின்றானோ - என்னமோ இப்போது எந்தவித அழைப்புமின்றி அலுவலகத்துள் நுழைகின்றான். இரவீந்திரனுக்கு முன்னால் மிகவும் பணிவோடு பாலசுந்தரம் நிற்கின்றான்.

"என்ன தம்பி"

"உங்களிட்டைத்தான் சேர் வந்தனான்..."

"என்ன விஷயம்..."

"இரவிலை நோயாளரைப் பராமரிக்க ஆக்களை ஒழுங்கு பண்ணிவிடுவியளாம் அதுதான் வந்தனான்..." இதுவரை பாலசுந்தரத்தைச் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருந்த இரவீந்திரன், இப்போது புருவங்களை நெளித்து கண்களைச் சுருக்கி, கூர்மையாகப் பார்க்கின்றார் அவரது பார்வையில் எத்தனையோ கேள்விகள் முகிழ்த்து வெடிக்கின்றன!

"பெயரென்ன"

"பாலசுந்தரம்"

"படிக்கிறீங்களா..."

"ஓம்..."

"மன்னிக்க வேணும்... படிக்கிறவைக்கு நாங்கள் வேலை குடுக்கிறதில்லை..."

" சேர் நான் படிக்கிறது உண்மைதான்... நான் ஏன் வேலைக்கு வந்தனான் எண்டத்தைச் சொல்றன் கொஞ்சங் கேளுங்கோ சேர்..." மிகவும் பரிதாபமாகப் பேசுகிறான் பாலசுந்தரம்.

"தம்பி நீங்கள் என்ன காரணங்கள் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டம் - நீங்கள் போங்கோ..." இரவீந்திரனின் பேச்சில் 'அப்பீலற்ற' முடிவு தொனிக்கின்றது. பாலசுந்தரம் வெளியே வந்து முன்பு நின்ற அதே இடத்தில் நிற்கிறான்.

"இலவசக் கல்வி இலவசப் புத்தகம் இலவச உடுப்பு இலவச உணவு" அரசாங்கம் எவ்வளவு உதவியளைக் செய்யிது வீட்டிலை இருந்து படிக்கத் தெரியாமல் வேலைக்கு வாறார் பொறுப்பில்லாத புள்ளையள்" இரவீந்திரன் தனக்குத்தானே கூறிக் கொள்கிறார்.

கணேசன் சகலதையும் அவதானித்துக் கொண்டு நிற்கின்றார்.

இம்மருந்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களில் உதவியற்றவர்களுக்கு அவர்கள் விரும்பினால் கூலி அடிப்படையில் பராமரிப்பு வசதியை மருத்துவமனை நிர்வாகம் செய்து கொடுக்கின்றது.

பராமரிக்க விரும்புபவர்கள் நிர்வாகியிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு பிற்பகலில் வருவார்கள், தங்கியிருக்கும் நோயாளர்கள் தங்களுக்குப் பராமரிப்பாளர்கள் தேவையென நிர்வாகியிடம் முறைப்பாடு செய்தால் அதற்கான ஒழுங்குகளை நிர்வாகி செய்வார்.

ஒரு இரவுக்கு நூறு ரூபா. இந்த வேலைக்குத்தான் பாலசுந்தரமும் வந்து நிற்கின்றான்.

மதில்க் கரையோடு நின்ற பாலசுந்தரத்தைக் கணேசன் பார்க்கின்றார். கணேசனின் பார்வைக்கோடு பாலசுந்தரத்தின் பாதாதி கேசம் வரை ஊர்ந்து வருகின்றது.

அரசாங்கம் மாணவர்களுக்கென்று இலவசமாகக் கொடுத்த துணிகளில் தைக்கப்பட்ட களிசான் சேட், முன்னோக்கி வளர்ந்த - அண்மையில் வெட்டப்படாமல் காதுச் சோணைகளை மறைக்குமளிற்கு வளர்ந்து விட்ட தலைமயிர்... மூக்கடியில் அரும்பியிருக்கும் பூனை மயிர். பதினாறு வயதிருக்கும். அறுந்து ஊசி குத்தப்பட்ட பாட்டா செருப்புக்கள் கையில் ஒரு சீலைப்பை... அதற்குள் சில புத்தகங்கள் முகத்தில் வறுமையில் வடுக்கள்.

படிக்க வேண்டிய நேரத்தில் வேலைக்கு வந்திருக்கின்றான்...

கணேசனின் சிந்தனை துடிக்க ஆரம்பிக்கின்றது.

அவரின் அனுபவக் கூர்மை, பாலசுந்தரத்தின் இதயத்தைக் குத்தி அவனது இதயப் பொக்கணைக்குள்ளிருக்கும் உண்மை உணர்வுகளை உறிஞ்ச முனைகின்றது.

கணேசன் சாதாரணமானவரல்ல

பாடசாலை மாணவனாக இருந்து, பல்கலைக்கழக மாணவனாகி, ஆசிரிய பதவியேற்று, அதிபராகி கல்வி அதிகாரியானவர் ஐந்து வயதில் பாடசாலைப் படிக்கட்டில் காலடி வைத்தவர் இன்றுவரை கல்வியோடு தொடர்புபட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார். எத்தனையோ அனுபவங்கள் உள்வாங்கியவர் "பழமும் திண்டு கொட்டையும் போட்டவர்" என்று கிராமப்புறங்களில் கூறவார்களே... கணேசன் அப்படிப்பட்டவர்!

ஒரு ஆணுக்கு இருக்க வேண்டிய உயரம். அதற்கேற்ற திடகாத்திரமான உடற்கட்டு. அடர்த்தியான, முன்னோக்கி

வளர்ந்திருக்கும் கண்புருவ மயிர்கள், மயிர்க்கொட்டிகள் போன்ற உரோமம் அடர்ந்த கைகள், நரைத்த அடர்த்தி குறைந்த பக்கவகிடிட்ட தலைமயிர், தடித்த மீசை நாசுக்கான நாகரீகம் நிலாவரைக் கிணறு போன்ற ஆழம் காணமுடியாத பார்வை முற்றிப் பழுத்து உலர்ந்து எரித்தால் எண்ணை பிறக்கக்கூடிய 'செத்தல் தேங்காய்! அப்படிப்பட்ட அனுபவசாலி!

கணேசனின் பார்வை இன்னமும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிட்டு நிற்கின்றது.

கணேசன் தன் கையிலிருந்த சிகரட்டை இறுதியாக உறிஞ்சி, புகையைச் சுவாசப்பை வரை உள்ளிழுத்து சிகரட் கட்டையை நிலைத்தில் போட்டு சப்பாத்துக் காலால் மிதிக்கின்றார்.

வாழைத்தண்டின் வெட்டு முகத்தில் நீர் சுரப்பது போன்று அவரது இதயத்தில் பாலசுந்தரம் பற்றிய சில அபிப்பிராயங்கள் சுரக்கின்றனவே தவிர, நிதானமான எந்தத் தீர்மானித்திற்கும் அவரால் வர முடியவில்லை.

கணேசனின் மனமிதப்புத் துடித்துக் கொண்டேயிருக்கின்றது.

சுவர்க்கரையோடு நின்ற பாலசுந்தரம் திரும்பவும் நிர்வாகியின் அலுவலகத்துள் நுழைகின்றான்.

"சேர்"

"என்ன தம்பி"

"சேர் என்னை வேலைக்கு எடுங்கோ சேர் 'மிகவும் இரந்து கேட்கின்றான் பாலசுந்தரம் இரவீந்திரனின் முகத்தில் எரிச்சல் உணர்வு படர்கின்றது. கையிலிருந்த பேனாவை மேசை மீது வைத்துவிட்டு பாலசுந்தரத்தை ஏற இறங்கப் பார்க்கின்றார். அவரது பார்வையில் பலவித உணர்வுகள், முரல் மீனாய் குத்தி மறைக்கின்றன. கைகளைப் பொத்திப் பிடித்து உதட்டருகே வைத்து

பொங்கி வந்த கொட்டாவியை மிகவும் நாகரீகமாக வெளிவிட்டுப் பேச ஆரம்பிக்கின்றார்.

"தம்பி நீங்கள் படிக்க வேணுமெண்டதுக்காகத்தான் அரசாங்கம் எல்லாத்தையும் இலவசமாய்த் தந்திருக்கு அரசாங்கத்துக்கும் துரோகம் செய்து உங்களைப் பெத்ததுகளுக்கும் துரோகம் செய்து இஞ்சை வேலைக்கு வந்திருக்கிறயளே இது சரியா"

"சேர் நீங்கள் சொல்றது சரி சேர் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ, முதல் தடவை கூறியது போலவே இப்போதும் மிகவும் இரந்து கூறுகின்றான். பாலசுந்தரம்.

'தம்பி நீ எதுவும் கூறவேண்டாம். உன்ரை படிப்புக் கெட்டுப் போறதுக்கு நான் உடந்தையாக இருக்க மாட்டன் நீங்கள் போகலாம்' இப்படிக் கூறிய இரவீந்திரன் பாலந்தரத்தின் பதிலுக்காகக் காத்திராமல் பேனையை எடுத்து எழுத ஆரம்பிக்கின்றார்.

பாலசுந்தரம், வேதனையோடு திரும்பவும் அந்த மதிற்கரையில் வந்து நிற்கின்றான்.

'சேர் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ' பாலசுந்தரம் இரண்டாவது தடவையாகவும் கூறிய இந்த வாக்கியம் வண்டாகி கணேசனின் செவிப்பறையைக் கடித்துக் இதயத்துள் நுழைக்கின்றது.

பாலசுந்தரம் எதைக் கூற விரும்புகிறான்?...

"சேர் ஜெனரேட்டரை இயக்கட்டா" அங்கு வந்த பாலசிங்கம் கேட்க இரவீந்திரன் அனுமதியளிக்கின்றான். சில நிமிடங்களில் ஜெனரேட்டர் இயக்கப்பட்டு மருத்துவமனை முழுவதும் பிரகாசமாகின்றது.

பாலசுந்தரம் ஒவ்வொரு பல்ப்புகளையும் ஆவலோடு பார்க்கிறான் அவனது முகத்திலே ஏதோ ஒருவித ஏக்க உண்ர்வு தளம்புகின்றது.

கணேசனின் பார்வை மீண்டும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிடுகின்றது. மீண்டும் ஒரு சிகரட்டை எடுத்து மூட்டுகின்றார்.

கணேசன் பாலசுந்தரத்தை தனக்கருகில் அழைக்க பாலசுந்தரம் பணிவோடு அவருக்கருகில் வந்து நிற்கின்றான்.

"படிக்கிறீங்களா"

"ஓம் சேர்" என்ன வகுப்பு படிக்கிறீர்கள்"

"ஓ எல்"

"இந்த முறை எடுக்கிறீங்களா"

"ஓம்"

"அப்பா என்ன வேலை"

"விறகு கட்டப் போறவர்"

"அம்மா"

"அம்மா செத்துப்போனா ஆமிக்காரர் சுட்டவங்கள்

"சொந்த வீடிருக்கா"

"இல்லை சேர் இந்த ரோட்டிலை ஒரு பள்ளிக்கூடம் இருக்கு அதுக்குப் பக்கத்திலை உள்ள கல்லு ரோட்டிலை போனால் ஒரு குடியேற்றத் திட்டமிருக்கு அங்கதான் இருக்கிறம்"

"சொந்த இடம்"

" இளவாலை அங்கை எங்களுக்குச் சொந்தமாய் தோட்டக் காணியிருந்தது. ஆப்பா வெத்திலைத் தோட்டம் செய்தவர் நல்ல வருமானம் நல்லாய்த்தான் இருந்த நாங்கள் இப்ப வீட்டில்லை, தோட்டமில்லை, உழைப்பில்லை அம்மாவும் இல்லை.

ஆமிக்காறர் வாறாங்களெண்டு சனங்களெல்லாம் ஓடிச்சிதுகள் நாங்களும் ஓடினம் அம்மாவும் எங்களோடை ஓடி வந்தவ கொஞ்சத்தூரம் வந்து பார்த்தால் அம்மாவைக் காணயில்லை துவக்கு வெடி கிட்டக்கிட்ட கேட்டிது அதாலை திரும்பிப் போகேலாமல் போச்சிது அம்மா எப்பிடியும் வருவா எண்ட நம்பிக்கையில வந்தம்....

அங்கையிந்து ஓடி வந்து சண்டிலிப்பாய் பள்ளிக்கூடத்திலை இருத்தம் பிறகு மானிப்பாய் அந்தோனியார் கோயிலிலை இருத்தம்... பிறகுதான் இஞ்சை வந்தம்...

நாலு மாதத்துக்குப் பிறகு இளவாலையிலை இருந்து ஒரு சுவாமியார் வந்தவர் அவரைப் போய் சந்திச்சம் அவரிட்டை இளவாலையிலை செத்துப்போன ஆக்களின்ரை விபரமெல்லாம் இருந்தது. அதிலை அம்மாவின்ரை பெயரும் இருந்தது ஆமிக்காரர் சுட்டவங்களெண்டு சுவாமியார் சொன்னார். பாலசுந்தரம் தனது சோகக் கதையைக் கூறி முடிக்கிறான்.

தேநீருக்குள் விழுந்த பாண் துண்டு ஊறிப் பிய்வது போல கணேசனின் இதயம் வேதனையில் ஊறிப் பிய்கின்றது. கையிலிருந்த சிகரட்டைக் கூட கணேசன் மறந்து போய்விட்டார். சிகரட் எரிந்து சாம்பல் உதிர்ந்து கொண்டிருக்கின்றது.

கணேசன் மாணவர் உலகத்தை மட்டுமல்ல மனித உலகத்தையும் சரியாக உமிழ்ந்த அனுபவமிக்கவர் பாலசுந்தரத்தின் உணர்வுகளை அணுஅணுவாயப் புரிந்து கொள்கிறார்.

கணேசனால் தொடர்ந்து பேச முடியவில்லை.

சில வினாடிகள் கணேசனுக்கருகில் மௌனமாக நின்ற பாலசுந்தரம் என்னத்தை நினைத்துக் கொண்டானோ - திரும்பவும் இரவீந்திரன் அலுவலத்துள் நுழைகின்றாள்.

இரவீந்திரன் மேற்கண்ணால் பாலசுந்தரத்தை பார்த்து விட்டு எதுவுமே பேசாமல் தனது வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்.

"சேர்" மூன்றாவது தடவை... அதே இரக்க உணர்வு நிறைந்த குரல்

"என்ன"

"எனக்கு சம்பளம் வேண்டாம் சேர்"

இரவீந்திரன் எதுவுமே பேசவில்லை தனது வேலையில் ஈடுபட்டிக்கின்றார்.

"சேர்..." திரும்பவும் அழைக்கின்றான் பாலசுந்தரம்.

"என்ன"

"எனக்கு சம்பளம் வேண்டாம் சேர்" இரவீந்திரனின் செவிப்பறையில் பாலசுந்தரத்தின் பேச்சொலிகள் பதியவில்லை.

"தம்பி... என்னை வேலை செய்ய விடுங்கோ தொந்தரவு செய்யாதையுங்கோ..."

சிறிது கடுமையாக இரவீந்திரன் கூற பாலசுந்தரம் ஏமாற்றத்தோடு அலுவலகத்தைவிட்டு வெளியே வருகிறான். வந்தவன் கணேசனுக்கு கிட்டவாக நிற்கின்றான்.

"எனக்குச் சம்பளம் வேண்டாம் சேர்..." பாலசுந்தரம் கூறிய இந்த வாக்கியம் கணேசனின் இதயத்தில் உண்ணி போல் ஒட்டிக் கொண்டு கடிக்கிறது...!

வாழ்க்கையில் பெரும் வறுமை... நோயாளரை பராமரிக்க வந்திருக்கின்றான்... சம்பளம் வேண்டாம் என்று கூறுகின்றான்.

புரிய முடியாத எத்தனையோ இதயங்களின் நாடித்துடிப்புகளை இரண்டொரு பார்வையில் புரிந்து கொண்டு

விடுகின்ற கணேசன்... குழம்பிப் போய் நிற்கின்றார்.!

கணேசனின் பார்வை மீண்டும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிடுகின்றது.

இருவரது பார்வைக்கோடுகளும் சந்திக்கின்றன. கணேசனின் பார்வையில் விசாரணை உணர்வு... பாலசுந்தரத்தின் பார்வையில் விரக்தி உணர்வு...!

"தம்பி..." கணேசன் மீண்டும் பேச்சைத் தொடங்குகின்றார்.

"சேர்..."

"என்ன கடுமையாய் யோசிக்கிறியள்..."

"யோசிச்சு என்ன செய்யிறது..."

"இலவசமாய் வேலை செய்ய வந்தீங்களா?" கணேசன் இப்படிக் கேட்டாதும் பாலசுந்தரம் கணேசனைப் பார்க்கின்றான்... மூக்கடியிலுள்ள பூனை மயிருக்குள் வியர்வைத் துளிகள் பனிக்கின்றன... அவனது உதடுகள் துடிக்கின்றன... குரல்வளையின் அடியிலுள்ள ஒரு ரூபா குத்தியளவிலான சிறிய குழி... வெட்டப்பட்ட ஆமையின் ஈரல் துடிப்பது போல் துடிக்கின்றது...

குழந்தையின் பிரசவத்திற்கு முன் - தாய்க்கு ஏற்படுகின்ற நோக்காட்டுக் குத்துப்போல்... சில உண்மைகளை பிரசவிக்கப் போகின்ற சில உணர்வுகள் அவனது முகத்தில் பளிச்சிடுவதைக் கணேசன் அவதானித்துக் கொண்டு பேச்சை தொடர்கின்றார்...

"வேலை தர முடியாதெண்டு மனேஜர் சொல்லிப் போட்டாரா... கணேசன் பரிவோடு கேட்கிறார்.

"ஓம் சேர்"

"வீட்டில் கஷ்டந்தானே"

"ஓம் சேர்"

"அப்ப சம்பளம் வேண்டாமெண்டு சொன்னீங்களே"

"வீட்டிலை சரியான கஷ்டம் தான் சேர்... நான் அதுக்காக வேலைக்கு வரயில்லை..."

"அப்ப... ஏன் வேலைக்கு வந்தீங்கள்..."

"சோதனைக்கென்னும் இரண்டு மாதம் இருக்கு சேர்... இரவிலை படிக்கிறதெண்டால் மண்ணெண்ணை வாங்க வசதியில்லை... இஞ்சையெண்டால் நோயாளியையும் பராமரித்து வெளிச்சத்திலை படிக்கலாமெண்டதுக்காககத்தான் சேர் 'புத்தகமும்' கொண்டு வந்தனான்..." பாலசுந்தரம் கூறிவிட்டு கணேசனைப் பார்க்கின்றான். இயலாமை உணர்வு மேலீட்டால், அவனது நாடி முனையிலுள்ள தசை சுருங்கித் துடிக்கின்றது...!

கணேசனின் இதயம் சில விநாடிகள் தரித்து... மீண்டும் துடிக்கின்றது.

கணேசன் பரிவோடு பாலசுந்தரத்தின் கையைப் பிடிக்கின்றார்!

நோயாளியையும் பராமரித்து வெளிச்சத்திலை படிக்கலா மெண்டதுக்காகத்தான்... புத்தகமும் கொண்டு வந்தனான்..." பாலசுந்தரத்தின் இந்தப் பேச்சு கணேசனின் செவிப்பறையை கொதிநீராய் அவித்துக் கொண்டிருக்கின்றது.!

ஈழநாதம் 27.05.1994

# 10

# ஒல்லித் தேங்காய்கள்

அதிபரால் இருக்கவும் முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை... மேசையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பாடப்பதிவுக் கொப்பிகளையும், இடாப்புக்களையும் எடுப்பதும் விரிப்பதும், மூடுவதுமாக இருக்கின்றார் அவரது மனம் நீரில் விழுந்த ஒல்லித் தேங்காய் போல் தத்தளிக்கின்றது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகுமென நேற்றைய தினசரி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

'ஆசிரியராகி, உப அதிபராகி... அதிபராகி... முப்பது வருட சேவையை முடித்தவர்... இன்னும் ஐந்து மாதங்களில் ஓய்வு பெறப்போகின்றார்.

வருகின்ற பரீட்சை முடிவுகள் தனக்கு அவமானத்தை ஏற்படுத்திவிடுமா என்ற ஏக்கம் அவருக்கு.

நேற்றுப் பிற்பகலில் உப அதிபர் நடராசாவைச் சந்தித்து, இன்று காலையில் கல்விக் கந்தோருக்குச் சென்று பரீட்சை முடிவுகளை எடுத்து வருவதற்கான ஒழுங்கு செய்திருந்தார்.

இன்னும் சிலமணி நேரத்தில் உப அதிபர் நடராசா பரீட்சை முடிவுகளுடன் வந்துவிடுவார்.

பாடசாலையிலிருந்து இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றி, பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருப்பதையும் அதிபர் யன்னலுக் கூடாக அவதானித்துக் கொள்கிறார்.

"சேர்... உங்கடை நியமனக் கடிதத்தை நான் வெச்சிருக்கிறன்... மிச்ச வேலையளை நாளைக்குப் பாப்பம்... இண்டைக்கு ஒருமாதிரிச் சமாளியுங்கோ அரியபுத்திரனைப் பார்த்துக் கூறுகின்றார் அதிபர்.

அதிபர் - கனகச்சந்திரன்

அரியபுத்திரன் - இவர் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக இப்பாடசாலைக்கு இன்றுதான் நியமனம் பெற்று வந்திருக்கின்றார். சில நிமிடங்களுக்கு முன்புதான் நியமனக் கடிதத்துடன் இங்கு வந்தார், அதிபரின் வேண்டுதலை அரியபுத்திரன் ஏற்றுக்கொண்டு தலையை மட்டும் அசைத்துக் கொள்கிறார்.

"என்ன சேர்... யோசிக்கிறியள்..." அரியபுத்திரனின் முகத்தை அவதானித்த அதிபர் கேட்கின்றார்.

"ஒண்டுமில்லைச் சேர்..."

"பரவாயில்லை சொல்லுங்கோ சேர்..."

இந்தக் கிராமத்தைப் பற்றித்தான் சேர் யோசிக்கிறன்... பதினைஞ்சு வரியத்துக்கு முன்னம் இந்தக் கிராமம் எப்படி இருந்திதோ... அப்பிடியேதான் இப்பவும் இருக்கு... எந்த முன்னேற்றமும் இல்லை..." அரியபுத்திரன் மிகவும் வேதனையோடு கூறுகிறார். அரியபுத்திரன் ஏன் கிராமத்தைப் பற்றிக் கவலைப்படுகிறார் என்ற காரணத்தைக் கனகச்சந்திரனால் புரிந்து கொள்ள முடியவில்லை... அரியபுத்திரனின் பேச்சை ஆமோதிப்பது

போல் இலேசாகச் சிரித்துக் கொள்கின்றார். "எல்லாம் விளக்குப் புடிச்சுக் கிணத்துக்கை விழுகிற வேலைதான்..." கனகச்சந்திரன் என்னத்தை நினைத்துக் கொண்டாரோ... இப்படிக் கூறுகின்றார்.

கனகச்சந்திரன் இலேசானவரல்ல... காலத்தோடு முற்றி... முற்றாகக் கனிந்த பழம்! அவர் வாய்திறந்து ஏதாவது கூறினால் அதில் ஏதாவதொரு அழமான கருத்திருக்கும்.

கிட்டத்தட்ட நூறடி நீளமான அந்த மண்டபத்தில் முன்பக்கத்தில் அதிபரின் காரியாலயம் அமையந்திருக்கின்றது. அதிபரின் அலுவலக வாசலோடு இணைந்து ஐந்தடி நீளமானதொரு விறாந்தையும் அந்த மண்டபத்தோடு அமைந்துள்ளது. அந்த விறாந்தையிலிருந்து பத்தடி தள்ளி ஏழு செவ்விளை மரங்கள் 'தாய்ப்பால்' குடித்து வளர்ந்த குழந்தைபோல் மூக்கும் முழியுமாக நிற்கின்றன.

பரீட்சை முடிவுகளை அறிய வந்த மாணவர்கள் அந்த மரங்களில் கீழ் நிற்கின்றனர்.

"மொத்தமாக எத்தனை பிள்ளைகள் சேர் சோதினை எடுத்தது.." அங்கு வந்த இராஜேஸ்வரன் ஆசிரியரிடம் கேட்கிறார் கனகச்சந்திரன். அவருக்கு தெரியாததல்ல....

"முதலாம் முறை எடுத்தது முப்பத்தாறு பேர்... இரண்டாம் முறை எடுத்தது முப்பத்தேழு பேர்..." வாய்ப்பாடமாக கூறுகிறார் அதிபரின் அலுவலக வேலைகளை எல்லாம் இரஜேஸ்வரன் ஆசிரியர் தான் செய்வார் சிறந்த ஆசிரியர் என்ற பெயர் வாங்கியவர்.

"மொத்தம் எழுபத்தி மூண்டு... இதிலை இருபதெண்டாலும்... பாஸ் பண்ணிச்சுது களெண்டால்... அதிபர் அங்கலாய்க்கின்றார்.

"வழமையாய் கிட்டத்தட்ட எத்தனை புள்ளையள் சேர்... பாஸ் பண்ணிறவை..."இதுவரை மௌனமாக இருந்த அரியபுத்திரன் கேட்கிறார்.

"பத்துப் பதினைஞ்சு புள்ளையள் பாஸ் பண்ணும்..."

"பத்துப் புள்ளையள் எண்டு பார்த்தாலும்... கடந்த பதினைஞ்சு வருஷத்திலையும் நூற்றி அம்பது புள்ளையள் பாஸ் பண்ணியிருக்க வேணும். நூறு உத்தியோககாரராவது இருக்க வேணும்... நான் விசாரிச்சு பார்த்ததிலை... பத்தோ பதினைஞ்சு மாஸ்ரர்மார் மட்டும் இருக்கினம்... மிச்சப்பேர் எங்கை...? இந்தக் கிராமத்திலை என்ன முன்னேற்றமிருக்கு சேர்..." அரியபுத்திரன் புள்ளி விபர அடிப்படையில் பேசுகிறார்.

இராசேஸ்வரன் இக்கிராமத்தைச் சேர்ந்தவர். அரியபுத்திரன் இக்கிராமத்தைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டது... இராசேஸ்வரனின் மனதில் தைத்திருக்க வேண்டும். அரியபுத்திரனை மிகவும் அவதானமாகப் பார்க்கின்றனர்.

"இவர் மிஸ்டர் அரியபுத்திரன் எங்கடை பள்ளிக்குடத்துக்குப் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக வந்திருக்கிறார்..." அரியபுத்திரனை இராசேஸ்வரனுக்கு அறிமுகப்படுத்துகிறார் அதிபர்.

இராசேஸ்வரன் அரியபுத்திரனைக் கவனமாகப் பார்க்கின்றார்.

உயர்ந்த மெல்லிய உடல், நரைத்தாலும் மிகப் பக்குவமாக வாரி விடப்பட்டிருக்கும் தலைமயிர்... நரைத்த அடர்த்தியான மீசை... தடித்த பிறேமுள்ள கண்ணாடி... மடிப்புக் கலையாத உடுப்புக்கள்... சப்பாத்து... சென்ற் வாசனை... பெருவாழ்வு வாழ்ந்த தளகர்த்தத்தனமான முக அமைப்பு... இராசேஸ்வரனின் மனம் ஒட்டுத் தாளைப்போல் அரியபுத்திரனின் உருவத்தைப் பதித்துக் கொள்கின்றது...

"என்ன சேர்... நான் சொல்றது புழையா... ஆகக் குறைஞ்சது வருஷம் ஒண்டெண்டு பார்த்தாலும் பதினைஞ்சு பட்டதாரிகளாவது இருந்திருக்க வேணும்... ஆக ஐஞ்சு பட்டதாரிகள் மட்டும் இருக்கினம்... ஆக இந்தக் கிராமம் எப்பிடிச்சேர் முன்னேர்றது..."

....." அரியபுத்திரன் மீண்டும் கூறுகிறார்,

"விளக்குப் புடிக்க கிணத்துக்கை விழுகின்ற வேலைதான்..." கனகச்சந்திரன் முன்பு கூறியதையே திரும்பவும் கூறுகிறார். இராசேஸ்வரனாலோ, அரியபுத்திரனாலோ அதபரின் பேச்சை புரிந்து கொள்ள முடியவில்லை.

அதிபர் சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்க்கின்றார்... பத்தரை மணி

பரீட்சை முடிவு பற்றிய எண்ணம் எலியாய் அதிபரின் மனக்கயிற்றை அறுக்கின்றது.

"கந்தோர்க்காரர் ஒன்பது மணிக்குத்தான் வருவினம்... வந்து 'கந்தோர் தர்பார்' நடாத்தி முடிஞ்சு கதிரைக்கு வர... எப்படியும் பத்து மணியாகும். அதுக்குப்பிறகு 'றிசல்டை' வாங்கிக் கொண்டுதானே வரவேணும்... எப்பிடியும் பதினொரு மணியெண்டாலும் செல்லும்..." கனகச்சந்திரன் மன அரிப்போடு கூறிக் கொள்கிறார்.

கனகச்சந்திரன் எழுந்து விறாந்தைக்கு வருகிறார். மாணவர்கள் செவ்விளை மரத்தின் கீழ் நிற்கின்றனர்.

கடந்த பன்னிரண்டு ஆண்களாக இந்தப் பாடசாலை எல்லைக்குள் பகல் பொழுதின் பெரும் பகுதியைக் கழித்தவர்கள்... புத்தகம், பென்சில், கொப்பி... இன்னும் சில மணித்தியாலங்களில் தங்களின் முடிவுகளைச் சந்திக்கப் போகின்றனர்.

எத்தனைபேர் வெற்றியடைந்து படிப்பைத் தொடரப் போகின்றனரோ...

எத்தனைபேர் வெற்றியடைந்தும் படிப்பைத் தொடரமுடியாமல் அவதிப்படப் போகின்றனரோ...

எத்தனைபேர் தோல்வியடைந்து துயரப்படப் போகின்றரோ...

கனகச்சந்திரனின் இதயம் கலங்கி... பல சிந்தனைக் குமிழ்கள் வெடித்துச் சிதறுகின்றன... எத்தனையோ பரீட்சை முடிவுகளைச் சந்தித்த அனுபவம்... காயப்பட்டு தளும்பான இடத்தில் முட்கம்பி குத்திக் கிழித்து எரிவதைப்போல்... அவரது மனம் எரிகின்றது.

ஒவ்வொருவராக அவர் பார்க்கின்றார்... சகலரின் முகங்களிலும் ஏக்க உணர்வுகள்...

"எத்தனை மணிக்குச் சேர்... றிசல்ட் வரும்...." அவள் யசோதா கேட்கிறாள்.

"உப அதிபர் போட்டார்... எப்பிடியும் பதினொரு மணிக்குள்ள வந்திடுவர்..."

"எங்களுக்கு பயமாய்க் கிடக்குச் சேர்..." கணேசலிங்கம் கூறுகின்றான்.

"ஏன்..."

"பெயில் விட்டால்... வீட்டை போய் என்னத்தைச் சேர்... செய்யிறது..." எதிர்கால வாழ்க்கை உணர்வு... பிறந்த வடு மாறாத நாய்க்குட்டியின் கண்கள் துடிப்பதைப் போல் துடிப்பதை அதிபர் உணர்கிறார்...

புத்தகத்தையும்... கொப்பியையும் பேனாவைவும் விட... எழுத வாசிக்கப் பழக்கியதை விட... எங்கடை வாழ்க்கைக்கு ஆதாரமாய் வேறு எதைக் கற்பித்தீர்கள் என்பதைத்தான் கணேசலிங்கம் கேட்கிறான் என்பதை அதிபர் புரியாமலில்லை...

"இன்றைய பாடசாலைகள்... தலைநகரிலிருந்து இறக்குமதியாகும் ஏட்டுச் சுரக்காய்களின் விற்பனை நிலையங்கள்... கனகச்சந்திரனின் இதயத்துள் தேங்கிக் கிடக்கும் அனுபவங்கள் குரல் எழுப்புகின்றன...

இதே பிரச்சினையைக் கடந்த முப்பது வருஷங்களாகச் சந்தித்து... சமாளிக்கப் பழகியவர் கனகச்சந்திரன். எந்தவித கஷ்டமுமின்றி அவர் தன்னைச் சமாளித்துக் கொள்கிறார்.

"நீங்கள் எல்லாரும் பாஸ் பண்ணத்தான் போறியள்... ஏ.எல் படிக்கத்தான் போறியள்... என்ன பாலசிங்கம் நான் சொல்றது சரி தானே..." இந்த மாணவர்களுள் பாலசிங்கம் மிகவும் நல்லவன், சமய பக்தி மிக்கவன். அவனிடம் அதிபருக்கு தனியான அபிமானமுண்டு எதற்கும் அவனைத்தான் கூப்பிடுவார். அந்த அடிப்படையில் தான் இப்போதும் அவனிடமே அபிபிராயம் கேட்கின்றார்.

"இண்டையோடை எங்கடை பள்ளிக்குட வாழ்க்கையும் சரி... எனித்தான் சேர் பிரச்சினை... மதவிலை குந்த வேண்டியது தான்..." பாலசிங்கத்தை முந்திக்கொண்டு பேசுகிறான் திசநாயகம் அதிபர் திசநாயகத்தைப் பார்கிறார்.

"திசநாயகம் நீங்கள் இந்தப் பாடசாலையை விட்டுப் போனாலும்... உங்கடை ஞாபகம் எங்களுக்கிருக்கும்"

"ஏன் சேர்"

"நீங்கள் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்தண்டைக்குத்தான் இந்தச் செவ்விளை மரங்களை வெச்சனாங்கள்..."

திசநாயகம் அதிபரைப் பார்க்கின்றான்.

"உங்களை இந்தப் பாடசாலையில் சேர்ந்த அண்டைக்கு உங்கடை தகப்பனார் இந்தச் செவ்விளை மரங்களைக் கொண்டுவந்து... தானே நிலமெடுத்துக் கிடங்கு வெட்டி நட்டுப் போட்டுப் போனவர்... உங்கடை பள்ளி வாழ்க்கைக்கும் இந்தச் செவ்விளை மரங்களுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயது..." அங்கு நின்ற சகல மாணவர்களும் எத்தனையோ தடவைகள் பார்த்துவிட்ட அந்த செவ்விளை மரங்களை இப்போது புதுமையாகப் பார்க்கின்றனர்...

வரிசையாக ஏழு செவ்விளை மரங்கள்... மூக்கும் முழியாக... வட்டு நிறைந்த காய்களுடன்... நிறைவோடு நிற்கின்றன.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு...

திசநாயகம் தகப்பனின் வேட்டித் தலைப்பைப் பிடித்தபடி ஐந்து வயதுச் சிறுவனாக இந்தப் பாடசாலைக்கு வந்தான்... தனது மகனும் படிக்கப் போகிறான் பெரியவனாகப் போகிறான் என்ற கற்பனைப் பூரிப்பில் அவனது தகப்பனார் தன்னிடமிருந்த ஏழு செவ்விளை மரங்களையும் இப்பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார்... அதன் பின்பு வகுப்பு ரீதியாகப் பசளை இடப்பட்டு... வகுப்பு ரீதியாக தினசரி தண்ணீர் ஊற்றப்பட்டு... இன்று பயனுள்ளவைகளாக அவைகள் நிற்கின்றன.

அதிபர் திரும்பவும் தனது கதிரையில் வந்தமர்கிறார். அரியபுத்திரன் அதே இடத்தில் அமர்ந்திருக்கின்றார்.

"நீங்கள் எந்த இடம் சேர்..." அதிபர் அரியபுத்திரனிடம் கேட்கிறார்.

"இந்த ஊர்தான்..." அரியபுத்திரன் சிரித்தபடி கூறுகிறார். அதிபர் சிறிது அதிர்வுடன்... புருவங்களைச் சுருக்கி கேள்விக் குறியோடு அரியபுத்திரனைப் பார்க்கிறார் அதிபர்.

"இந்த ஊரெண்டால்"

"மெயின் றோட்டிலை அந்த அச்சகம்"

"அச்சகத்துக்கு எந்தப் பக்கம்..."

"அச்சகத்துக்கு பக்கத்திலை ஒரு ஒழுங்கை..."

"ஒழுங்கையிலை..."

"மூன்றாவது வீடு..."

"மூன்றாவது வீடெண்டால்..."

"யாழ்ப்பாணத்து புத்தி"யில் விசாரணை தொடர்ந்து... இப்போது மூன்றாவது வீட்டை நினைவுபடுத்துகிறார் அதிபர்.

"சுந்தரலிங்கம்..."

"ஓம் தெரியும்... அவற்றை பெண்சாதி ஒரு ரீச்சர்..."

"அவற்றை மூத்த மகன்தான் நான்..."

"அப்பிடியே... எங்கடை சுந்தரலிங்கத்தாற்றை மகனே... கிட்டக்கிட்டத்தான் நிக்கிறியள்... உங்கடை அம்மாவின்ரை ஒண்டைவிட்ட சகோதரியின்ரை மகளைத்தான்... என்ரை இளையவன் கட்டினவன்... அப்ப கல்வி அமைச்சிலை பெரிய உத்தியோகமாய் இருந்தது..." அதிபர் பெருமகிழ்ச்சியுடன் விசாரணையைத் தொடர்கிறார்.

"நான் தான்..."

"கல்வி அமைச்சிலை என்ன உத்தியோகமாய் இருந்தனீங்கள்"

"கல்வித் திட்டமிடல் பிரிவிலை..."

"சரி... சரி... சந்தோஷம்..." அதிபர் பெரு மகிழ்ச்சியுடன் கதையை முடிக்கிறார்.

அரியபுத்திரன்

இவர் 'கிளறிக்கலில்' எடுபட்டு பல இடங்களிலும் வேலை செய்து பதவி உயர்வுகள் பெற்று இறுதியாகக் கல்வி அமைச்சில் கல்வித் திட்டமிடல் பிரிவில் வேலை செய்து ஓய்வு பெற்றவர். தான் பிறந்த மண்ணில் சிறிது காலமாவது வாழ்வேண்டும் என்ன இறுதிக் காலத்தில் பலருக்கேற்படுகின்ற 'மண்பற்று' இவருக்கும் ஏற்பட்டு

ஊரோடு வந்தவர். அளவுக்கு மிஞ்சிய ஓய்வு... தொல்லையாகி... அதைச் சமாளிக்க... இந்தப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனத்தை எடுத்துக் கொண்டார்.

"இப்ப நடைமுறையிலை உள்ள கல்வித்திட்டம்... நீங்கள் போட்டதுதானே..." தலையை நிமிர்த்தாமல் கேட்கிறார் கனகச்சந்திரன்....

"ஓமோம்..."

"கஷ்டமான வேலை..."

"சரியான கஷ்டம் சேர்... கல்வி உளவியல் தெரியவேணும்... கல்விக் கோட்பாடு தெரியவேணும்... கல்வித் தத்துவம் தெரியவேணும்... அயல் நாடுகளின்ரை கல்வி அமைப்புத் தெரியவேணும்... சமூகவியல் தெரியவேணும்... சரியான கஷ்டம்... என்னும் நான் ஐஞ்சு வருஷம் வேலை செய்யலாம்... இப்ப எனக்கு ஐம்பத்தாறு வயது... கஷ்டத்திலை தான் பென்சன் எடுத்தனான்..."

"எல்லாம் நன்மைக்குதான்... உங்கடை திட்டங்களை ஒருக்கால் நீங்களே நடைமுறைப்படுத்தி பாருங்கோவன்..." அதிபர் அர்த்தபுஷ்டியாகக் கூறுகிறார். அரியபுத்திரன் பெருமிதத்தோடு சிரிக்கிறார்.

"எங்கடை கிராமப் புள்ளைகள் படிப்பிலை எப்பிடிச் சேர்..."

"கிராமப்புறந்தானே பெரிசாய் எதிர்பார்க்கேலாது..."

"கல்வித் திட்டமும் அதைக் கற்பிக்க ஆசிரிய பயிற்சிகளும் பொதுவானதாக இருக்கயிக்கை... கிராமப்புற பரீட்சை றிசல்ட் மட்டும் குறைஞ்சு போறதுக்குக் காரணமில்லையே சேர்..."

"நீங்கள் சொல்றதும் சரிதான்..." அதிபர் தலை நிமிராமலேயே பதில் கூறுகிறார்.

"சேர்... நடராசா சேர்... வாறார்..." றிசல்ட் எடுக்கச் சென்ற உப அதிபரின் வருகையை யசோதா அதிபருக்குக் கூறுகிறாள். நடராசா மாஸ்ரர் அதிபரின் அலுவலகத்துள் வருகின்றார். அவரைத் தொடர்ந்து முதலாம்முறை பரீட்சை எடுத்த மாணவர்களும், இரண்டாம்முறை பரீட்சை எடுத்த மாணவர்களும், ஆசிரியர்களும் வருகின்றனர். அலுவலகம் நிறைகின்றது.

அதிபர் றிசல்ட்டைப் பார்க்கிறார்... அலுவலகத்துள் பெரும் அமைதி...

"முதலாம் முறை எடுத்தவையிலை... ஏழு பேர் பாஸ்... மூன்று பேர்... ஏ.எல் செய்யலாம்... இரண்டாம் தடவை எடுத்தவையிலை... எட்டுப் பேர் பாஸ்... நாலு பேர் ஏ.எல் செய்யலாம்..." அதிபரின் முகத்தில் திருப்தியின்மை பிரதிபிக்கின்றது.

"பேருகளை வாசியுங்கோவன் சேர்..." யசோதா அதிபரைத் துரிதப்படுத்துகிறாள்.

"முதலாம் முறை எடுத்தவர்களிலை... கணேசலிங்கம், பாலசிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா, பொன்னம்பலநாதன், பாக்கியநாதன், தர்மராசா... ஆகியோர் பாஸ் பண்ணியிருக்கினம்... பாலசிங்கமும் பாக்கியநாதனும் ஸ்ரீஸ்கந்தராசாவும் ஏ.எல் செய்யலாம்... இரண்டாம் முறை எடுத்தவர்களிலை... யசோதா, யோகேஸ்வரி, ரவீந்திரன், பாலசுந்தரம், கைலாசநாதன், சிவஞானசுந்தரம், குமாரசாமி ஆகியோர் பாஸ் பண்ணியிருக்கினம் இதிலை... யசோதா, ரவீந்திரன், பாலசுந்தரம், கைலாசநாதன் ஆகியோர் ஏ.எல் செய்யலாம்...

மொத்தமாக பதினைந்து பேர் பாஸ் பண்ணியிருக்கினம்...

ஏழு பேர்... ஏ.எல் செய்யலாம்" அதிபர் கூறிவிட்டு றிசல்டை விபரமாகப் பார்க்க ஆரம்பிக்கின்றனர்.

முதல் முறை பரீட்சைக்குத் தோற்றிப் பெயில் விட்டவர்கள் திரும்பவும் தங்கள் வகுப்புக்குச் செல்கின்றனர்... இருந்த

கதிரைகளில் இன்னும் ஒரு வருஷம் அவர்கள் இருக்கலாம்...

இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றிப் பெயிலானவர்... மௌனமாக நிற்கின்றனர்... இவர்களின் பாடசாலை வாழ்க்கை மேற்கடிவானத்தில் இறங்கிவிட்டது....

இவர்களில் முப்பதுபேர்... சகலரது முகங்களிலும் கழுத்து வெட்டப்பட்ட கோழியின் குரல்வளையிலிருந்து குருதி கொப்பளிப்பது போல்.... ஏக்க உணர்வும் ஏமாற்ற உணர்வும் கொப்பளிக்கின்றன...!

“போட்டு வாங்கோ பிள்ளையள்” என்று கூற அதிபராலும் முடியவில்லை.... “போட்டுவாறம் சேர்” என்று கூற மாணவர்களாலும் முடியவில்லை...

அதிபரின் அலுவலக வாசலில் ஏழு செவ்விளை மரங்கள்... ஏழு காய்களிலிருந்து பிரசவித்தவைகள்... இன்று வட்டு நிறைந்த காய்களுடன் நிற்கின்றன....

இவைகளுக்கும் இந்த மாணவர்களின் பள்ளி வாழ்க்கைக்கும் கிட்டத்தட்ட ஒரே வயது...

ஆனால் இந்த முப்பது மாணவர்களும்... ஓல்லித் தேங்காய்களாக நிற்கின்றனர்...? அதிபர் பெருமூச்சு விடுகின்றார்...! அது ஆத்மாவின் முகாரி இராகம்! அரியபுத்திரன் அவர் தலை சிமிரவேயில்லை!

ஈழநாதம் 14.04.1995

# 11

# குறுணிக்கல்

இளவாலையை விட்டு வெளியேறி இரண்டு வருடங்களுக்க மேலாகி விட்டது. இப்போது இருவரும் முதல் முறையாகச் சந்திக்கின்றர். எதிர்பாராத சந்திப்பு இருவருக்குமே பெருமகிழ்ச்சி.

வீதியோரத்தில் நின்ற பூவரசு மரத்தோடு சைக்கிளைச் சாத்திவிட்டு திருநாவுக்கரவுக்குப் பக்கத்தில் வந்தமர்கிறார் இரத்தினம்.

ஒரே மண்ணில் பிறந்து ஒன்றாகவே படித்து...

திருநாவுக்கரசு தான் உடுத்திருந்த சாறத்தின் கீழ்ப்பகுதியால் முகத்திலும், குரல்வளையிலும் வடிந்து கொண்டிருந்த வியர்வையைத் தேய்த்துத் துடைக்கின்றார்.

"என்னடா இப்பிடி மாறிப் போனாய்..." உதட்டில் விரலை வைத்துக் கேட்கின்றார் இரத்தினம்.

"புற அழகுதான்ரா மாறியிருக்கு... அக அழகு இன்னும் அப்பிடியே தான்ரா இருக்கு..." பதில் கூறிய திருநாவுக்கரசு வழகைபோல் சிரிக்கிறார்.

" உன்ரை சிரிப்பு... அப்பிடியே இருக்கு..." இருவரும் சேர்ந்து சிரிக்கின்றனர்.

"உன்ரை பாடெல்லாம் எப்பிடி... இப்ப எங்கை இருக்கிறாய்... தொழில்துறை..." திருநாவுக்கரசு கேள்விகளை அடுக்குகின்றார்.

"எல்லாம் இளவாலையோடை சரி... இப்ப படுகிற பாடு... நாட்டிலையம் நிம்மதியில்லை... வீட்டிலையும் நிம்மதியில்லை... இப்பிடியும் ஒரு வாழ்க்கை..." இரத்தினம் மிகவும் வேதனையுடன் கூறுகின்றார்.

"நீ இப்ப எங்கை இருக்கிறாய்..."

"செம்மணி றோட்டிலை..."

"வீடு எப்பிடி வசதியானதே.."

"எங்களுக்குப் போதுமானது.." திருநாவுக்கரசு கூறுகின்றார்.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்கின்ற பாதையில் கைதடிப் பாலத்தை அண்மித்துள்ள வளைவில் இடதுபக்கமாகவுள்ள சைக்கிள் கடை வாசலில் இருவரும் அமர்ந்திருக்கின்றனர். திருநாவுக்கரசின் சைக்கிள் பின்சில்லில் ஐந்து கம்பிகள் உடைந்து விட்டன. அதைப் பூட்டக் கொடுத்துவிட்டு சைக்கிள் உழக்கிய காலலுப்புத் தீரக் கால்கள் இரண்டையும் நீட்டி அமர்ந்திருந்தார் திருநாவுக்கரசு. இரத்தினம் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தார்.

"லொறியிலை ஏத்திற பாரங்களைச் சைக்கிள்ளை ஏத்தினால் கம்பியள் உடையுந்தானே..." சைக்கிளைப் பூட்டிக் கொண்டிருந்த சைக்கிள் கடைக்காரன் கூறுகிறான். கடைக்காரன் கூறியதைக் கேட்ட இரத்தினம் ஆச்சரியத்தோடு திருநாவுக்கரசைப் பார்க்கின்றார்.

"என்ன பாக்கிறாய்..."

"நீ இப்ப விறகு கட்டிறியே.."

“எப்பிடியோ வாழவேணுமே...”

“அதுக்காக...” இரத்தினம் வாக்கியத்தை முடிக்காமல் சுற்றிப் பார்க்கின்றார். வேலிக் கரையோடு மிகப் பெரியதொரு மரக்குற்றியைப் பார்த்த இரத்தினம் திரும்பி திருநாவுக்கரசைப் பார்க்கின்றார். ‘இந்தப் பெரிய குற்றியை எப்பிடியடா கொண்டு வந்தாய்’ இந்த உணர்வோடுதான் இரத்தினம் பார்க்கின்றார்.

“முருகா.. இந்தப் பாரத்தை இவ்வளவு தூரம் சைக்கிளிலை...” இரத்தினத்தின் உதடுகள் துடிக்க நுனி நாக்கு நடுங்குகின்றது.

“மனப் பலமிருந்தால் எதையும் செய்யலாம்...”

“சும்மா தத்துவம் கதைக்கிறாய்..” இளவாலையில் திருநாவுக்கரசு ஓரளவு மதிப்புள்ளவர். பெரும் படிப்பு படிக்காவிட்டாலும் நிறையப் புத்தகங்கள் வாசித்தவர். முக்கியமான விடயங்களை எழுதி வைக்கின்ற பழக்கமும் இவரிடமுண்டு. சரளமாகத் தத்துவங்கள் கூறுவார்.

பத்து வயதுச் சிறுவர்கள் இருவர் சேர்ந்து கட்டிப் பிடிக்கக்கூடிய பருமனிலானதொரு மஞ்சவுண்ணா மரத்தின் அடிக்குற்றி. வேர்கள் ஒழுங்காகத் தறிக்கப்பட்டு வாளினால் அரியப் பட்டிருந்தது.

வைரவ கோயிலடியிலுள்ள மாவீரர் நினைவாலயத்திற்கருகில், சைக்கிள் ஒரு கிடங்கில் விழுந்து... அவலப்பட்டு... சைக்கிளை நிதானப்படுத்தி மீண்டபோது... பின் சில்லில் உள்ள கம்பிகள் சிக்குப்பட்டு... திருநாவுக்கரசு ஒருவாற சைக்கிளை நிறுத்தினார். பக்கத்திலுள்ள சர்பத் கடைக்காரன் மிகவும் வாஞ்சையோடு திருநாவுக்கரசுக்கு உதவி செய்து... சைக்கிள் கடை இருக்கும் இடம் பற்றிய ஆலோசனையும் வழங்கினான்.

“என்னடா இரத்தினம் நெத்தியிலை சந்தனப் பொட்டைக் காணயில்லை...”

"அதெல்லாம் இளவாலையோடை போட்டிது..."

"ஏனடா.."

"எங்கடை வாழ்க்கைச் சிறப்பிலை... ஒரு சந்தனப்பொட்டு..."

இரத்தினம் இளவாலையில் வாழ்ந்த காலத்தில், நெற்றியில் பொட்டு வைக்காமல் எங்குமே செல்லமாட்டர். பரந்த நெற்றியில் இருபத்தைந்து சதக் குற்றியளவிலான ஒரு சந்தனப்பொட்டு வைத்து அதன்மேல் குண்டு மணியளவில் குங்குமம் வைத்திருப்பார். வட்டமான அவரது முகத்துக்குச் சந்தனப் பொட்டு மிகவும் அழகாகவே இருக்கும்.

"உப்பிடியெல்லாம் மனதை விடக்குடாது இரத்தினம்..."

"இளவாலையிலை உந்த மாதிரிச் சீவிச்சுப் போட்டு... இஞ்சை வந்து... பரிசுகெட்ட சீவியம் சீவிக்க வேண்டிக்கிடக்கு..."

"பரிசு கிடைக்கிறதும்... பரிசு கெட்டப் போறதும்... எங்களாலை தான்..."

"நீ ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு வியாக்கியானம் சொல்லுவாய்..."

மேற்கு வானத்தில் கதிரவன் இறங்கி. பனைமரங்களின் நிழல்கள் நீண்டு போயிருக்கின்றன... நாலுமணியிருக்கும். இலேசான மழை இருள் ஜில்லிட்ட காற்று... திருநாவுக்கரசு தலையை நிமிர்த்தி வானத்தைப் பார்க்கின்றார்.

"இரவைக்கு இலேசான மழை இறங்கினாலும் இறங்கும்.."

இன்று அதிகாலையில் வீட்டிலிருந்தும் புறப்பட்ட திருநாவுக்கரசு பத்து மணியளவில் பளைக்கு வந்து, இந்தக் குற்றியை வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். மிருசுவிலில் சிறிது தங்கி, கொடிகாமத்தில் அரை இறாத்தல் பாணால் இரைப்பை

வெறுமையை நீக்கிக் கொண்டு... அடுத்துக் கைதடிச் சந்தியில் இடது பக்கமாகவுள்ள வேப்பமரத்தின் கீழ் சிறிது தங்கலாமென எண்ணியிருந்தார்... எதிர்பாராத விதமாக இந்த இடத்தில் தங்கவேண்டி ஏற்பட்டுவிட்டது.

"அண்ணை... புதுக்கம்பியள் போட்டால் காசு கூடவரும்... என்னட்டைக் கிடந்த கம்பியளில நல்ல கம்பியளாய் தெரிஞ்சு போட்டிருக்கிறன்... கொஞ்சநாளைக்குப் பாவிக்கலாம்... வசதி கிடைக்கயிக்கை மாத்தி விடுங்கோ" சைக்கிள் கம்பிகளைப் பூட் முடித்த சைக்கிள் கடைக்காரன் மனிதாபிமானத்துடன் கூறுகிறான்.

ஆறு கப்புக்கள் நாட்டப்பட்டு சில தடிகளோடும்... புல்லுக் கொத்தப்பட்ட நிலத்தில் இயங்கும் சைக்கிள்கடை! திருநாவுக்கரசு நன்றியுணர்வோடு அவனைப் பார்க்கின்றார்.

"நானும் உங்களைப் போலைதான் வயாவிளானிலிருந்து இடம்பெயர்ந்து வந்தனான்... வயித்தைக் கழுவ வேணுமே..."

"எங்கை பார்த்தாலும் அகதியள்... என்ன பாவம் செய்தமோ.."

"அப்படிச் சொல்லாதை இரத்தினம்... நாங்கள் கற்பனை பண்ணாத எத்தனை சம்பவங்களைப் பாக்கிறம்... இதுகளெல்லாம் எங்கடை காலத்திலை நடந்தது என்று சொல்லிறதிலை பெருமையிருக்கு..."

"அப்பிடி என்னடா பெருமையிருக்கு..."

"எடேய்... இரத்தினம்... முந்தி சிங்கள ஆமியள் தேடித்தேடி எங்களை அழிச்சவங்கள்... இப்ப சிங்கள ஆமியளின்ரை முகாம்களைத் தேடித்தேடி எங்கடை பொடியள்... அழிக்கிறாங்கள்... இது பெருமையில்லையா"

திருநாவுக்கரசு சைக்கிள் கடைக்காரனுக்குப் பத்து ரூபாவைக் கொடுத்துவிட்டு அவனது முகத்தைப் பார்க்கிறார்... சைக்கிள்

கடைக்காரன் எதுவுமே பேசவில்லை.

மூவரும் சேர்ந்து திரும்பவும் மரக்குற்றியைச் சைக்கிளில் ஏற்றுகிறார்கள். வாளால் அரியப்பட்ட பகுதியை "கரியலில்" பக்குவமாக வைத்து, சமநிலை பார்த்து திருநாவுக்கரசு கட்டுகிறார்.

மரக்குற்றியை மார்போடு சரித்து வலது கையால் மரக்குற்றியை அணைத்துப் பிடித்து, இடது கையால் சைக்கிள் 'ஹான்டிலை' பிடித்தபடி உருட்ட ஆரம்பிக்கிறார் திருநாவுக்கரசு. இந்த பாலத்தடியில் வழமையாகவே இவர் சைக்கிளை உருட்டித்தான் செல்வார். மேடு பள்ளங்களுக்கு விலத்தினால் வருகின்ற வாகனங்களில் முட்ட வேண்டி வரும். வாகனங்களில் விலத்தினால், கிடங்குகளில் இடறுப்பட வேண்டி வரும்... பெருங் கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காகச் சிறு கஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறார் திருநாவுக்கரசு.

திருநாவுக்கரசுவுக்குப் பக்கத்தில் சைக்கிளை உருட்டியபடி நடக்கிறார் இரத்தினம்.

வட கிழக்குத் திசையிலிருந்து தென்மேற்குத் திரையாக 'ஹெலி' ஒன்று செல்கிறது... இருவரும் தலையை நிமிர்த்தி 'ஹெலி'யைப் பார்க்கின்றனர். "இண்டைக்கு ஹெலி ஓட்டம் கூடவாயிருக்கு... காலமை ஒரு 'பொம்மரும்' உந்தப் பக்கம் போனது... ஏதோ பிரச்சனை இருக்கு..." இரத்தினம் தனது ஊகிப்பைக் கூறுகின்றார். இரத்தினத்தின் மனம் இலோசாகச் சஞ்சலப்படுவதைத் திருநாவுக்கரசு உணர்ந்து கொண்டு தனக்குள் சிரிக்கிறார்.

திருநாவுக்கரசு மிகவும் நிதானமானவர். எந்த நிலையிலும் பதற்றப்பட்டுக் கொள்ளமாட்டார். இளவாலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பின் தேங்காய் வியாபாரம் செய்து, மரக்கறி வியாபாரம் செய்து கூலிவேலை செய்து... கடைசியாக விறகு கட்டத் தொடங்கினார். விறகு கட்டத் தொடங்கியபோது பலர் பலவாறு கூறினர்... அவர் எதையுமே சட்டை செய்யவில்லை! எதற்குமே

சிரிப்பார்... பார்ப்பவர்களுக்கு அந்தச் சிரிப்பு வெகுளித்தனமாகவே தெரியும்... ஆனால் அந்தச் சிரிப்புக்குள் அவரது முடிவுகள் கருக்கட்டியிருக்கும்.

கண்டி றோட்டுடன் தனங்கிளப்பு றோட்டுச் சந்திக்கின்ற சந்திக்கு வந்து விட்டனர். இரத்தினத்தின் உதவியோடு சைக்கிளில் ஏறி ஓட ஆரம்பிக்கின்றார் திருநாவுக்கரசு.

இரத்தினம் அவருக்காக சைக்கிளில் மிக மெதுவாக ஓடிக்கொண்டிருக்கிறார்.

"இளவாலையிலை இருந்து வந்த சுவாமியார் ஒருவரை போனமாதம் சந்திச்சனான் எங்கடை வீடு வாசலெல்லாம் காடாய்க் கிடக்காம்..." இரத்தினம் கூறுகின்றார்.

இருவரும் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இராணுவம் இளவாலையை ஆக்கிரமித்தபோது... மக்களோடு மக்களாய் இவர்களும் அங்கிருந்து புறப்பட்டு... சண்டிலிப்பாய் மகா வித்தியாலயத்தில் சில நாட்கள் தங்கி... அங்கிருந்து புறப்பட்டு வந்து மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் சில நாள் தங்கி...

அங்கிருந்து திருநாவுக்கரசு குடும்பம் செம்மணி வீதியிலுள்ள வீட்டுக்கு வந்தனர். இரத்தினம் குடும்பம் நுணாவிலில் ஒரு வீட்டை எடுத்துக் கொண்டனர்.

"தொழிலில்லாமல் எவளவு காலத்துக்குச் சீவிக்கிறது. ஏதாலும் தொழில் செய்யப்பார்..." திருநாவுக்கரசு கேட்கிறார்.

"என்ன வேலை செய்யிறது..."

"மனமிருந்தால் எந்த வேலையையும் செய்யலாம்."

"உன்னைப் போல விறகு கட்டச் சொல்லுறியே..."
"கட்டினால் என்ன..."

“இளவாலையிலை இருக்கையுக்கை என்ன மாதிரி இருந்தனி.. இப்ப என்ன மாதிரி மாறிவிட்டாய்... உப்பிடி என்னையும் வரசொல்லுறியே...”

“எந்தத் தொழிலையும் மன நிறைவோடு செய்தால் அதிலை ஒரு சுகத்தைக் காணலாம்...”

இரத்தினம் எதுவுமே பேசவில்லை.

இளவாலையில் திருநாவுக்கரசு இராச வாழ்க்கை வாழாவிட்டாலும் அடக்கமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்தவரென்று நாக்குப் புரளாமல் கூறலாம்...

கட்டையாக வெட்டப்பட்டு, நடுவகிடிட்ட தலை, மூக்கடியில் விரிந்து கடைவாயடியில் கம்பிபோல் சுருங்கிய அளவான மீசை, அளவான உயரம், அதற்கேற்ற உடற்கட்டு, மடித்து விடாத நீளக்கை சேட், தடித்த பிறேமுடைய கண்ணாடி... றலி சைக்கிள்... சனசமூக நிலையம், ஆலயம், பாடசாலை அபிவிருத்திச் சபை... சகலத்திலும் அங்கத்துவம்... பதவிகள்...

இப்படி வாழ்ந்தவர் திருநாவுக்கரசு... இன்று ...

“உனக்குச் சொன்னாலென்ன... எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு... வீட்டிலை பெத்த பிள்ளையள் மதிக்கிறதில்லை... கட்டின பெண்சாதி மதிக்கிறாளில்லை... காலையிலை வெளிக்கிட்டால் இருட்டுப்பட்டு எல்லோரும் படுத்தாப் பிறகுதான் வீடு... அலுப்பெண்டு வீட்டிலை நிண்டால் சண்டை... அரிசிக்குக் காசு... மீனுக்குக் காசு... உப்புக்குக் காசெண்டால் நான் எங்கை போறது... என்னத்தைச் செய்கிறது...” இரத்தினம் மனம் விட்டு கூறுகிறார்.

இரத்தினத்தின் குடும்ப ஒட்டுறவைப் பற்றி திருநாவுக்கரசு தீர்மானித்துக் கொள்கிறார்.

தென்மேற்குப பக்கமாகச் சென்ற ஹெலி இப்போது தென்மேற்குத் திசையிலிருந்து வட கிழக்குப் பக்கமாகச் சென்று கொண்டிருக்கின்றது.

இருவரும் கைடிதடிச் சந்தியையும் தாண்டி நாவற்குழிச் சந்தியையும் தாண்டி விட்டனர்.

நெல் சேமித்து வைக்கும் அந்தக் கட்டிடம் தலைவிரி கோலமாய் கிடக்கின்றது.

"இதிலை தான் 'சுப்ப சொனிக்' குண்டு போட்டது.. ஞாபமிருக்கே.." திருநாவுக்கரசு கேட்கிறார்.

"ஓமோம் நல்ல ஞாபகம்... சுப்ப சொனிக் இரண்டு குண்டுகள் போட்டு.. ஒண்டு இதிலை விழுந்தது... ஒண்டு வீட்டுக்குப் பக்கத்திலை விழுந்தது... வீட்டிலை இருந்ததுகள் செத்தது..."

"பாக்கிற இடமெல்லாம் அகதியளும்... இடிஞ்ச கட்டிடங்களும், குண்டு விழுந்த இடங்களும் செத்துப்போன பொடியங்களின்ரை படங்களும்... இதுகளுக்கு மத்தியிலைதான் எங்கடை வாழ்க்கை நடந்து கொண்டிருக்கு..."

நாவற்குழிப் பாலத்திற்கு முதல் வருகின்ற சிறிய வளைவு... சில வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தில் இலங்கை இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர் அவர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி வீதி ஓரத்தில் சரித்து நட்ட ஒன்றரை அடி நீளமான தண்டவாளத் துண்டுகள் இன்னமும் அப்படியே கிடக்கின்றன.

அந்த இடத்தையும் அவர்கள் தாண்டிவிட்டனர்... அடுத்து நாவற்குழிப் பாலம்...

நீர் நின்று வற்றிய நிலம் வரண்டு, கீலங் கீலமாக வெடித்துக் கிளம்பியதைப் போன்ற வீதி... அதிலும் இரண்டு வாகனங்கள் விலத்த முடியாத அளவிலான ஒடுங்கிய பாலம்... அந்தப் பாலத்தில் திரளி

மீன்குஞ்சு பிடிப்பவர்களின் கூட்டம்...

இந்தப் பாரத்தோடு பாலத்தைக் கடக்க முடியாதென்பதைத் தீர்மானித்துக் கொண்ட திருநாவுக்கரசு... பிறேக் பிடித்து சைக்கிளை நிறுத்தி, இறங்க முயற்சிக்கிறார்... அவதானமாக இறங்கி விட்டார்... திடீரென்று முன் சில்லுக் கிளம்பி... சைக்கிள் மரக்குற்றியுடன் சரிகிறது....

இரத்தினம் மிகவும் பயந்து போய்விட்டார்.

"இண்டையோடை இந்த வேலையை விட்டிடு..." இரத்தினம் கோபத்துடன் கூறுகிறார்.

கட்டை அவிழ்த்து, மரக்குற்றியையும், சைக்கிளையம் வேறாக்கி சைக்கிளை நிமிர்த்துகின்றனர். இனி மரக்குற்றியைத் தூக்கிச் சைக்கிள் 'கரியரில்' வைக்க வேண்டும். இன்னும் ஒருவராவது தேவை... எத்தனையோ மனிதர்கள் அவர்களை விலத்திச் செல்கின்றனர்... எல்லோரும் மனச்சாட்சியுள்ள மனிதர்களாக இருக்க வேண்டுமே!

சில நிமிடங்களின் பின்பு... ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற ஒருவர் அவர்களுக்கு உதவி செய்து, மீண்டும் மரக்குற்றி சைக்கிளில் ஏற்றப்படுகின்றது...

பாலத்தில் சைக்கிளை உருட்டி அதன் பின்பு சைக்கிளில் ஏறி ஓட ஆரம்பிக்கின்றார்.

"இரத்தினம்... நீ இப்ப சுருட்டுப் பத்திறதில்லையே" இரத்தினத்தார் அடிக்கடி சுருட்டுப் பத்துவதை திருநாவுக்கரசு அறிவார். நரம்பைப் பார்த்து புகையிலையைக் கிழித்து, வீடிப்பருமனில் சுருட்டைச் சுற்றி மிகவும் பக்குவமாய் பத்துவார் இரத்தினம். அவரது சேட்டையுள் புகையிலையும் தீப்பெட்டியும் எந்த நேரமும் இருக்கும்.

"அதெல்லாம் நிப்பாட்டியாச்சு..." இரத்தினத்தின் அவல வாழ்க்கையைப் பார்த்து திருநாவுக்கரசு மனத்துள் வேதனைப் பட்டுக் கொள்கிறார்.

"இவ்வளவு தூரம் வந்திட்டாய்... என்ரை வீட்டையும் பாத்திட்டுப் போவன்..."

'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்று எழுதப்பட்ட இந்த வளைவையும் தியாகி அன்னை பூபதியின் மிகப்பெரிய அந்தப் படத்தையும் தாண்டி... செம்மணி வீதியில் சைக்கிள் ஊர்ந்து கொண்டிருக்கின்றது.

திருநாவுக்கரசின் வீடு

வாசலில் மிகப் பெரியதொரு தீன் முருங்கை மரம். பத்தோ பதினைந்து பனை மட்டைகளால் செய்யப்பட்டதொரு படலை... இன்றோ நாளையோ விழப்போகின்ற பல்லைப் போல அது கிடக்கின்றது...

முருங்கை மரத்தோடு சைக்கிளைச் சாத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் திருநாவுக்கரசு. இரத்தினம் திருநாவுக்கரசின் வீட்டை நோட்டம் விடுகிறார்.

ஒரு பெரிய கொட்டிலும் ஒரு சிறிய கொட்டிலும்... சிறிய கொட்டிலின் முகட்டால் புகை கிளம்பிக் கொண்டிருப்பதால் அது குசினி என்பதை இரத்தினம் தீர்மானித்துக் கொள்கிறார். பெரிய கொட்டில்... அண்மையில் மேயப்பட்டிருக்கின்றது. செத்தைக் கிடுகுகள் ஓரளவு உக்கிவிட்டன... முன்பக்கத்தில் சிறியதொரு விறாந்தை வடிவிலான அமைப்பு அதன் பக்கங்களை மறைப்பதற்கு கிழிந்த பல துவாரங்களுடையதொரு சாக்குக் கட்டப்பட்டிருக்கின்றது. மிகவும் துப்புரவாக இருக்கின்றது. குத்தியிருந்து கை விளக்குமாறினால் கூட்டுவார்களே அப்படிக் கூட்டப்பட்ட துப்புரவு.

"மங்களம்..." திருநாவுக்கரசு சைக்கிளைச் சாத்திவிட்டு குரல் கொடுக்கின்றார்.

மங்களம் - அவரது மனைவி.

"அம்மா... அப்புச்சி வந்திட்டார்..." குசினிக்குள்ளிருந்து ஒரு குரல்...

"அப்புச்சி வந்திட்டார்..." கொட்டிலின் பின் புறத்திலிருந்து இன்னொரு குரல்...

இரத்தினத்தின் மனத்தளத்தில் ஒரு சிந்தனைச் சுளியடித்து...

திருநாவுக்கரசும், இரத்தினமும் முற்றத்துக்கு வருகின்றனர் புள்ளை அப்புச்சிக்குத் தேத்தண்ணி போடு" குசினிக்குள்ளிலிருந்த தனது மகளுக்கு கூறியபடி வருகின்றாள் மங்களம். வந்தவள் இரத்தினத்தைக் காண்கிறாள்.

'இரத்தினண்ணை வாருங்கோ...' புள்ளை இரத்தினம் மாமாவும் வந்திருக்கிறார். அவருக்கும் தேத்தண்ணி போடு"

"அப்புச்சி... இண்டைக்கு நான் மீனும் சோறும் சாப்பிட்டனான்.. அப்புச்சி... நான் இண்டைக்கு மீனும் சோறும்..." திருநாவுக்கரசரின் இளையவள் திருநாவுக்கரசின் கால்களைக் கட்டிப் பிடித்தபடி கீச்சுக் குரலில் திரும்பக்கூறுகிறாள்... திருநாவுக்கரசும், மங்களமும் சிரிக்கின்றனர்...

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி அவரது அதயப் பொக்கணையைக் கலக்குகின்றது...! அப்புச்சி நான் மீனும் சோறும்.." அந்தக் கீச்சுக்குரல் பெருநாதமாய் இரத்தினத்தின் செவிப்பறையை அதிர வைக்கிறது..."

திருநாவுக்கரசு வியர்வையால் நனைந்து போயிருந்த சேட்டைக் கழட்டிக் கொண்டு பெரிய கொட்டிலுக்குள் செல்கிறார்... அவருக்குப் பின்னால் சென்ற மங்களம்...

இடுப்பில் செருகியிருந்த சீலையின் முந்தானையை இழுத்தெடுத்து... துடைப்பம் போல் மடித்து... திருநாவுக்கரசின் முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைக்கின்றாள்... ஓலைக் குடிசைக்குள் ஒல்லித் தேங்காய் வாழ்க்கை... அதற்குள் இப்படியொரு பாசம்... உறவு...!

கிழிந்துபோன சாக்குத் துவாரத்தினூடாக... அந்தக் காட்சி..!..? இரத்தினத்தின் குடும்ப வாழ்க்கை சிரட்டைத் தணலாய் அவர் நெஞ்சைக் சுடுகின்றது!

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி இதயப் பொக்கணையைக் கலக்கி இப்போது உடலிலுள்ள அத்தனை நரம்புகளையும் ஊடறுத்து வருகின்றது...!

திருநாவுக்கரசு வெளியே வருகின்றார்.

"என்ன இரத்தினம் கடுமையாக யோசினை..."

"ஒண்டுமில்லை"

"நீ என்ன யோசிக்கிறாயெண்டு எனக்குத் தெரியும் இரத்தினம்" திருநாவுக்கரசின் ஆத்மாவிலிருந்து வார்த்தைகள் ஜனனிக்கின்றன...

"மனிசன்ரை புற அழகு காலத்துக்குக் காலம் மாறும்... அதைப் பாதுகாக்கேலாது... ஆனால் அக அழகு... அதை மாறாமல் பாதுகாக்கலாம்...

நீயும் நானும் ஒரே பிரச்சனைக்குள்ளை தான் வாழ்றம்...

... எங்கை பாத்தாலம் அகதியள்...

எங்கை பாத்தாலும் குண்டு விழுந்து சிதறின கட்டிடங்கள்...

எதைப்பார்த்தாலும் குண்டு பட்ட காயங்கள்.

...வீதிக்குவீதி... மதிலுக்கு மதில்... செத்துப்போன புள்ளையளின்ரை படங்கள்...

...இதுக்குள்ளை தான் நாங்கள் வாழ்றம்..

...இதுகளுக்கூடாகத்தான் நாங்கள் வாழ வேண்டியிருக்கு... முடிஞ்சது முடிஞ்சதுதான்... அதுகளை நினைச்சு ஆவலாதிப் பகிறதிலை அர்த்தமில்லை...

...குறுணிக்கல்லை கண்ணுக்குக் கிட்டப் புடிச்சுப் பார்த்தால் அது உலகத்தை மறைக்கும்... பயங்கரமாக இருக்கும் அதையே, கண்ணுக்கு எட்டப் புடிச்சுப் பார்த்தால் அது குறுணிக்கல்தான் எண்டது தெரியும்...

...நான் குறுணிக்கல்லை, குறுணிக்கல்லாகவே பாக்கிறன்.

நீ குறுணிக்கல்லை... பாறாங் கல்லாய்ப் பாக்கிறாய்...

...அவ்வளவுதான்! திருநாவுக்கரசின் பேச்சுக்கள் இரத்தினத்தின் மனக்கிணற்றுக்குள் எதிரொலிக்கின்றன.

ஈழநாதம் 19.02.1995

**12**

# விபச்சாரங்கள்

முன்பெல்லாம் கமலாவைப் போகவிட்டு, நக்கலடித்துச் சிரிப்பார்கள், இப்போது அவளுக்குப் கேட்கக் கூடியதாகவே நக்கலடிக்கின்றனர்.

இவளது அப்பன் முருகமூர்த்தி பழுத்த சைவம், அவனது இரத்தத்தில் பிறந்த இவள் கமலா இப்படி... இந்த அந்தேனியார் தேவாலயத்துள் தஞ்சம் கிடக்கிறாள். கிறிஸ்தவ முறைப்படி ஞணஸ்தானம் பெற்று மதமாற்றம் செய்து கொண்டவளுமல்ல!

முப்பத்தைந்து வயது கறுத்த மெல்லிய தோற்றம், கபால ஓட்டின் கண்குழிக்குள் வெறும் தோற்புரையில் சுழல்கின்ற பஞ்சடைந்த கண்கள், வலது கை மணிக்கட்டில் நான்கோ ஐந்து நேர்த்திக்கயிறுகள். ஒரு பெண்ணிடம் ஆகக்குறைந்தது தோடாவது இருக்கும். இவள் காதுகள் வெறுமையாகவே கிடக்கின்றன... ஒரு கறுப்புப் பாவடை, வெள்ளைச் சேட்... மிகவும் கட்டையான கருண்ட தலைமயிரைச் சேர்த்துப் பிடித்து கட்டியிருப்பாள்... இதுதான் அவளது கோலம்.

இவள் தனது இருபத்தைந்தாவது வயதில் பாலன் என்பவனைக் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டாள். நண்டும் குஞ்சும் போல் ஆறு பிள்ளைகள்... மூத்தவளுக்குப் பத்து வயது, இளையவளுக்கு இரண்டு வயது.

சென்ற ஆண்டு சாவச்சேரிப் பகுதியில் பேராளிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நடந்த யுத்தத்தில், 'மல்ரிபரல்' ஷெல் குண்டுகளுக்கு இரையான எண்ணுக்கணக்கற்ற பொதுமக்களில் பாலனும் ஒருவன். முன்பெல்லாம் வறுமையிலும், செம்மையாக நெற்றி நிறைந்த குங்குமப் பொட்டு வைத்திருப்பாள். இப்போது அவளின் நெற்றி 'முற்றவெளி போல்' கிடக்கின்றது.

வறுமை வெக்கையில் வறுக்கப்பட்டு இதயம் கருகி, உடல் வாடி, எலும்புகள் புடைத்து நிற்கின்ற பட்டமரமான அவளது உடலை ஸ்பரிசிக்கச் சில கடுவன்கள் இருக்கின்றன...! இரவோடு வந்து இரவோடு செல்கின்ற அந்தக் 'கடுவன்களின் பெயர்களும் இலேசாக முணுமுணுக்கப்படுகின்றன. ஆனால், அவர்களை யாருமே குற்றவாளி களாக்கி விடவில்லை.

கற்பென்றால் பெண்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்ற எண்ணமோ, என்னவோ!

தினசரி ஐந்து மணிக்கு இந்த அந்தோனியார் தேவாயத்தில் பூஜை ஒப்புக் கொடுக்கப்படும். கமலா சரியாக நாலுமணிக்கு ஆலயத்திற்கு வந்து விடுவாள். ஏறத்தாழ நூறடி நீளமும், எழுபதடி அகலமும் கொண்ட இந்த ஆலயத்தின் உட்பகுதியைத் தனித்து நின்று கூட்டுவாள். உடல் வியர்த்து முதுகுப்புறச் சட்டைத்துணி வியர்வையில் ஊறி ஒட்டிப்பிரியும்.

கூட்டி முடிந்தவுடன் ஆலய 'பைப்பில்' முகத்தைக் கழுவிவிட்டு பலிபீடத்தை அண்மித்துள்ள தூணோடு அமர்ந்து கொள்வாள். பூஜை முடிந்து, சகலரும் வெளியேறிய பின்பு தான் கமலா வெளியேறுவாள். அதன்பின்பும் ஆலயத்தின் பிரதான வாசலை

அண்மித்து அமைந்துள்ள ஒரு சிலை. ஏறத்தாழ பத்தடி உயரமான சிலுவையில் அறையப்பட்ட நிலையிலுள்ள யேசுவின் சிலை... முள்முடி தரித்த, இரத்தம் தோய்ந்த, முள்ளந்தண்டோடு வயிற்றுத் தோல் ஒட்டிப்போன நிலையிலுள்ள சிலை...!

யேசு அனைத்து மக்களின் ஆன்மீக விடுதலைக்காகத் தன்னைத் தியாகம் செய்தார்... ஆட்சியாளர்கள் அவரை நையாண்டி செய்து சிலுவையில் அறைந்து கொன்றனர். மரணத்தைக் கண்டு அவர் அஞ்சவில்லை...

மரணத்தின் பின்புதான் அவர் மகானாக்கப்பட்டார்...! அவரது போதனைகள் பூசிக்கப்பட்டன.

அந்த யேசுமகானின் சிலைக்கு முன்னால் சில நிமிடங்கள் முழந்தாளிட்டு இருப்பாள்... அதன்பின் அந்தச் சிலுவையின் கால்களை முத்தமிட்டுவிட்டுப் புறப்படுவாள். தனது துன்பத்தை துன்பப்பட்ட யேசுவால் உணரமுடியும் என்று கருதினாளோ - என்னவோ.

ஆலயத்துள் தனது துன்பங்களையெல்லாம் ஒப்புக் கொடுத்துக் கற்பனையான திருப்தியுடன் வெளியே வரும் அவள் அச்சத்தோடு அந்த பஸ்தரிப்பு நிலையத்தைப் பார்ப்பாள். அந்த பஸ்தரிப்பு நிலையத்துள் சில வாலிபர்கள் நிற்பார்கள்... கமலாவின் செவிப்பறையில் குருதி கசியுமளவிற்கு அவளை நக்கலடிப்பார்கள்...! கிழமைகளில் நான்கு முறையாவது இந்த நக்கலடிப்பு நடக்கும்.

முதலில் பஸ்தரிப்பு நிலையத்தைப் பார்ப்பாள், அடுத்து பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்னாலுள்ள சிவராசாக் கிளாக்கரின் கடையைப் பார்ப்பாள்... கடனுக்குச் சாமான்கள் கேட்க வேண்டுமே என்ற அச்சம்! மாதத்தில் ஒருமுறையோ, இரண்டு முறைதான் அவளது கைக்குக் காசு வரும்... ஏனைய நாட்கள் முழுவதும் கடன்தான்... தினசரி கடன்கேட்க முடியுமா?

தினசரி கடன் கேட்கலாம்... அதற்குமொரு 'அந்தஸ்து' வேண்டும்...! அதுதான் இவளிடம் இல்லையே!

இங்குள்ள சகல கடைக்காரகளாலும் இவளுக்குக் கடன் கொடுப்பது மறுக்கப்பட்டு, இறுதியில் சிவராசாக் கிளாக்கரின் கடைக்கு வந்தாள்.

பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள இளசுகளின் நக்கலைக் கேட்டு, அதன்பின்பு சிவராசாக் கிளாக்கரின் கடையில் பொருட்களையும் பெற்றுக் கொண்டு, வீட்டுக்கு வந்தால்... துணையற்ற வாழ்க்கை, பாதுகாப்பற்ற வீடு, இராணுவத்தினரின் நடமாட்டம்... சிலவேளைகளில் 'கடுவன்கள்' வந்துவிடுவார்களோ என்ற அச்சம்! நாளைய உணவுக்கான ஏக்கம்...!

அச்சமும், துயரமும் அச்சாணியாகிவிட்ட வாழ்க்கை... அதில், அந்தோனியார் ஆலயத்துள் தரிக்கின்ற சிலமணி நேரம் மட்டும்தான்... 'மாயமான்' மயக்கமான ஒரு ஆறுதல், அவளுக்கு... அந்த ஆறுதலும் ஆலய வாசலோடு அஸ்தமனமாகிவிடும்.

சிவராசாக் கிளாக்கர் வித்தியாசமானவர்.

அவருக்கிப்போது அறுபத்திரண்டு வயது, முப்பத்தைந்து வருடங்கள் கல்விப்புலத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அதுமட்டுமல்ல, சிறந்த வாசகன், பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் நேரத்தை வீணடிக்கக்கூடாதென்பதற்காகவே இந்தக் கடையை போடவேண்டும் என்பது அவரது நீண்டகாலத் திட்டம். ஆனால் அவரது திட்டத்திற்கு இந்தப் பகுதி ஒத்து வராததால் பலசரக்குக் கடையைப் போட்டுக் கொண்டார். கடையிலும் புத்தகமும் கையுமாகவே நிற்பார். இலக்கிய அரசியல் விமர்சனங்களில் கைதேர்ந்தவர். பிரச்சினையின் ஆணிவேரைப் பற்றிநின்று விமர்சிப்பது, வாதிடுவதுதான் இவரிடமுள்ள தனிச்சிறப்பு! நூறுபேர் எதிர்த்து நின்றாலும் தனித்து நின்று வாதாடுவார்.

நமது மண்ணில் நடக்கின்ற யுத்தத்தினால் சிவராசாக் கிளாக்கர் பெருமளவு இழப்புக்களைச் சம்பாதித்தவர். இழப்புக்களைச் சம்பாதித்தவர்கள். யாரோ ஒரு பகுதியை நிச்சயமாக திட்டுவார்கள். ஆனால் சிவராசாக் கிளாக்கர்... "நாக்குப் புரளாமல்" நீதியைக் கூறுவார்.

கமலா நடத்தை கெட்டவள்தான். ஆனால் அவள் உடலிச்சையால் நடத்தை கெட்டவளல்ல... இந்தச் சமூகத்தின் இயக்கக் கூறுகளின் உந்தல்களே அவளை இந்தப் பாதையில் வழி நடத்தியிருக்கின்றன என்பதே சிவராசாக் கிளாக்கரின் முடிவு.

"மலை நாட்டிலை... பனிக்குளிருக்கையும், அட்டைக் கடியுக்கையும்... சொற்ப சம்பளத்துக்காகக் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்துகினந்தானே... அதைவிட கமலாவுக்கு என்ன கஷ்டம் வந்திட்டுது..." இப்படி யாரோ ஒருத்தி சிவராசாக் கிளாக்கரிடம் கூறியதற்கு.

"யாராவது முன்வந்து அவளுக்கு உதவி செய்து அவளது இயல்புக்கேற்றதொரு வழியைக் காட்டுங்கோ... நிச்சயமாக அவள் திருந்துவாள்" இப்படித்தான் அவர் பதில் கூறினார்.

"கமலா... பக்கத்து மில்லிலை வேலையிருக்காம், செய்யிறியா..." என்று ஒருநாள் சிவராசாக் கிளாக்கர் கமலாவிடம் கேட்டதற்கு.

சில நிமிடங்கள் மௌனமாக நின்று... அவள் அழுதுவிட்டு...

"ஐயா... பாரமான வேலை செய்தால் என்ரை வலது கை தோள் மூட்டோடு கழண்டு போகிடும்" என்று அவள் கூறினாள். சிவராசாக் கிளாக்கர் திகைத்துப் போய்விட்டார்.

"பெரியாஸ்பத்திரியிலை காட்டினியா.."

"எனக்கு இது சின்ன வயதிலை ஏற்பட்டதுங்க... சத்தான

சாப்பாடு சாப்பிட்டு படுக்கையிலை இருந்தால் எலும்பு வளர்ந்து பொருந்துமெண்டு சொன்னவையாம்..."

"அப்படிச் செய்திருக்கலாந்தானே.."

"பெத்ததுகள் புள்ளைக்குத் துரோகம் செய்யுங்களா... வறுமை, கஷ்டம்... பசிக்குச் சாப்பிட முடியாத நிலை... அம்மா வீடுவீடாய் மாவிடிக்கப் போவா... நான் அம்மாவோடை மா அரிக்கப் போவன்... மாவிடிக்கப்போனால்... எத்தினையோ வேலையள் சொல்லுவினம்... செய்யத்தான் வேணும்... இதுக்குப் பிறகு கை எப்படியுங்கை சுகம் வரும்..." அவளது வார்த்தையில் துயரம் கசிந்தது...

சிவராசாக் கிளாக்கர் அதற்கு மேல் எதுவும் கதைக்கவில்லை.

காய்த்தோய்ந்த பப்பாசி மரத்தில் மொய்த்திருக்கும் 'வம்புப் பிஞ்சுகள்' போல் அந்த பஸ்தரிப்பு நிலையத்தில் 'வம்பளக்கும்' அந்த வாலிபர்கள் கமலாவைத் தினசரி நக்கலடிப்பதைச் சிவராசாக் கிளாக்கர் நேரடியாகவே கண்டிருக்கிறார். ஆனால், இதுவரை அதைப்பற்றி விசாரணை செய்ததே இல்லை.

ஊரிலுள்ளவர்களில் அவளைத் தெரிந்த அனைவருமே அவளைப்பற்றி விமர்சிக்கும்போது... அந்த நாலைந்து வாலிபர்களுக்கு மட்டும் நியாயம் கூறி என்ன பலன் என்று நினைத்துக் கொண்டு மௌனமாகி விட்டார்.

கோவிலில் பூஜை முடிந்து சில நிமிடங்களில் கமலா சிவராசாக் கிளாக்கரின் கடைக்கு வருவாள். வந்து தூணோடு மௌனமாக நிற்பாள். சிவராசாக் கிளாக்கர் கதைக்கும் வரை அவள் மௌனமாகவே நிற்பாள்.

"கமலாவுக்கு என்ன வேணும்..." இப்படி அவர் கேட்டதான் பின்புதான்,

“காசில்லை... கடனுக்கு... பாண், சீனி, தேயிலை வேணும்...” ஏன்று தனக்குத் தேவையானவற்றைக் கூறுவாள். சிவராசாக் கிளாக்கர் எந்த மறுப்புமின்றி கேட்பதைக் கொடுத்து விடுவார். காசு கிடைக்கும்போது கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற யோக்கியமும் அவளிடமுண்டு.

பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று கமலாவை நக்கல் செய்பவர்கள் ஒருநாள் அளவுக்கு மீறி நக்கல் செய்துவிட்டனர். வாயில்லாப் பூச்சியான கமலா, சிவராசாக் கிளாக்கரின் கடை விறாந்தையில் வந்து நின்று அழுதாள்.

சிவராசாக் கிளாக்கர் சம்பவத்தை ஊகித்துக் கொண்டு அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

“கமலா... யேசு வாழ்ந்த காலத்திலை இப்பிடி ஒரு சம்பவம் நடந்ததாம்... ஒருத்தி கெட்டுப் போய்விட்டாள், அவளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென யேசுவிடம் வந்து முறையிட்டார் களாம். அதற்கு யேசு என்ன சொன்னார். தெரியுமா?

உங்களில் எவனொருவன் குற்றமற்றவனாக இருக்கிறானோ... அவனே முதற் கல்லை எடுத்து எறியக் கடவான்... என்று கூறினாராம், அங்கு முறையீடு செய்ய வந்த ஒருவனாலும் கல்லைத் தொடமுடியாமல் போய்விட்டது... தாங்களும் குற்றவாளிகள்தான் என்பதை ஒப்புக் கொண்டு மௌனமாக நின்றனர்.

யேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்களிடம் குற்றத்தை ஒப்புக் கொள்கின்ற ‘பெரும்பண்பு’ இருந்திருக்கின்றது. இந்தக் காலத்திலை குற்றத்தை ஒப்புக் கொள்கிற பண்பு கூட இல்லாமல் போய்விட்டது... ஒவ்வொருவனும் தன்னை ‘யோக்கியவானாகக்’ கருதிக் கொண்டு ஏனைய அத்தனை பேரையும் குற்றவாளியாக்குவான்... இதுகளைக் கவனத்திலை எடுத்தால் வாழேலாது...” சிவராசாக் கிளாக்கர் மிகவும் அர்த்த புஷ்டியாகவும், அவளது மனத்தை நோகப்பண்ணாத வகையிலும் இப்படிக் கூறினார். சிவராசாக் கிளாக்கரின் பேச்சு

கமலாவுக்கு ஆறுதலை கொடுத்திருக்க வேண்டும்... கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"கமலா... நீ.. கோயில் சுவாமியாரிட்டை உன்ரை கஷ்டத்தைக் கூறி உதவி கேட்டுபார்... அவர் உதவி செய்வார்." சிவராசாக் கிளாக்கர் ஆலோசனை வழங்கினார்.

"என்னை இந்தக் கோயிலுக்கை அனுமதிக்க வேண்டா மெண்டு எத்தினையோ பேர் சுவாமியாரிட்டை முறைப்பாடு செய்திருக்கினம்... அப்பிடியிருந்தும் சுவாமியார் இதுவரையிலை என்னோடை ஒரு வார்த்தை கூட கதைச்சதில்லை... அப்படிப்பட்ட பெரிய மனிசனுக்கு நான் கரைச்சலைக் குடுக்கக் கூடாது..." இப்படிக் கூறிய கமலாவைச் சில விநாடிகள் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற சிவராசாக் கிளாக்கர்... உதடுகள் பிரியாத நிலையில் மௌனமாகச் சிரித்தார்.

"என்னையா சிரிக்கிறியள்" அவள் கேட்டாள். 'தன்னை குற்றவாளியாக்கி, ஏனையோரை நிரபராதி ஆக்குகின்ற பண்பு... வாழ்க்கையில் மிக நொந்து போனவர்களிடந்தான் ஏற்படும்...' என்று கூற நினைத்தவர் அதைக் கூறாமல் மீண்டும் சிரித்துக் கொள்கிறார்.

நிலாவரைக் கிணறு போன்ற ஆழம் காணமுடியாத அவரின் சிரிப்பின் அர்த்தத்தை அப்பாவியான கமலாவால் புரிந்து கொள்ள முடியுமா?

சுவாமியார் கமலாவைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்தார். நொந்து போனவர்களுடனேயே பெருமளவு பழகி அனுபவங்களைப் பெற்றுள்ள அந்தச் சுவாமியாரின் மனதிலும் கமலா நிரபராதியாகவே காட்சி கொடுத்தாள்!

'சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் எல்லோரும் வாருங்கள்' ஆலய முன் மண்டபக் 'கேற்றில்' இந்த வாக்கியம் கம்பிகளை வளைத்துப் பெரியளவில் எழுதப்பட்டுள்ளது. அந்தக் 'கேற்றைத் தாண்டிக் கால் வைத்தால் பலிபீடமும் யேசுவின்

சிலையுந்தான் தெரியும்... எங்களை அறியாமலேயே ஏதோ ஒருவித உணர்வு நமது பாதத்தை ஊடறுத்து உடமெல்லாம் பரவி... இதயத்தை நிறைத்து... மேலோங்கி... நெருப்பில் மெழுகு உருகிக் கரைவது போல் நமது இதயத்திலுள்ள துயரங்கள் யாவும் கரைந்து இதயம் வெறுமையாவது போன்றதொரு உணர்வு அந்த அந்தோனியார் தேவாலயத்துள் ஏற்படுகின்றது என்ற பேச்சில் உண்மை இல்லாமலில்லை!

ஷெல் குண்டுக்கு இலக்காகி சிதறு தேங்காயாகிவிட்ட ஒரு வீடு, இங்கு தான் கமலாவும் பிள்ளைகளும் குடியிருக்கின்றனர்.

ஷெல் குண்டு விழுவதற்கு முன்பே இந்த மாடி வீட்டின் சொந்தக்காரர் இந்த மண்ணை விட்டு ஓடி வேறொரு நாட்டை 'இரவல் தாய் நாடாகக்' கொண்டு விட்டனர். இப்போதைக்குக் கமலாதான் வீட்டின் உரிமைக்காரி.

சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்வதற்கு முன் அவளுக்கென்றிருந்த இரண்டு பரப்புக் காணியில் போடப்பட்ட ஒரு கொட்டிலில் கமலாவின் குடும்பம் வாழ்ந்தது. அந்தக் காணியில் சிறியதொரு கடை, பத்தோ பதினைந்து கோழிகள்... இவ்வளவுதான் இவர்களின் பொருளாதார மூலதனம்!

ஆண்டிகளாய் வாழ்ந்தவர்கள் ஓட்டாண்டிகளாக நின்றனர்... கோவணத் துண்டோடு படுத்திருப்பவனால் இழுத்துப் போர்க்க முடியுமா? வாழ்க்கைச் சக்கரம் கறள் பிடித்து உருள மறுத்தது!... 'தொப்புள்' கொடி உறவுகளான அவளது பிள்ளைகளின் பட்டினி வெக்கையில் பெண்மையின் பண்பாடுகள் தானாகவே 'பாடையில்' ஏறிக் குந்திவிட... உணர்வுகள் மரித்த வெறும் இதயத்துடிப்போடு அவள் தனது உடலை 'இருளுக்குள் மறைக்கத்' துணிந்தாள்! அவளது நிர்வாணம் வியாபாரமானது.

அவளின் நிர்வாணம்... அன்றாட அவர்களின் வாழ்க்கையின் நிவாரணமானது!...

அந்த பஸ்தரிப்பு நிலையத்தில் மாலை வேளைகளில் பொழுது போக்காட்டலுக்காக வருகின்ற அந்த வாலிபர்கள் 'பச்சையாகவே' அவளை நக்கலடிப்பார்கள்... ஆனால், அவள் ஒரு நாளாவது இந்த வாலிபர்களைத் திரும்பிப் பார்த்ததோ அல்லது தன்னை நியாயப்படுத்தி 'கண்ணகியாகி விட முனைந்ததோ இல்லை!

அதே நேரத்தில் அந்தோனியார் ஆலயத்திற்கு நாளாந்தம் வராமல் போனதுமில்லை.

அன்றும் வழமை போல நாலுமணியளவில் ஆலயத்திற்கு வந்தாள். சுவாமியாரின் வாகனம் விடுகின்ற கொட்டில் கிடுகுகள் நீக்கப்பட்டு புதிய கிடுகுகளால் வேயப்பட்டிருந்தது. பிடுங்கப்பட்ட பழைய கிடுகுகளுக்குள் தெரிவு செய்து ஓரளவு நல்ல கிடுகுகளாகச் சிலவற்றை எடுத்துக் கட்டி வைத்தாள்.

இடிந்து கூரையற்ற அவளது வீட்டின் மேற்பகுதியை மறைத்துப் பார்க்கலாம் என்ற எண்ணம் அவளுக்கு.

பூசை முடிந்து கிடுகுக் கட்டைத் தலையில் வைத்தபடி அவள் புறப்பட்டாள். ஆலயத்தின் பிரதான வாசலைத் தாண்டி, பிரதான வீதியில் மிதந்தாள்...

பஸ்தரிப்பு நிலையத்துள் அந்த வாலிபர்கள்... நக்கல்!

"எல்லாருக்கும் விடிஞ்சாத்தான் தொழில்... சில பேருக்குப் பொழுதுபட்டால் தான் தொழில்" ஒருவன் கூறுகிறான்.

"எல்லாரும் வேலை வெட்டியெண்டு அலையிறாங்கள் இது... வீட்டோடை வேலை..." இரண்டாமவன் கூறுகிறான்.

ஆனால் அவளது மனம் அழுகின்றது!

ஒருவன் அவளது தலையில் கிடந்த கிடுகுக் கட்டைப் பிடித்து பின்பக்கமாக இலேசாக இழுத்தான்! கிடுகுக்கட்டு பின்புறமாகச் சரிய... அவள் விழுந்து... அவளுக்கு மேல் கிடுகுக்கட்டு விழுந்து...

அவளது வலதுகை தோள் மூட்டுடன் சுழன்று விட்டது!

கோவில் வாசலில் கச்சான் விற்கின்ற மூன்று கிழவிகளும், புகையிலை விற்கின்ற கிழவனும் ஓடிவந்து கிடுகுக் கட்டைத் தூக்கி அதன் பின்பு கமலாவைத் தூக்கி மதில் கரையோடு சாத்தி இருத்துகின்றனர்.

சிவராசாக் கிளாக்கரும் வந்து விட்டார்.

கமலாவின் முகமெல்லாம் வியர்த்து கண்கள் கலங்கி, உடமெல்லாம் பதற... வழமை போல் மிகவும் சிரமப்பட்டு தோற்புரையில் தொங்குகின்ற வலதுகையை, இடது கையால் தூக்கி... தோள்பட்டை எலும்பை உரிய இடத்தில் பொருத்திக் கொள்கிறாள்.!

சிவராசாக் கிளாக்கர் தனது கடைக்குள் இருந்த ஒரு சோடாப் போத்தலை எடுத்து வந்து கமலாவுக்குக் குடிக்கக் கொடுக்கிறார்.

"நீங்களும் ஒரு மனிசரா..." வலது கையிலுள்ள நான்கு விரல்களையும் மடித்து சுட்டு விரலை மட்டும் உருக்குக் கம்பி போல் நீட்டி... அந்த வாலிபர்களைப் பார்த்து சிவராசாக் கிளாக்கர் கேட்கிறார். அவரது முகத்தில் கோபத்தின் அனல்!

அந்த வாலிபர்கள் ஆளையாள் பார்த்து முழிக்கின்றனரே தவிர ஒருவராவது பேசவில்லை!

"டேய்... அவளை விபச்சாரி எண்டு சொல்ல உங்களுக்கு என்னடா யோக்கியதை இருக்கு.." கிளாக்கர் அந்த வாலிபர்களை நெருங்கி விட்டார்.

"கிளாக்கர் கதைக்கிறதை அளவோடை கதைக்க வேணும்..." அந்த வாலிபர்களில் ஒருவன் கூறுகிறான்!

"டேய்... நீங்கள் யோக்கியவான்களே... உங்கடை நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கோடா பாப்பம்..."

"கிளாக்கர்.. நீங்கள் வயதிலை மூத்த மனிசன்... கவனமாய் கதைக்க வேணும்..." ஒருவன் சேட் கையை இழுத்தபடி றோட்டில் இறங்குகிறான்.

கிளாக்கர் கலங்கவில்லை... சனங்கள் கூடிவிட்டனர்.

கமலா... அவளின் முகத்தில் வேதனை கசிந்து வழிகின்றது. தெருச் சண்டைக்கு, தான் கருப்பொருளாகி விட்டேனே என்ற வேதனை...! தட்டுத் தடுமாறி எழுப்பி கச்சான் விற்கின்ற கிழவிகளின் உதவியோடு கிடுகுக் கட்டைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பிக்கின்றாள்.

"கமலா மட்டுந்தான் விபசாரம் செய்யிறாளே... நீங்களும் தான்ரா செய்யிறியள்..." கிளாக்கர் இப்படிக் கூறியதும் அந்த வாலிபர்கள் மட்டுமல்ல அங்கு நின்ற அனைவருமே கிளாக்கரின் பேச்சின் அர்த்தம் புரியாமல் கிளாக்கரைக் கேள்விக் குறியோடு பார்க்கின்றனர்!...?

"எடேய்... எங்கடை மண்ணிலை இப்ப என்ன நடந்து கொண்டிருக்கு... நெருப்பாறு பாயுதடா... எங்கடை குடியிருப்பு களெல்லாம் காடாய் கிடக்கு... எங்கடை கல்விக் கூடங்கள் கற்குவியலாய் கிடக்கு... கோயில்கள் எல்லாம் கொட்டிண்டு போய்க் கிடக்கு... ஒரு பக்கம் பாத்தால் அகதியள்.. மற்றப்பக்கம் பாத்தால் எலும்புக் கூடுகள்...

கப்பல் வாழைக் குட்டியள் காத்துக்குச் சரியிறது போலை... எங்கடை உறவுகள்... பொடியளும், பொட்டையளும்... போட்டி போட்டு எங்கடை கண்ணுக்கு முன்னாலை மடியிதுகள்...

நீங்கள்...

மூக்கு முட்டச் சாப்பிட்டிட்டு... போறவாற பொடி பொட்டையாளை நக்கலடிக்கிறியள்.. இது என்னடா...?

... ஒவ்வொருத்தனும் உங்கடை நெஞ்சிலை கைவைச்சுச் சொல்லுங்கோ...

கமலா... பெண் ஒழுங்குமுறைக்கு மாறாய் செய்யிறது விபசாரத்தனம் எண்டால்... நாங்கள்... இன ஒழுங்கு முறைக்கு மாறாய் செய்யிறது இன விபசாரத்தனம் இல்லையா..." அங்கு நின்ற வாலிபர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கிய கிளாக்கர் இப்போது அங்கு நின்ற அனைவரோடு தன்னையும் சேர்த்து 'நாங்கள்' என்று அழைத்து கேள்வி வலையைப் பொதுவாக விரிக்கின்றார்.

கேள்வி வலைக்குள் அகப்பட்ட மனித மனச்சாட்சிகளின் துடிப்பு... பெரும் மௌனம்!

எங்கடை அரசியல் தலைவர்கள் என்ன செய்யிறாங்கள்... கொழும்புக்குப் போய் அங்கை... அவசர காலச்சட்ட நீடிப்புக்குக் கையை உயர்த்தி ஆதரிச்சுப் போட்டு... இஞ்சை வந்து... காணாமல் போற எங்கடை புள்ளையளுக்காக ஒப்பாரி வெச்சு கண்டனம் தெரிவிக்கிறது.

இது அரசியல் தலைவர்கள் செய்யிற 'அரசியல் விபச்சாரத்தனம்'.

கொழும்புக் கயித்துக்கும்... யாழ்ப்பாணக் கயித்துக்கும் முடிச்சுப் போட்டு... எங்களைப் பலகையாக்கி... சில 'அனாத ரட்சகர்கள்' ஊஞ்சல் ஆடுறாங்களே...

இதுவும் விபசாரத்தனந்தான்...!

...கமலா தன்ரை உடலை மட்டும் இருளுக்கை மறைச்சு விபசாரம் பண்ணுகிறாள். நாங்கள் எங்கடை இனத்தை இருளுக்கை மறைச்சு விபசாரம் பண்ணறம். சகலரது நாக்குகளும் வாய்க் குகைக்குள் செயலற்றுக் கிடக்கின்றன.

வீரசேகரி 31.03.2002

## கே. ஆர். டேவிட்டின் இலக்கிய ஆக்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வரலாறு அவளை தோற்றுவிட்டது<br>(வீரகேசரிப் பிரசுரம்) | நாவல் | 1976 |
| 2. | ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1987 |
| 3. | பாலைவனப் பயணிகள்<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 4. | வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 5. | ஒரு பிடி மண்<br>(மீரா வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 1994 |
| 6. | பாடுகள்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 7. | படகுகள் கரைசேருமா<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 8. | மண்ணின் முனகல்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 9. | சருகுகள்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 10. | காலத்தின் மௌனம்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |

... ஒவ்வொருத்தனும் உங்கடை நெஞ்சிலை கைவைச்சுச் சொல்லுங்கோ...

கமலா... பெண் ஒழுங்குமுறைக்கு மாறாய் செய்யிறது விபசாரத்தனம் எண்டால்... நாங்கள்... இன ஒழுங்கு முறைக்கு மாறாய் செய்யிறது இன விபசாரத்தனம் இல்லையா..." அங்கு நின்ற வாலிபர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கிய கிளாக்கர் இப்போது அங்கு நின்ற அனைவரோடு தன்னையும் சேர்த்து 'நாங்கள்' என்று அழைத்து கேள்வி வலையைப் பொதுவாக விரிக்கின்றார்.

கேள்வி வலைக்குள் அகப்பட்ட மனித மனச்சாட்சிகளின் துடிப்பு... பெரும் மௌனம்!

எங்கடை அரசியல் தலைவர்கள் என்ன செய்யிறாங்கள்... கொழும்புக்குப் போய் அங்கை... அவசர காலச்சட்ட நீடிப்புக்குக் கையை உயர்த்தி ஆதரிச்சுப் போட்டு... இஞ்சை வந்து... காணாமல் போற எங்கடை புள்ளையளுக்காக ஒப்பாரி வெச்சு கண்டனம் தெரிவிக்கிறது.

இது அரசியல் தலைவர்கள் செய்யிற 'அரசியல் விபச்சாரத்தனம்'.

கொழும்புக் கயித்துக்கும்... யாழ்ப்பாணக் கயித்துக்கும் முடிச்சுப் போட்டு... எங்களைப் பலகையாக்கி... சில 'அனாத ரட்சகர்கள்' ஊஞ்சல் ஆடுறாங்களே...


இதுவும் விபசாரத்தனந்தான்...!

...கமலா தன்ரை உடலை மட்டும் இருளுக்கை மறைச்சு விபசாரம் பண்ணுகிறாள். நாங்கள் எங்கடை இனத்தை இருளுக்கை மறைச்சு விபசாரம் பண்ணறம். சகலரது நாக்குகளும் வாய்க் குகைக்குள் செயலற்றுக் கிடக்கின்றன.

வீரசேகரி 31.03.2002

## கே. ஆர். டேவிட்டின் இலக்கிய ஆக்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வரலாறு அவளை தோற்றுவிட்டது<br>(வீரகேசரிப் பிரசுரம்) | நாவல் | 1976 |
| 2. | ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1987 |
| 3. | பாலைவனப் பயணிகள்<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 4. | வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 5. | ஒரு பிடி மண்<br>(மீரா வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 1994 |
| 6. | பாடுகள்<br>(கு. வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 7. | படகுகள் கரைசேருமா<br>(கு. வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 8. | மண்ணின் முனகல்<br>(கு. வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 9. | சருகுகள்<br>(கு. வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 10. | காலத்தின் மௌனம்<br>(கு. வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |



டேவிட் அவர்கள் சமூக வெப்பத்தால் ஏற்பட்ட கொப்புளக் குமுறல்களையே படைப்புகளாகத் தந்திருக்கின்றார். அவரின் மன அழுத்தங்களே அவரின் ஆக்கங்கள். அவர் பார்வையாளராக இருந்து கதை படைப்பதில்லை. பங்காளியாக இருந்தே கதை படைப்பவர்.

**சி. சிவஞானசுந்தரம்**
**- சிரித்திரன் ஆசிரியர் -**

ஒரு சிறுகதை எழுத்தாளராகவே தோற்றம் கொண்ட, கே.ஆர்.டேவிட் அவர்களின் முதல் நூல் ஒரு நாவல். "வரலாறு அவளைத் தோற்றுவிட்டது" என்னும் மலையக நாவல். வீரகேசரிப் பிரசுரமாக 1976 இல் வெளிவந்திருக்கின்றது. "உன்னைப்போல் அயலவனையும் நேசி" என்னும் வரம் பெற்ற மனம் கொண்ட டேவிட் அவர்கள் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் கண்டு குமுறும் மனம் கொண்டவராகவும் இருந்திருக்கிறார். அந்தக் குமுறல்கள்தான் சிறுகதைகளாக தோற்றம்பெற்றன. ஈரமற்ற நெஞ்சங்களில் இருந்து இலக்கியம் பிறப்பதில்லைதான்!. கே.ஆர்.டேவிட் என்கின்ற எழுத்தாளனது உள்ளத்தின் உள்ளடக்கம் சமூக உண்மைகளைப் பிரதிபலிக்கும் பொது உடமைக் கொள்கையாகும். ஆகவேதான் அவரது படைப்பின் உண்மையாகவும் அவை தோற்றம் கொள்கின்றன.

**தெளிவத்தை ஜோசப்**

**கு. வி. அச்சக வெளியீடு**

**கு. வி. அச்சகம்**
58, கிறீன் லேன், கொழும்பு – 13.
தொலைபேசி: 011-2330723, 011-4877984